கதாமணி பிரசுரம்



T08517
R003B02
T
8517

பதிப்பாசிரியர்
'துமிலன்'

ஜோதி நிலைய வெளியீடுகள்

	ரூ.	அ.
விஜயம் (வ. ரா. எழுதிய நாவல்)	3	8
அபலை (கதைகள்)	1	12
சினிமா (படங்களுடன்)	3	8
துருக்கி (அரசியல்)	1	0
ஹேமாங்கினி (சரத் சந்திரர்)	0	12
காணுமலே காதல் (கதைகள்)	1	12
ஸந்தியா (சரத் சந்திரர்)	1	8
ஸ்டர்லிங் நிதி (பொருளாதாரம்)	1	12
ராதையின் பிரார்த்தனை (நாவல்)	1	8
பசி (நாவல்)	2	8
மின்னும் நட்சத்திரம் (நாவல்)	2	0
அயர்லாந்து (அரசியல்)	1	12
பிரேத மனிதன் (நாவல்)	1	0

புதிய வெளியீடுகள்

	ரூ.	அ.
மலரும் மணமும் (பி. எஸ். ராமையா)	3	8
மூன்று கதைகள் (ஹங்கேரியக் கதை)	0	10
ஊர்வசி (நாடகம்) ந. சிதம்பரசுப்ரமண்யம்	2	8

சர்வ தேசக் கதைகள்

	ரூ.	அ.
காதற் கதை (இத்தாலியக் கதை)	0	8
வெற்றி (பிரஞ்சுக் கதை)	0	8
காதற் கீதம் (ரஷ்யக் கதை)	0	8
காளி (ஜெர்மன் கதை)	0	10
பெண் மனம் (ஸ்பானியக் கதை)	0	10
போலி (ஆங்கிலக் கதை)	0	10
தேவ மலர் (ஸ்வீடிஷ் கதை)	0	10

இன்னும் எல்லா தமிழ்ப் புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்

விவரங்களுக்கு

ஜோதி நிலையம்

74, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை

கதாமணி

5

பதிப்பாசிரியர்
என். ராமஸ்வாமி
['தமிலன்']

தியாகராயநகர்
சென்னை
1944

உள்ளடக்கம்.

			பக்கம்.
அண்ணனும் தம்பியும்	-	சரத்சந்திரர்	3
இருபது வருஷங்களுக்கு முன்	-	ஆர். சூடாமணி	20
நானே குபேரன்	-	'துமிலன்'	25
மணியின் நாய்க்குட்டி	-	ச. ர.	33
ரத்த பாசம்	-	'கிரஜா'	43
உதவி	-	...	55
காதற் கடிதங்கள்	-	சூரி	62
தோல்வி	-	ந. சிதம்பரசுப்ரமண்யன்	69
உமாசந்திரன்	-	என்.பஞ்சாபகேசன்	80
நூற்றில் ஒருவர்	-	எஸ். ஆர். எம்.	92

பாரதி விஜயம் ப்ரெஸ், தியாகராயநகர்.

அண்ணனும் தம்பியும்.

சரத்சந்திரர்

மஜும்தார் வம்சம் பழமையானது. கிராமத்தில் அதற்கு மிகுந்த மதிப்பு உண்டு. மூத்தவரான குருசரணர் தான் வீட்டில் சகல காரியங்களுக்கும் அதிகாரி. வீட்டுக்கு மாத்திரமல்ல, கிராமம் பூராவுக்குமே அவர்தான் அதிகாரி என்றால் இதில் மிகை ஒன்றும் இல்லை. ஸ்ரீ குஞ்சபுரத்தில் பெரிய மனிதர் இன்னும் பலர் இருந்தனர். ஆயினும், இவரிடம் ஜனங்களுக்கு இருந்த பக்தி சிரத்தை மற்றவரிடம் கிடையாது. வாழ்நாளில் இவர் பெரிய உத்தியோகம் ஒன்றும் பார்த்ததில்லை. கிராமத்தை விட்டு அவரை வெளியே அழைத்துச் செல்வதென்பது நடக்கக் கூடிய காரியமே அல்ல. வாலிப வயதில் அருகே இருந்த ஒரு ஜில்லா உயர்தரப்பள்ளியில் ஆசிரியர் வேலையில் புகுந்தார். அவ்வளவுதான். பிறகு இந்த வித்யாலயத்தை விட்டு வெளியே எங்கும் செல்ல அவர் பிரியப்படவே இல்லை. இங்கே அவருக்கு ரூபாய் முப்பதிலிருந்து ஐம்பது வரை உயர்ந்தது. இப்பொழுது அதில் பாதி, இருபத்தைந்து ரூபாய் பென்ஷன் கிடைக்கிறது.

அவர் வேலையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டு மூன்று வருஷங்களாகின்றன. உலகத்தில் பணம் தான் பெரிது என்று இன்றுவரை அவர் எண்ணியதே இல்லை. அப்படி இருந்திருந்தால், சண்டை சாடியில் மத்யஸ்தம் செய்யவோ, வம்புவழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதிலோ, நல்லகாரியம் கெட்டகாரியங்களுக்கு யோசனை கேட்பதிலோ ஸ்ரீ குஞ்சபுரத்து ஜனங்கள் அவர் கட்டளைப்படி நடந்திருக்க மாட்டார்கள். அவருடைய எல்லையற்ற தர்மசிந்தனை, மாசற்ற ஒழுக்கம், சலியாத உறுதி இவைகளைக் கண்டு எல்லோரும் அவருக்கு மரியாதையுடன் தலைவணங்கின்றனர். வயது கிட்டத்தட்ட அறுபது ஆகிவிட்டது. அக்கம் பக்கத்துக் கிராமத்தில் யாராவது ஒருவன் மத்யஸ்தம்

செய்வதில், தர்மம் பேசுவதில் நியாயமாக நடந்துவிட்டால் ஜனங்கள் அவனை 'அடேடே, நீ என்ன குருசரணராகி விட்டாய்போல்இருக்கிறது'என்று கூறத்தலைப்பட்டார்கள். இவ்வளவு தூரம் ஜனங்களுக்கு அவரிடம் மதிப்பு ஏற் பட்டிருந்தது.

குருசரணருக்கு மனைவியில்லை, ஒரே மகன் விமலன் தான் இருந்தான். உலகத்தில் அதிசயம் என்று சொல்ல ஏதாவது உண்டானால் அது இது தான். இத்தனை நல்ல குணம் வாய்ந்த குருசரணருக்கு இவ்வளவு தீய ஒழுக்கம் வாய்ந்த மகன் எப்படிப் பிறந்தான் என்பதுதான் தெரிய வில்லை.

மகனுடன் தந்தைக்குக் குடும்ப பந்தம் ஒன்றுமே கிடையாது. இவருடைய உறவெல்லாம் அவருடைய சகோதரன் ஹரிசரணருடைய மூத்தமகன் பாரஸிடம் தான். அவனைத்தான் அவர் தன் மகனாய்ப் பாவித்தார். பாரஸ் எம். ஏ. பரீட்சை தேறிவிட்டுச் சட்டகலாசாலையில் படித்துக் கொண்டிருந்தான். அவனை அரிச்சுவடி முதல் இன்றுவரை படிக்கவைத்தவர் அவர் தான். விமலன் ஒன்றும் படிக்கவில்லை என்ற துக்கம் இதன் மூலம் சற்றுக் குறைந்தது.

இளைய சகோதரர் ஹரிசரணர் இவ்வளவு நாட்கள் வரை எங்கோ தூரதேசத்தில் உத்யோகம் பார்த்து வந்தார். இந்த யுத்தத்திற்குப் பிறகு திடீரென்று அவர் எப்படியோ பணக்காரராகிவிட்டார். வேலையையும் விட்டுவிட்டு வீட் டோடு வந்து சேர்ந்தார். இங்கு அதிக வட்டிக்குப் பணம் லேவாதேவி செய்யலானார். மனைவியின் பெயருக்கு ஒரு தோட்டத்தை விலைக்கு வாங்கினார். இப்படியாக இன்னும் ஏதேதோ செய்யலானார். இதன் காரணமாக அவருடைய பணவாசனை ஐந்தாறு கிராமங்கள்வரை வீசியது.

ஒரு நாள் ஹரிசரணர் தன் தமையனிடம் வந்து வணக்கத்துடன், "அண்ணா! உங்களிடம் வெகு நாட்களாக

ஒரு விஷயம் சொல்லவேண்டும் என்றிருக்கிறேன்'' என்றார்.

"நல்லது சொல்லேன்!"

ஹரிசரணர் தோளைக் குலுக்கிக்கொண்டு, "நீங்கள் ஒண்டியாக இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இப்படி.....?" என்றார்.

"அது வாஸ்தவந்தான். அறுபதாவது வயசு நடக்கிறது!" என்றார் குருசரணர்.

"அதனால் தான் சொல்லுகிறேன். இனி நான் வீட்டோடு இருக்கப்போகிறேன். நில புலன்கள் தாறுமாறாகக் கிடக்கின்றன. நானே எல்லாவற்றையும் இனிப் பார்த்துக்கொள்..........."

குருசரணர் ஒரு கணந்தான் தன் தம்பியின் முகத்தைப் பார்த்தார். பிறகு, "நிலபுலன்கள் சரியாகத்தான் இருக்கின்றன. இதில் தாறுமாறு என்ன இருக்கிறது? நீ பாகம் பிரித்துக்கொள்ளும் விஷயத்தைப்பற்றிப் பேசுகிறாயா?" என்றார்.

ஹரிசரணர் வெட்கித் தலைகுனிந்து, "இல்லை, அண்ணா இல்லை. இப்பொழுது நடப்பதைப் போலவே நடக்கட்டும். இதில் மாறுதல் ஒன்றும் வேண்டாம். ஏதோ நம்மிடம் இருப்பதில் கவனமாக இருக்கவேண்டாமா? சமையல் சாப்பாட்டு விஷயம் எப்பொழுதுமே தொல்லை பிடித்தது தான். மற்றதெல்லாம் ஒன்றாகவே இருக்கட்டும். சமையல் மட்டுந் தனியாகச் செய்து கொள்ளுவோம். உங்களுக்குத் தெரியாததா?........" என்றார்.

"தெரியாமல் என்ன? எனக்கு நன்றாகத் தெரியும். நல்லது, நாளையிலிருந்து அப்படியே செய்து விட்டால் போகிறது."

"எப்படி நிர்ணயிப்பது என்பதைப் பற்றி, நீங்கள் ஏதாவது நிச்சயம் செய்தீர்களா?"

"நிச்சயம் செய்ய இதுவரை அவசியம் ஏற்படவில்லை. இன்று ஏற்பட்டு விட்டதென்றால் சகோதரர்கள் மூவரும் சரி சமபாகம் பிரித்துக் கொள்ளவேண்டியதுதான்."

ஹரிசரணர் ஆச்சரியத்துடன், "மூன்று பாகம் எப்படி? சின்ன நாட்டுப்பெண் விதவை. குழந்தை குட்டிகளும் இல்லை. அவளுக்கு எப்படிப் பாகம் சேரும்? மொத்தம் இரண்டு பாகம் தான்" என்றார்.

குருசரணர் தலையசைத்து விட்டு, "இல்லை, மூன்று பாகம் தான். சின்ன நாட்டுப் பெண் யார்? நமது சியாம சரணின் மனைவியல்லவா? அவள் உயிருள்ளவரை அவளுக்கும் பாகம் உண்டு" என்றார்.

ஹரிசரணர் சற்றுக் கடுகடுப்புடன், "சட்டப்படி அவளுக்குப் பாகம் கிடைக்காது. ஏதோ சாப்பாட்டிற்குத்தான் வாங்கிக் கொள்ளலாம்" என்றார்.

"அது வாங்கிக்கொள்ளத்தான் செய்வாள். இந்த வீட்டுக்கு வந்த மருமகள் அல்லவா!"

"நாளை ஒரு கால் நிலத்தை விற்றோ அடகு வைத்தோ பணம் வாங்கவோ ஆரம்பித்தால்?"

"சட்டப்படி அப்படிச் செய்ய அவளுக்கு உரிமை உண்டானால் செய்யத்தான் செய்வாள்."

ஹரிசரணரின் முகம் சுண்டியது. "உம், செய்வாள், செய்யமாட்டாளா?" என்றார்.

மறுநாள் ஹரிசரணர் கயிறும் அளவுகோலும் எடுத்துக் கொண்டு வீட்டுவாசல்களை அளந்து கொண்டு திரிந்தார். குருசரணர் ஒன்றும் பேசவும் இல்லை. அதைத் தடுக்கவும் இல்லை. இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு செங்கல்,

காரை, மணல் யாவும் வந்து சேர்ந்தன. வீட்டில் வெகு நாட்களாக இருந்தவேலைக்காரி, "நாளையிலிருந்து கொத்தன் வந்து வேலை செய்யப்போகிறுன். சின்னபாபு தன் பாகத்திற்குச் சுவர் எழுப்பிக் கொள்ளப்போகிறுர்?" என்றுள்.

குருசரணர் சிரித்துக் கொண்டே, "அது நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே! சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?" என்றுர்.

ஐந்தாறு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலை, கதவுக்கு வெளியே காலடிச் சத்தம் கேட்டது. குருசரணர் தலை நிமிர்ந்து பார்த்து விட்டு, "பஞ்சு அம்மா, என்னசேதி? என்று கேட்டார்.

பஞ்சுவின் தாய் வெகு நாளைய வேலைக்காரி. அவள் கை ஜாடையினுல் சுட்டிக் காட்டி, "பெரிய பாபு, சின்ன அம்மா நிற்கிறுர்கள்" என்றுள்.

குருசரணரின் மனைவி இறந்தபின்பு சின்ன மருமகள் தான் வீட்டுக்கு எஜமானியாய்க் காரியங்களை நிர்வகித்து வந்தாள். மைத்துனன்முன் வருவதில்லை. மறைவில் நின்று தான் பேசுவது வழக்கம். அவள் மிருதுவான குரலில், "மாமனுர் வீட்டில் எனக்கொன்றும் உரிமை இல்லையா?" சின்ன மன்னி இராப்பகல் வாயில் வந்தபடியெல்லாம் பேசுகிறுளே?" என்றுள்.

"ஏன் அம்மா, உரிமை இல்லாமல் என்ன? அவளுக்குள்ள உரிமை உனக்கும் உண்டு."

"ஆனுல் இந்த மாதிரிச் செய்தால் வீட்டில் இருக்க முடியாதே!" என்றுள் பஞ்சுவின் தாய்.

குருசரணர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு நிமிஷம் மௌனமாக இருந்துவிட்டு "பாரஸை வரச் சொல்லிக் கடிதம் எழுதி இருக்கிறேன். அவன் வந்தவுடன் யாவும் சரிப்பட்டு விடும். அதுவரை நீங்கள் கொஞ்சம் சகித்துக் கொள்ளுங்கள்!" என்றுர்.

சின்ன மருமகள் இதைச் சற்று ஆட்சேபித்து, "ஆனல் பரஸ் வந்து.......?" என்று ஆரம்பித்தாள்.

குருசரணர் இடைமறித்து, "ஆனல் ஒன்றுமில்லை அம்மா. என் பாரஸ் விஷயத்தில் 'ஆனல் 'கீனல்' என்ற வார்த்தையே கிடையாது. ஹரி அவனுடைய தந்தைதான். ஆனல் அவன் என்னுடையவன். இந்த உலகமே ஒன்று சேர்ந்தாலும் அவன் என்னுடையவனுகவே இருப்பான். அவனுடைய பெரியப்பா, ஒருநாளும் அனியாயம் செய்ய மாட்டார் என்ற விஷயத்தை அவன் இதுவரை அறிந்து கொண்டிருக்காவிட்டால் அவனை இவ்வளவுநாள் வளர்த்துப் படிக்க வைத்தது வியர்த்தம் என்று எண்ணிக் கொள்" என்றூர்.

வேலைக்காரி சொன்னள் :—இதில் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? அந்த வருஷம் தாய் இறந்து போனள். அப்பொழுது எமன்வாயில் இருந்த அவனை நீங்கள் தானே மீட்டு வந்தீர்கள், பெரிய பாபு! அப்பொழுது சின்னபாபு எங்கே இருந்தார்? இந்த மாற்றாந்தாய் எங்கே இருந்தார்? பயத்தினுல் ஒருவரும் கிட்டே வந்து அண்டவே இல்லையே! அப்பொழுது பெரியப்பாதான் தனியாய் நின்றூர். இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்தார்!"

"பாரஸின் தாயார் ஜீவித்திருந்தால் அவள்கூட இவ்வளவு செய்திருக்கமாட்டாள்!" என்றூள் சின்ன நாட்டுப் பெண்.

குருசரணருக்குச் சங்கோஜமாகப் போய்விட்டது. "இருக்கட்டும் அம்மா! அதெல்லாம் இப்பொழுது எதற்கு?" என்றூர்.

அவர்கள் சென்ற பிறகு விருத்தரான குருசரணரின் கண் முன் பாரஸ், விமலன் இருவர் பக்கம் பக்கமாக நின்று காட்சியளித்தார்கள். ஜன்னலுக்கு வெளியே உள்ள பரந்த வான வெளியைப் பார்த்து அவர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக் கொண்டார். அதன் பிறகு பெரிய மூங்கில்

தடியை எடுத்துக்கொண்டு சர்க்கார் சாவடிக்குச் சதுரங்கம் ஆடக் கிளம்பி விட்டார்.

மறுநாள் மத்தியானம், குருசரணர் ரொட்டி சாப்பிட உட்கார்ந்தார். வீட்டின் வடபுரம் தாழ்வாரத்தில் ஒருபாகத்தை அடைத்துக் கொண்டு ஹரிசரணர் சமையல் செய்து கொண்டிருந்தார். அங்கிருந்து ஒரு பெண் கடும் வார்த்தைகளை அள்ளி வீசிக்கொண்டிருந்தாள். சொன்ன சொல் கணக்கில் அடங்காது. அவர் சமையல் தடைப் பட்டது. இதற்குள் ஆண்குரல் ஒன்று அத்துடன் கலந்து வந்தது. அவர் அதைக் காது கொடுத்துக் கேட்டார்.

சின்ன மருமகள் மறைவில் நின்றபடி 'ஆஹாஹா' என்று தவித்துப் போனாள். பஞ்சுவின்தாய் கோபத்தினால் கூச்சலிட்டு இந்தச் சம்பவத்தைப் பகிரங்கப் படுத்தினாள்.

குருசரணர் முற்றத்துக்கு வந்து நின்று தம்பியிடம் "ஹரிசரண்! பெண்கள் வார்த்தையை நான் பொருட்படுத்துவதில்லை. ஆனால் நீ புருஷனாக இருந்தும், உன் மதனியை இவ்வாறு அவமானப் படுத்தினால் அவளால் இந்த வீட்டில் எப்படி இருக்க முடியும்?" என்றார்.

இவருடைய வார்த்தைக்கு ஒருவரும் பதில் சொல்லவில்லை. ஆனால் வாசல் பக்கத்திலிருந்த ஹரிசரணரின் மனைவியின் கடும் சொற்கள் கேட்டன. அவள் கேலியாக, "ஆமாம், இந்தமாதிரி அவமானம் செய்யாதீர்கள். அப்புறம் மன்னி, இந்த வீட்டில் இருக்கமாட்டாள். அப்புறம் என்ன ஆகிவிடும் தெரியுமா?" என்றாள்.

இதற்கு ஹரிசரணர் பதில் சொன்னார்:— "உலகம், பாதாளத்திற்குப் போய் விடும். வேறு என்ன ஆகிவிடும்? யார் இருக்க வேண்டுமென்று காலைப்பிடித்துக் கொள்ளுகிறார்கள்? போனால் சனி தொலைந்தது!" என்றார்.

குருசரணர் தயங்கி நின்ருர். அவர்களுடைய பேச்சு வார்த்தைகள் முடிந்த பிறகு பேசாமல் வெளியே செல்ல லானர்.

ஊர்ப் பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயரின் பெண்ணுடைய கல்யாணத்திற்காக குருசரணர் கிருஷ்ண நகருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். இதற்குள் பாரஸ் வீடு வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாய் ஜுரமாய்ப் படுத்து விட்டான். அவர் பயந்து கொண்டே பாரஸின் அறைக்குள் நுழைந்தார். எதிரே வந்த தம்பியைப் பார்த்து, "பாரஸுக்கு ஜுரமா வந்திருக்கிறது?" என்று கேட்டார்.

ஹரிசரண் "உம்!" என்று சொல்லி விட்டுச் சென்று விட்டார். ஹரிசரணர் மனைவியின் தாய்வீட்டு வேலைக்காரி அவரை வழிமறித்து, "நீங்கள் உள்ள போகாதீர்கள்!" என்ருள்.

"உள்ளே போகக் கூடாதா, ஏன்?"

"உள்ளே அம்மா இருக்கிருர்கள்!"

"அவர்களைச் சற்று விலகிக் கொள்ளச் சொல்!"

"அவர்கள் எங்கே விலகிக் கொள்வது? பிள்ளைக்கு நெற்றி வருடிக் கொண்டிருக்கிருர்கள்!" என்று சொல்லி விட்டு அவள் தன் காரியத்தைப் பார்க்கச் சென்ருள்.

குருசரணர் கனவில் இருப்பவர்போல் ஒருகணம் அப்படியே நின்றிருந்தார். பிறகு பாரஸைக் கூப்பிட்டு "உடம்பு எப்படி அப்பா இருக்கிறது?" என்று கேட்டார்.

இந்த வருத்தம் தேங்கிய கேள்விக்கு உள்ளே இருந்து யாதொரு பதிலும் வரவில்லை. ஆனல் வேலைக்காரி எங்கோ இருந்தபடி, "சின்ன ஐயாவுக்கு ஜுரம், கேட்கிறதா?" என்ருள்.

குருசரணர் ஒன்றும் தோன்ருமல் இரண்டு மூன்று நிமிஷங்கள் நின்ருர். பிறகு மெள்ள மெள்ள வெளியே

வந்தார். ஒருவருடனும் ஒன்றும் பேசவில்லை. நேரே கிருஷ்ண நகருக்குப் போனார்.

* * * *

அங்கே கலியாண கோலாகலத்தில் ஒருவரும் இவரைக் கவனிக்கவில்லை. கல்யாணச் சந்தடி ஓய்ந்ததும் அவருடைய வெகுநாளைய நண்பரான தலைமை உபாத்தியாயர் குருசரணரைத் தனிமையில் அழைத்து, "என்னவிஷயம் குருசரண்? ஹரிசரண் ஏதோ உனக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேனே? வாஸ்தவமா?" என்று கேட்டார்.

குருசரணர் சமாளித்துக்கொண்டு "ஹரிசரணா? இல்லையே!" என்றார்.

"இல்லாமல் என்ன? ஹரிசரணின் விஷமங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்!"

குருசரணருக்குச் சட்டென்று சகல விஷயங்களும் நினைவிற்கு வந்தன. அவர், "ஆமாம், ஆமாம், அவன் சொத்து சம்பந்தமாக ஏதோ தகராறு செய்து கொண்டிருக்கிறான்" என்றார்.

அவருடைய வார்த்தையின் தொனியினால் அந்த நண்பர் வருத்தமடைந்தார். இருவரும் சிறு வயது முதல் கள்ளங் கபடமற்றுப் பழகியவர்கள். அப்படியிருந்தும் குருசரணர் தன் குடும்பச் சச்சரவை மறைப்பதற்காக, அசட்டையாகப் பதில் சொல்ல முயல்வதை கண்டு, அவர் மேலே தொடர்ந்து ஒன்றும் விசாரிக்கவில்லை.

குருசரணர் கிருஷ்ணநகரத்திலிருந்து வீடு திரும்பி வந்து பார்த்தார். அவர் இங்கு இல்லாமல் இருக்க இந்தச் சில தினங்களுக்குள் ஹரிசரணர் வீட்டின் ரேழியிலும் முற்றத்திலும் பல இடங்களில் பள்ளங்களை வெட்டி வீட்டில் கால்வைக்க இடமில்லாமல் செய்திருந்தார். அவருடைய சௌகரியத்திற்கு, அவர் இஷ்டப்படி பிரித்துச் சுவர் எழுப்பிக்கொண்டார். அவரிடம் ரூபாய் இருக்கிறது. ஆகை

யால், பிறருடைய அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்று எண்ணினார்போலிருக்கிறது.

குருசரணர் தம் அறைக்குச் சென்று ஆடைமாற்றிக் கொண்டிருந்தார். இதற்குள் சின்ன நாட்டுப் பெண்ணுடன் பஞ்சுவின் தாய் வந்து நின்றாள். குருசரணர் விஷயத்தை விசாரிக்க வாய் திறந்தார். அதற்குள் அவள் விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள். அவள் அழுதுகொண்டே, முந்தாநாள் காலையில் சின்ன நாட்டுப் பெண்ணைச் சின்ன பாபு கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினாராம்" என்றும் சொன்னாள்.

நடந்த சம்பவத்தைப் புரிந்துகொள்ள குருசரணருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆயினும், அவர் கற்சிலைபோல் அசைவற்று, உணர்வற்று நின்றுவிட்டார். பிறகு திடீரென்று "ஏன் அம்மா, நிஜமாகவே ஹரிசரண் உன்னைக் கை தீண்டினனா? தீண்டியிருப்பான்!" என்றார்.

பிறகு சற்றுப் பொறுத்து, "சரிதான், பாரஸ் அப்பொழுது கட்டிலில் படுத்திருந்திருப்பான்!" என்றார்.

பஞ்சுவின் தாய் சொன்னாள்:- "அவர் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை, பெரிய பாபு. இன்று காலை வண்டிக்குத்தான் அவர் கல்கத்தா சென்றார்."

"அவன் ஒன்றும் காதில் போட்டுக்கொள்ளவில்லையா? அவன் தன் தந்தையின் செய்கை தெரிந்தும் பேசாமலா சென்றான்?"

"ஆமாம், தெரிந்தும் பேசாமல்தான் சென்றான்!"

குருசரணருக்கு இந்த உலகமே சுழல்வதைப்போல் இருந்தது. அவர், "பெண்ணே! இந்தக் குற்றத்திற்கு அவனுக்குத் தண்டனை கிடைக்காவிட்டால், இந்த வீட்டில் நான் இருந்து காரியமில்லை. எழுந்திரு! இன்னும் நேரமிருக்கிறது. நான் வண்டி கொண்டுவருகிறேன். நீ கோர்ட்டுக்குச் சென்று பிராது கொடுக்கவேண்டும்" என்றார்.

கோர்ட்டுக்குச் சென்று வழக்குத் தொடர்வது என்ற வார்த்தையைக் கேட்டதும் நாட்டுப்பெண் திடுக்கிட்டுப் போனுள். இதற்குள் குருசரணர் "குடும்ப ஸ்திரீகளுக்கு இந்தக் காரியம் கண்யக் குறைவானதுதான். இது எனக்கும் தெரியும். ஆனல் இப்படி வேண்டுமென்று அவமானம் செய்வதைப் பேசாமல் சகித்துக்கொண்டால் கடவுளே உன்மீது சினம் கொள்வார். இதைவிட அதிகமாக நான் ஒன்றும் சொல்லமுடியாது" என்ருர்.

சின்ன நாட்டுப்பெண் எழுந்து நின்ருள். பிறகு, "தாங்கள் என் தந்தைக்குச் சமமானவர்கள். நீங்கள் என்ன கட்டளை இடுகிறீர்களோ அதைச் சற்றும் தயங்காமல் நான் நிறைவேற்றுகிறேன்" என்ருள்.

ஹரிசரணர் பேரில் வழக்குத் தொடரப்பட்டது. குருசரணர் தம்மிடமிருந்த தங்கச் சங்கிலியை விற்று அதிக பீஸ்கொடுத்து பெரிய வக்கீலாக வைத்துக் கேஸ் நடத்தினர்.

வழக்கு வாய்தா தினமும் வந்தது. பிரதிவாதி ஹரிசரணர் ஆஜராஞர். ஆனல் வாதி ஆஜராகவில்லை. வக்கீல் ஏதேதோ பேசினர். நியாயாதிபதி கேஸைத் தள்ளி விட்டார். அகஸ்மாத்தாக குருசரணரின் பார்வை கூட்டத்தில் இருந்த பாரஸின் பக்கம் சென்றது. அவன் தன் முகத்தைத் திருப்பிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

குருசரணர் வருத்தத்துடன் வீடுவந்து சேர்ந்தார். சின்ன நாட்டுப்பெண்ணின் தாய்வீட்டில் யாருக்கோ தேக அசௌக்கியமென்று சேதிவந்ததன் பேரில், அவள் ஸ்நானம் செய்துவிட்டு சாப்பிடாமல்கூட வண்டி கொண்டுவரச் சொல்லிச் சென்று விட்டாளென்று கேள்விப்பட்டார்.

கேஸ் ஜயித்ததற்காக ஹரிசரணன் மேள தாளத்துடன் சண்டிதேவிக்கு பூஜை போட்டார். மேளச் சத்தம் ஊர் கிடு கிடுத்தது.

இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்ட பிதிரார்ஜித வீட்டில் ஒரு பக்கம் ஹரிசரணரின் குடும்பம். மறு பக்கம் குரு

சரணரும் வெகு நாளைய வேலைக்காரியான பஞ்சுவின் தாயும் இருந்தனர்.

மறு நாள் காலை பஞ்சுவின் தாய் வந்து, "பெரியபாபு! சமையலுக்குச் சாமான்களெல்லாம் எடுத்து வைத்து விட்டேன்" என்றாள்.

"சமையலா! ஆமாம்! சரிதான். இருக்கட்டும், இதோ வந்துவிட்டேன்!" என்றுகூறி எழுந்திருக்கலானார் குருசரணர். அதற்குள் வேலைக்காரி, "அவசரமில்லை பெரியபாபு. இன்னம் சற்று நேரமாகட்டும். அதற்குள் தாங்கள் கங்கைக்குச் சென்று ஸ்நானம் செய்து விட்டு வாருங்கள்!" என்றாள்.

"நல்லது சென்று வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு கணத்திற்குள் கங்கா ஸ்நானத்திற்குத் தயாரானார். அவருடைய பேச்சிலோ, நடத்தையிலோ எவ்வித சலனமோ தேக்கமோ இல்லை. ஆயினும் பஞ்சுவின் தாய்க்கு ஏதோ குறையாகவே பட்டது. அவளுக்குத் திரும்பத் திரும்ப "இவர் அந்தப் பழைய பெரியபாபு அல்ல!" என்ற நினைவே வந்தது.

அவள் உள்ளே சென்று உரத்த குரலில், "இது நல்லதற்கல்ல, இதனால் ஒருநாளும் நன்மை ஏற்படாது. பகவான் இதற்குத் தண்டனை அளித்தே தீருவார்!" என்று புலம்பிக்கொண்டிருந்தாள்.

யாருக்கு நன்மை ஏற்படாது; யாருக்குப் பகவான் தண்டனை அளித்தே தீருவார் என்பது விளங்கவில்லை. ஆனால் இது சம்பந்தமாக அன்று சின்னபாபுவின் சார்பாக ஒருவரும் சண்டைக்கு வரவில்லை.

இவ்விதமாக நாட்கள் கழிந்து வந்தன.

குருசரணரின் ஒரே பிள்ளை விமல சந்திரன் நல்ல நடத்தையுள்ளவனல்ல என்பது அவருக்குத் தெரியும். சில மாதங்களுக்குமுன் அவன் வீட்டுக்கு வந்து சில மணிநேரம் தங்கினான். பிறகு அவன் கண்ணில் தென்படவே இல்லை.

அந்தத்தடவை அவன் ஏதேதோ சாமான்களை ஒரு தோற் பையில் போட்டு ஒளித்து வைத்து விட்டுச் சென்றான். அவன் போனபிறகு குருசரணர் பாரஸை அழைத்து, "இந்தாடா அப்பா! இதில் என்ன இருக்கிறது பார்?" என்று காட்டினார்.

பாரஸ் அவற்றை நன்றாகப் பார்த்து விட்டு "எல்லாம் காகிதங்கள். ஏதாவது தஸ்தாவேஜாக இருக்கலாம். பெரியப்பா! இவைகளைக் கொளுத்தி விடட்டுமா?" என்று கேட்டான்.

"பிறகு அவை ஒருவேளை வேண்டியிருந்தால்?"

"ஆனால் விமல் அண்ணாவுக்கு இவை தேவையில்லை. ஆபத்தை வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?"

குருசரணர் தடுத்தார். "விஷயத்தை அறியாமல் வீணாக்குவானேன் பாரஸ்? நீ இதை எங்கேயாவது மறைத்து வைத்துவிடு. பிறகு பார்த்துக் கொள்ள லாம்" என்றார்.

இந்த சம்பவத்தை அத்துடன் மறந்துவிட்டார். அன்று காலை அவர் கங்காஸ்நானம் செய்து திரும்பிவந்து சமையல் செய்ய ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று கையில் தோல் பையுடன் பாரஸ், ஹரிசரணர், கிராமத்திலுள்ள நாலு பெரிய மனிதர்கள், போலிஸார் யாவரும் வந்து சேர்ந்தனர்.

விஷயம் இதுதான். விமல் ஒரு கொள்ளைக்காரன். அதோடு எங்கோ ஓடிவிட்டான். பத்திரிகையில் இந்த விஷ யத்தைப் படித்துவிட்டுப் பாரஸ் போலீஸுக்குத் தகவல் கொடுத்துவிட்டான். தோல் பை இதுவரை அவனிடம்தான் இருந்தது. சில விநாடி அவர் கண் கொட்டாமல் பாரஸின் முகத்தைப் பார்த்தார். அதன் பிறகு கலங்காத அவர் கண் கள் இரண்டினின்றும் கண்ணீர் துளித்தது. பிறகு அவர்,

"எல்லாம் உண்மை, பாரஸ் சொன்னதில் ஒன்று கூடப் பிசகல்ல !" என்றார்.

இன்ஸ்பெக்டர் குருசரணரை சில கேள்விகள் கேட்டுவிட்டு அவரை விட்டுவிட்டார். பிறகு போகும் போது அவர் குனிந்து குருசரணரின் பாதங்களைத்தொட்டு, "நீங்கள் வயதில் மிகவும் பெரியவர்கள். என்னுடைய இந்தத் தவறை மறந்துவிடுங்கள். இவ்வளவு துக்ககரமான காரியத்தை இதற்குமுன் நான் செய்ததே இல்லை" என்றார்.

பின்னும் சில மாதங்களுக்கெல்லாம் விமலனுக்கு ஏழு வருஷம் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டது என்ற செய்தி எட்டியது.

மீண்டும் மேளதாள வைபவத்துடன் தடபுடலாக ஹரிசரணர் சுபசண்டி தேவிக்குப் பூஜைபோட ஏற்பாடு செய்யலானார்.

பாரஸ் தந்தையிடம் "அப்பா, இவைகளொன்றும் வேண்டாம் !" என்றான்.

"ஏன் ?"

"இதை என்னால் சகிக்க முடியவில்லை."

"நல்லது, சகிக்கமுடியாவிட்டால் இன்று வண்டிக்கே கல்கத்தா சென்று சுற்றித் திரிந்துவிட்டு வா. ஜகன்மாதாவுக்குப் பூஜை. தர்ம கர்மங்களைத் தடை செய்யாதே !"

தர்ம கர்மங்களுக்கு யாதொரு தடையும் ஏற்படவில்லை என்பதைச் சொல்லத் தேவை இல்லை.

பத்துப் பன்னிரண்டு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் காலை குருசரணரின் வீட்டுப் பக்கம் திடீரென்று ஏதோ கூக்குரல் கேட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் இடைச்சி அழுதுகொண்டே வெளியே வந்து நின்றாள். அவள் மூக்கில் ரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. ஹரிசரணர் படபடப்புடன், "என்ன ரத்தம் மோக்ஷதா, ஏன் இப்படி ? என்ன சமாசாரம்" என்று கேட்டார்.

அழுகைக் குரலைக்கேட்டு வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் வந்து கூடிவிட்டனர். மோக்ஷதா அழுது கொண்டே, "பாலில் தண்ணீர் விட்டிருக்கிறேன் என்று பெரிய பாபு என்னை உதைத்துக் குழியில் தள்ளிவிட்டார்!" என்றாள்.

"யார், யாரது! அண்ணாவா! சேச்சே! அவரா அப்படிச் செய்தார்" என்றார் ஹரிசரணர் ஆச்சர்யத்துடன்.

"யார் பெரியப்பாவா? நீ பொய் சொல்லுகிறாய்!" என்றான் பாரஸ்.

"பெரியவர் கூடப் பெண் பிள்ளையைக் கைதீண்டி அடிப்பாரா? ஏண்டி பால்காரி? நீ என்ன ஏதாவது கனவு கண்டாயா?" என்றாள் ஹரிசரணரின் மனைவி.

அவள் தன்மேலுள்ள மண்ணைக்காட்டி தெய்வத்தின் மேல் ஆணையிட்டுத் தான் சொன்னது யாவும் உண்மை என்று கூறினாள்.

'இஞ்ஜங்ஷன்' ஆர்டரால் சுவர் எழுப்பும் வேலை நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் முற்றத்தில் தோண்டிய பள்ளம் அப்படியேதான் இருந்தது. அதைத் தூக்கவே இல்லை. குருசரணர் உதைத்ததால் அவள் அந்தப் பள்ளத்தில் வீழ்ந்தாள். அதனால் காயம் ஏற்பட்டது.

"சரி, வா, என்னுடன். பிராது கொடுக்கலாம்!" என்றார் ஹரிசரண்.

"நீங்கள் என்ன அசம்பாவிதமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? மைத்துனர் பெண்பிள்ளையைக் கைதீண்டி அடிப்பாரா? அவள் பொய் சொல்கிறாள்!" என்றாள் அவர் மனைவி.

பாரஸ் திகைத்துப் பேசாமல் நின்றிருந்தான்.

"பொய்யாக இருந்தால், தோற்றுப் போகட்டும். ஆனால் அண்ணாவின் வாயிலிருந்து பொய் வராது. அடித்திருந்தால் தண்டனை கிடைக்கட்டுமே!" என்றார் ஹரிசரணர். இந்த யுக்தியைக் கேட்ட மனைவிக்கு நல்ல புத்தி வந்துவிட்டது. "அதுவும் சரிதான். போய்க்

கேஸ் கொடுங்கள். நல்ல தண்டனை கிடைக்கும்" என்றான்.

எதிர்பார்த்தபடியே நடந்தது. அண்ணாவின் வாயிலிருந்து பொய்வரவில்லை. சட்டப்படி அவருக்குப் பத்து ரூபாய் அபராதம் விதித்தார்கள்.

இந்த தடவை சுபசண்டிக்கு பூஜை நடைபெறவில்லை. ஆனால் மறுநாள் சிறுவர்கள் பலர் ஒன்று கூடிக்கொண்டு குருசரணரின் பின்னால் ஏதேதோ கூச்சல் போட்டுக் கொண்டே சென்றனர். பால்காரியை அடித்ததைப்பற்றி ஒரு பாட்டுக்கூடக் கட்டிவிட்டார்கள்.

இரவு எட்டுமணி இருக்கும். ஹரிசரணரின் வாசலில் எல்லோரும் அமர்ந்திருந்தனர். இப்பொழுதெல்லாம் கிராமத் தலைவர்கள் இங்கேதான் வந்து கூடுவது வழக்கம். திடீரென்று ஒருவன் வந்து ஒரு சந்தோஷச் செய்தியைத் தெரிவித்தான். கொல்லர்கள் விச்வ கர்மா பூஜை உத்ஸவத்தை முன்னிட்டு கல்கத்தாவிலிருந்து இரண்டு கேம்டா நடனக் காரிகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் குருசரணர் அமர்ந்திருக்கிறார். இதுதான் செய்தி.

ஹரிசரணர் சிரித்துச் சிரித்து ஓய்ந்துபோனார். "பைத்தியமா என்ன? இவன் பேச்சைக் கேட்டீர்களா? அண்ணா கேம்டா கூத்துப் பார்த்துக்கொண் டிருக்கிறாராம். ஏண்டா அவிநாசா! குடித்துவிட்டு வந்திருக்கிறாயா என்ன?" என்றார்.

அவிநாசன் சத்தியம் செய்து, "என் கண்களால் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்றான்.

ஒரு ஆள் ஓடினான் உண்மையை அறிந்து வர. பத்து நிமிஷங்களுக்கெல்லாம் திரும்பிவந்து சொன்னான்:- "விஷயம் முற்றிலும் வாஸ்தவம். கூத்துப்பார்த்துக்கொண்டிருப்பதோடு மட்டுமல்ல. தலைப்பில் முடிந்திருந்த பணத்தையும் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்! இதையும் பார்த்துவிட்டுத்தான் வந்தேன்!" என்றான்.

அவ்வளவுதான். ஒரே குதூகலம். ஒருவன், "இம்மாதிரி ஒருநாள் நடக்கும் என்பது தெரிந்த விஷயம்தானே"

என்முன் மற்றொருவன்,'' ஒருகாரணமும் இல்லாமல் பெண் பிள்ளையைக் காலால் உதைத்த அன்றே நமக்குத் தெரிந்து விட்டதே'' என்முன். இன்னொருவன் குரு சரணரின் மகனின் திருட்டுக் கேஸை எடுத்துக் கூறி, "தந்தையின் நடத்தையை அநுசரித்துத் தான் மகனும் செய்திருக்கிறுன்!'' என்முன்.

இன்று பேசாமல் இருந்தவர் ஹரிசரணர் ஒருவர்தான். அவர் இவைகளில் மனம் கொள்ளாதவராய்ப் பேசாமல் உட்கார்ந் திருந்தார். இன்று அவருக்கு அவரையும் அறியாமல் பால்ய நினைவுகள் தோன்றலாயின. இவர்தானு அவருடைய தமையன்? இவரா அந்தக் குருசரண மஜூம்தார்!

இரவு மணி இரண்டு இருக்கும். கூத்து முடிவடைய இன்னும் நேரம் இருந்தது. விசுவகர்ம பூஜை சீக்கிரம் முடிவடைந்து விட்டது. பக்தர்கள் கள்குடித்து, மாமிசம் உண்டு சதிர்வைத்து, தக்ஷயக்ஞரூபத்தில் இதைப் பூர்த்தி செய்துகொண்டிருந்தார்கள். பலர் தங்கள் நினைவு தப்பி இருந்தனர். அவர்களின் மத்தியில் அமர்ந்து சிரித்துக் கொண்டிருந்தார் குருசரணர்.

அப்பொழுது சால்வையினுல் முகம்வரை மூடிக்கொண் டிருந்த ஒருவர் அங்கு வந்து சேர்ந்தார். மெள்ள குருசரணர் முதுகில் கையை வைத்தார். அவர் திடுக்கிட்டு, "யார்? என்று கேட்டார்.

"நான் தான், பாரஸ்! பெரியப்பா! வீட்டுக்கு வாருங்கள்!''

குருசரணர் யாதொரு தடையும் சொல்லவில்லை. "வீட்டுக்கா? சரி, வா!'' என்முர்.

உற்சவப் பந்தலை விட்டு வெளியே வந்து சாலையில் நின்று அதிக வெளிச்சமில்லாத இடத்தில் பாரஸ் பெரியப் பாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினுன். கண்களில் அந்தப் பழைய ஜோதி இல்லை. முகத்தில் அந்தக் களை இல்லை. பாதாதிகேசம் இவர் ஒருநடை பிணமாகவே

காட்சியளித்தார். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அவர் கண்களில் கண்ணீர் பெருகியது. இவ்வளவு நாட்களுக்குப் பிறகு, ஜனங்களின் முன் லஜ்ஜையடையக் கூடிய விஷயம் எதுவும் பெரியப்பாவிடம் இல்லை என்பதை அவன் கண்கள் கண்டன. இந்த உணர்ச்சியற்ற உடலை விட்டு பெரியப்பா எங்கோ சென்று விட்டார் என்பது அவனுக்குப் புலப்பட்டது. அவன், "பெரியப்பா, நீங்கள் காசிக்குப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே, போகிறீர்களா ?" என்று கேட்டான்.

குருசரணர் உயிரற்ற சடலத்தைப் போல், "போகிறேன், பாரஸ். ஆனால் என்னை யார் அழைத்துச் செல்வார்கள் ?" என்றார்.

"நான் அழைத்துக் கொண்டு போகிறேன்."

"அப்படியானால் வா, வீட்டுக்குச் சென்று சாமான்களை எடுத்துக்கொண்டு புறப்படுவோம்!"

"இல்லை பெரியப்பா! அந்த வீட்டுக்கு இனிப் போக வேண்டாம். அங்கிருக்கும் சாமான் ஒன்றுமே நமக்கு இனி வேண்டாம்!"

குருசரணருக்குச் சட்டென்று சுய உணர்ச்சி வந்தது. க்ஷணநேரம் மௌனமாக இருந்தார். பிறகு, "ஒன்றும் வேண்டாமா? அந்த வீட்டிலுள்ளது நமக்கு ஒன்றும் வேண்டாமா?" என்றார்.

பாரஸ் தன் கண்களைத் துடைத்துக் கொண்டே, "ஆமாம் பெரியப்பா! ஒன்றும் வேண்டாம். அவைகளை எடுத்துக் கொள்ள அங்கு வேண்டியபேர் இருக்கிறார்கள். வாருங்கள்!" என்றான்.

"சரி, வா!" என்று கூறிக் குருசரணர் பாரஸின் கையைப் பற்றிக் கொண்டார். இருள் மண்டி ஜன சந்தடியற்றுக்கிடந்த சாலை வழியே இருவரும் ரயில்வேஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

இருபது வருஷங்களுக்கு முன்

ஆர். சீதாமணி.

ஒரு நாள் என் கணவரும் நானும் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தோம். அன்று வண்டியில் அதிகக் கூட்டமில்லை. எங்களுக்கு எதிர்த்தாப்போல், 'டிரைவரு'க்குப் பின்னுலிருந்த நீண்ட ஆசனத்தில் இரண்டே இரண்டு பேர்தான் உட்கார்ந்திருந்தனர்.

வண்டி ஒரு மூலையில் நின்றபோது ஒரு பெண் ஏறி வந்து எங்களுக்கு எதிரில் நின்ருள். நின்றுகொண்டேயிருந்தாள். உட்காரவில்லை. ஒரு வேளை வேகமாய் நடந்து வந்ததால், தலை சுற்றுகிறதோ, என்னமோ பிடித்துக் கொண்டு நிற்கிருளாக்கும் என்று எண்ணினேன். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு மனிதன் ஒரு பெரிய அண்டாவைத் தூக்கிக்கொண்டு வந்தான். அவனும் எங்களுக் கெதிரிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

வண்டி மறுபடியும் ஓடத் தொடங்கியது. ஆனல் நின்ற பெண், நின்றுகொண்டிருந்தாள். உட்காரவில்லை. வண்டியிலிருந்த எல்லோரும் அவள் நின்றுகொண்டிருப்பதையே ஆச்சர்யத்துடன் வேடிக்கை பார்க்கலாயினர். ஐந்து நிமிஷம் ஆகியுங்கூட அந்தப் பெண் உட்கார்ந்தாளில்லை.

ஒருவேளை அவள், புருஷர்கள் உட்கார்ந்திருக்கும் வரிசையில் உட்கார வெட்கப்படுகிருளோ என்னமோ என்று எண்ணி என் கணவன், தமது ஆசனத்தை விட்டு எழுந்து "நீ, இங்கே உட்கார் அம்மா!" என்ருர். ஊஹூம். அந்தப் பெண் தலையைக் குனிந்துகொண்டாளே தவிர அசையவில்லை. என் கணவர் மறுபடியும் என் பக்கத்திலேயே அமர்ந்தார்.

அப்போது 'கண்டக்டர்' வந்து அந்தப் பெண்ணை டிக்கெட்டுக்குப் பணம் கேட்டான். அப்பொழுதும் அவள் பேசவில்லை. ஆனல் அண்டாவுடன் வந்தானே,

அந்த ஆசாமி, 'இரண்டு கொடு' என்று பணத்தைக் கொடுத்தான். அப்பொழுதுதான் அவன் அந்தப் பெண்ணின் புருசன் என்று ஊகித்தோம். உடனே என் கணவர் "அந்தப் பெண்ணை உட்காரச்சொல்லு" என்ருர். அவன் அப்பொழுதும் வாய் திறக்கவில்லை. அவளை ஒரு பார்வை பார்த்தான். அவள் மறுகணம் பொத்தென்று ஆசனத்தில் உட்கார்ந்தாள்.

அவளுக்குச் சுமார் பதினெட்டு வயதிருக்கும். காதில் பெரிதாக சிவப்புக்கல் ஓலைகள் அணிந்திருந்தாள். அதிலிருந்து மாட்டல். காதில் நாலைந்து துவாரங்களில் சிறிது சிறிதாகப் பல நகைகள் அணிந்திருந்தாள். கழுத்தில் காரை, பவழமாலை முதலியன அணிந்து இருந்தாள். இடுப்பில் கூரை நாட்டுப் புடவை. காலைக் காப்பும் கொலுஸும் அலங்கரித்தன. அவள் புருஷன் கொண்டுவந்திருந்த அண்டா புத்தப் புதுசு. அதன் மேற்பக்கத்தில் இங்குமங்குமாகக் காவி பூசியிருந்தது. உள்ளே, இரண்டு மஞ்சத்துணிகளும், வாழைப் பழச் சீப்புகளும் இருந்தன. 'இப்போதுதான் கல்யாணமானவர்கள் போலிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டேன்.

எதிரிலிருந்த அந்தப் பெண்ணைப் பார்க்கப் பார்க்க, எனக்குப் பழைய ஞாபகங்கள் தோன்றலாயின. கிட்டத்தட்ட இருபது வருஷங்களுக்கு முன் எனக்குக் கல்யாணம் ஆனதைப்பற்றிய ஞாபகங்கள் தோன்றின.

அப்பொழுது எனக்குப் பத்து வயதுகூட ஆகவில்லை. என் தமக்கைக்குக் கல்யாணம் நிச்சயஞ் செய்திருந்தார்கள். அவளுக்கு வயது பன்னிரண்டு இருக்கும். என் கல்யாணத்தைப் பற்றியோ, அல்லது எனக்கு வரன் பார்ப்பதைப் பற்றியோ அப்போது பேச்சில்லை. எனக்கும் அதைப்பற்றிய எண்ணம் ஒன்றும் தோன்றவில்லை. ஆனல் கல்யாணம் நிச்சயமானல் தமக்கைக்கு வாங்கியிருப்பதுபோல் நமக்கும் நகை, புடவை எல்லாம் வாங்குவார்களே என்ற ஆசை மட்டும் இருந்தது.

ஒருநாள் நான் பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டுச் சாயங்காலம் திரும்பிவந்தேன். எங்கள் வீட்டுத் திண்ணையில் யாரோ ஒரு ஏழு எட்டுப் பேர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். நான் வாசற்படியண்டை வந்ததும் என் தகப்பனுர் சிரித்துக்கொண்டே "இந்தக் குட்டிதான்" என்ருர். நான் வெட்கப்பட்டுக்கொண்டு உள்ளே ஓடத் தொடங்கினேன்.

என் தந்தை என் கையைப் பிடித்து, "இந்தா; இந்த மாமா உன்னைப்பார்க்க வந்திருக்கிருர். நமஸ்காரம்பண்ணு" என்ருர். எப்படியாவது தப்பித்துக்கொண்டால் போதுமென்று ஸ்லேட் புஸ்தகத்தைத் திண்ணையின்மீது வைத்துவிட்டு நமஸ்காரம் செய்தேன். அவர் என்னை ஆசீர்வதித்துவிட்டு "உன்னை எங்காத்துக்குத் தூக்கிக்கொண்டு போகப் போகிறேன்" என்ருர். அதைக் கேட்டதும் பயமாயிருந்தது. வேகமாக உள்ளே ஓடினேன். "யார் அது அந்த மாமா! என்னை அவாத்துக்கு அழைத்துக்கொண்டு போய் விடுவேன்" என்கிருரே என்றேன் என் தாயாரிடம். "உனக்கும் கல்யாணம். அவர் பிள்ளைக்குத்தான் கொடுக்கப் போகிறது?" என்று அவள் சொன்னபோது எனக்கு உள்ளூரச் சந்தோஷம். அப்பொழுதெல்லாம் பெண்கள் 'நான் படிக்கப்போகிறேன்' என்ருே அல்லது 'பிள்ளையைப் பார்க்கணும்' என்ருே சொல்கிறவழக்கம் கிடையாது. ஆகையால் எனக்கும் அன்றே கல்யாணம் நிச்சயமாயிற்று. எனக்கும் என் தமக்கைக்கும், ஓரே நாளில் முகூர்த்தம்.

'எங்கள் குடும்பம் பெரிது' என்று சொல்வதுண்டே, அது எங்கள் குடும்ப விஷயத்தில் முற்ற முற்றப் பொருந்தும். வீட்டில், இரண்டு அத்தைகள், சித்தப்பா சித்திகள், மற்றும் தாயாதிகள் இப்படியாகக் குறைந்தது இருபது பேர் எப்பொழுதும் இருப்பார்கள். இந்தக் கூட்டத்தில் சாதாரணமாக நாங்கள் குளித்தோமா, தலைபின்னிக்கொண்டோமா, சாப்பிட்டோமா என்று யாருமே கவனிப்பதில்லை. ஆனுல், எங்களுக்குக் கல்யாணம் நிச்சயமானதும் எல்லா

ரும் எங்களைத் தேடிப் பிடித்துவைத்துக்கொள்வதும், நல்ல பாவாடைகள் கட்டி, நகைகள் போட்டுப் பார்ப்பதும், பாட்டுப் பாடிச் சொல்லிக் கேட்பதுமாக அல்லோகலப் பட்டது. எனக்கு இதிலெல்லாம் மிகவும் பெருமை. ஆனால், கணவனாக வரப்போகிறவரைப்பற்றி அவர் எப்படியிருப் பார், நல்லவரா பொல்லாதவரா என்று எண்ணத் தோன் றவே இல்லை.

கல்யாணத்துக்கு முதல் நாள் மாப்பிள்ளையை அழைத் தார்கள். அப்பொழுதுதான் எனக்கு அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் தோன்றிற்று. எங்கள் வீட்டு மாடியில் நின்று பார்க்க முயன்றேன். ஆனால் ஊர்வல மோட்டார் வண்டியில் ஏகப்பட்டபேர் உட்கார்ந்திருந்த தால் சரியாகப் பார்க்கமுடியவில்லை. மறுநாள் மாலை மாற் றும்போதுதான் பார்க்க முடிந்தது. பத்து வயதான எனக்கு ஒரு பதினெட்டு முழப் புடவையைத் தூக்கிக் கட்டியிருந்தார்கள். முழங்கைக்குக் கீழே நீண்டுகொண் டிருக்கும் ரவிக்கை. தலையில் தலை சாமான்கள். கழுத்தில் அந்தக்காலத்து நாகரிக நகைகளான சங்கிலி, கொடி, மணி மாலை, பவழமாலை முதலியன. முழங்கைக்கு மேலே கட கம், கால்களில் காப்பு கொலுசு. இந்த அலங்காரங்க ளுடன் என் தாய் மாமன் என்னை அலாக்காகத் தூக்கித் தன் தோள்மீது வைத்துக்கொண்டார். மாலை மாற்றுவதற் காக மாலை போட்டபோதுதான் நான் முதன் முதலாக அவரைப் பார்த்தேன். முழுக்கண்ணையும் திறந்துபார்க்க வெட்கப்பட்டேன் அவர் அப்பொழுது கன்றுக் குடுமி வைத்திருந்தார். தலை நிறைய கட்டு மயிர், காதில் கடுக்கன் தரித்திருந்தார்.

கல்யாணம் நான்கு தினங்கள் நடந்தன. பிறகு எல் லாரும் ஊருக்குப் போய்விட்டார்கள். பிறகு ஆடி, ஆரு மாதம், தீபாவளி எல்லாவற்றிற்கும் என் கணவர் வருவார். ஆனால் வந்தால் அவர் மாட்டில் திண்ணையில் உட்கார்ந்து மாப்பிள்ளைச் சுவரில் சாய்ந்து ஏதாவது படித்துக்கொண்

டிருப்பார். நாங்கள் பேசவோ பழகவோ முயலவில்லை. வீட்டுப் பெரியவர்களும் இதுமாதிரி விஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை.

ஆறுமாதங் கழித்து ஒருநாள் என் மாமனுர் என்னை அழைத்துப் போவதற்காக வந்தார். என் தமையனும் எனக்குத் துணையாக என்னைக் கொண்டுவந்துவிட்டான்.

என் மாமியார் பரம சாது. அவருக்காக உலகத்தில் வெயிலெரிக்கிறது, மழை பெய்கிறது என்று ஊரார் புகழ்வது வழக்கம். அவர் என்னை ஒரு வேலையும் செய்ய விடமாட்டார். தானுகவே எல்லாக் காரியங்களையும் செய்து முடிப்பார். அவருக்கு ஏதாவது ஒத்தாசையாகச் செய்ய வேண்டுமென்று தோன்றும்,ஆனுல் "நான் ஏதாவது செய்யட்டுமா?" என்று கேட்கத் தைரியம் இராது. பேசாமல் அவர் சமைப்பதைக்கவனித்துக்கொண்டே சுவரில் சாய்ந்து கொண்டு நிற்பேன். ஆனுல் எத்தனை நாழிதான் நிற்க முடியும்? கால்கள் வலிக்கும். வலித்தால் ஒற்றைக்காலைச் சுவரில் ஊன்றிக்கொண்டு இன்னொரு காலால் நிற்பேன். இது மாதிரி மாற்றி மாற்றி நின்றுகொண்டிருப்பேன். என் மாமியார் 'உட்காரு' என்று சொன்னுலும் உட்காரமாட்டேன். ஒருநாள் அவர் என் தாயாரைக் கூப்பிட்டு "இப்படி சுவரில் சாய்ந்துகொண்டே நின்ருல் அது இடிந்து விழுந்து விடப்போகிறது" என்ருர். அதைக் கேட்டதும் எனக்குப் பயமாகப் போய்விட்டது.

விவாகமாகி இரண்டு வருஷங்கள் வரை நான் அவருடன் நேருக்கு நேர் நின்ருே, தனிமையிலோ பேசியது கிடையாது. எனக்குப் பன்னிரண்டு நிறைந்து பதின்மூன்று நடந்துகொண்டிருந்தது. அப்பொழுதுதான் அவர் ஒரு நாள் என்னைக்கூப்பிட்டு "நீ என்ன படித்திருக்கிருய்?" என்று கேட்டார். நான் ஏதோ பதிற்சொன்னேன். அவர் வேதநாயகம் பிள்ளை பாடல் புத்தகத்தைக் கொடுத்து அதை படித்துப் பார்க்கச் சொன்னுர். என் மாமியாருக்கு

அந்தப் பாடல்களில் பரிச்சயமுண்டாதலால் அவர் சிலவற்றைச் சொல்லிக்கொடுப்பார்.

ஒருநாள் என் மாமியார் வீட்டிலில்லாதபோது அவர் சாப்பிட வந்தார். இலையைப் போட்டுவிட்டுப் பரிமாறத் தயாராயிருந்தேன், அவர் இலையில் வந்து உட்காரவில்லை. தானாகப் பேசத் தைரியமில்லாததால் எப்படிச் சாப்பிடக் கூப்பிடுவதென்று தெரியாமல் திண்டாடினேன். கடைசியில் அவரே வந்து உட்கார்ந்தார். அவருக்கு எதிரே நிற்க வெட்கப்பட்டுக்கொண்டு பரிமாறிவிட்டு மறைவில் போய் நிற்பேன். நடுவில் குழம்பு சாதம் சாப்பிட்டுவிட்டுச் சும்மா உட்கார்ந்திருந்தால் என்ன பண்ணுகிறது என்று பயம் வந்துவிடும். சாதம் போடப் போவேன். ஆனால் அப்பொழுதுதான் பிசைய ஆரம்பித்திருப்பார். இப்படி இரண்டு மூன்றுதரம் ஏமாந்துபோகவே மெதுவாகப் போகலாம் என்றிருப்பேன். அவர் இரசஞ்சாதம் சாப்பிட்டு விட்டு மௌனமாய் உட்கார்ந்திருப்பார். வாயைத் திறந்து அது வேண்டும் இதுவேண்டுமென்று கேட்கமாட்டார். இதுமாதிரித் திண்டாடினேன். இதையெல்லாம் நினைத்துப் பார்த்தபோது எனக்கு என்னை அறியாமலே சிரிப்புண்டாயிற்று. அதிலும் எதிரிலிருந்த பெண்ணைப் பார்த்தபோது நாமும் அந்தக்காலத்தில் இப்படித்தானே இருந்தோம் என்று எண்ணிக்கொண்டேன்.

பிறகு பக்கத்திலிருந்த அவர் பக்கம் திரும்பிப்பார்த்தேன். அவர் சிறிது நேரமாக என்னையே கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார்போலிருக்கிறது. அதை உணர்ந்ததும் எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. "என்ன சிரிக்கிறாய் ?" என்றார். நான் என்னத்தைச் சொல்வது.?

சிறிது நேரத்துக்கெல்லாம் நாங்கள் இறங்கவேண்டிய இடம் வந்தது. இறங்கினோம். அந்தப் பெண்ணும் ஆசாமியும் கூட இறங்கினார்கள். அவன் முன்னே அண்டாவை எடுத்துச் செல்ல, அவள் அவனுக்குப் பின்னே ஐந்தடி தூரத்தில் நடந்து சென்றாள்.

நானே குபேரன்

'துமிலன்'

லோகநாதன் வீட்டில், அவன் மனைவி சுசீலாவும் லோகநாதனும், சுசீலாவும் அவன் கணவன் லோகநாதனும் தான் வசித்து வந்தனர்.

அவர்களுக்குக் குழந்தைகள், குட்டிகள் ஒன்றுமில்லை. ஆனால் அதற்காகச் சுசீலா எங்கெங்கே ஆலமரமிருக் கிறதென்று தேடிக்கொண்டிருக்கவில்லை. இராமேசுவரத் துக்குப் போவதற்காக ரயில் செலவு செய்யவில்லை; ஜாத கத்தை திரும்பத் திரும்பத் ஜோசியர்களிடம் காட்டிக் கொண்டிருக்கவில்லை. குழந்தை பிறந்தால் ஒரு வெள்ளித் தொட்டில் கொண்டுவந்து கொடுப்பதாக எந்தக் கடவுளிட மும் இரகசிய ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. குழந்தை யாரையும் கேட்டுக்கொண்டு பிறப்பதில்லை என்று அவளுக் குத் தெரியும். தன்னைப்போலவே, பேர் வைத்துக்கொண் டிருந்தாளே, அந்தக் குசேலரின் மனைவி சுசீலா, அவளுக்கு அவள் 'ஆர்டர்' செய்தா பகவான் இருபத்தேழு குழந்தை கள் கொடுத்தனர். இல்லையல்லவா! ஆகையால், இந்த அசட்டுத்தனமான முயற்சிகள் எதிலும் ஈடுபடவில்லை.

லோகநாதன் பீ. ஏ. படித்திருந்தும் வியாபாரஞ் செய் யத் தொடங்கினான். அவன் இருபதினாயிரம் ரூபாய் முதல் போட்டு ஓர் இரும்புக் கடை வைத்திருந்தான். சாதாரண மாக மாதம் நூற்றைம்பது ரூபாய் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு மனத் திருப்தியுடன் காலங் கழித்து வந்தான்.

அவன் காலையில் பன்னிரண்டு மணிக்குக் கடைக்குப் போவான். பிறகு நாலு மணிக்கெல்லாம் வீடு திரும்பி விடுவான். அவன் கீழ் வேலை செய்தவர்கள் அவனுக்கு எவ் விதச்சிரமமும் வைக்காமல் தாங்களே வியாபாரம், கணக்கு வழக்கு எல்லாவற்றையும் நன்றாகக் கவனித்து வந்தனர்.

லோகநாதன் கடையிலிருந்து வீடு திரும்பியதும் மனைவியுடன் கடற்கரைக்கோ, அல்லது நல்ல ஸினிமாக்

களுக்கோ, பாட்டுக் கச்சேரிகளுக்கோ போவான். இல்லா விட்டால் வீட்டிலேயே இருவரும் ஆனந்தமாகப் பொழுது போக்கிக்கொண்டிருப்பார்கள்.

இதெல்லாம் ஐந்து வருஷங்களுக்கு முன்னர். அதாவது யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர்.

யுத்தம் தொடங்கி இரண்டு வருஷம் ஆகியிருந்தபோது லோகநாதனுக்கு நல்ல வியாபாரம் நடந்தது. அவனுக்குப் பிள்ளை குட்டிகள் இல்லாமற்போனாலும் அவனது இருபதினாயிரம் ரூபாய், லட்ச ரூபாயாகக் குட்டிபோட்டது. மூன்றும் வருஷம் அந்த லட்ச ரூபாய் மூன்று லட்ச ரூபாயாகக் குட்டிபோட்டது.

லோகநாதன் கடை இப்போது ஒரு பெரிய கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது. தனக்கும் ஒரு பெரிய பங்களா சொந்தத்தில் வாங்கிக்கொண்டான். அந்த வீட்டுக்காரர் அதிலிருந்த டெலிபோனை எடுத்துக்கொண்டு போய்விடுவதாகச் சொன்னார். அதற்காக அவன் கூட ஒரு ஐயாயிரம் ரூபாய் சேர்த்துக் கொடுத்தான்.

அவன் வீட்டில் டெலிபோன் வைத்துக்கொண்டது தன் பெருமைக்காக அல்ல; வியாபார செளகரியத்தை உத்தேசித்து மல்ல. சுசீலாவுக்காகவே அவன் டெலிபோன் வைத்தான்.

தன் கணவன் இப்படி பணத்தைவாரிக்கொட்டுவதில் சுசீலா பரமசந்தோஷ மடைந்துவிடவில்லை. அவள் எப்போதும் போலவேதான் இருந்தாள். அவளுக்குத் தன் கணவனுடன் பேசிக்கொண்டு கவலையில்லாமல் இருந்தால் போதும். அதுவே சுவர்க்க போகமென்று எண்ணியிருப்பாள். ஆனால், லோகநாதன் இப்பொழுதெல்லாம் சீக்கிரமே காரியாலயத்துக்குப் போய் அஸ்தமித்துத்தான் வருவானானதால், அவனுடன் பேசிக்கொண்டிருப்பதற்காகவே டெலிபோன் வைக்கச் சொன்னாள்.

தினமும் நாலைந்து தடவையாவது சுசீலா தன் கணவனுடன் டெலிபோனில் பேசாதிருக்கமாட்டாள். அவனும்

அவளைக் கூப்பிட்டு ஏதாவது வேடிக்கையாகக் கதைகள் சொல்வான். சில சமயம் அவர்கள் மாட்டில் கால்மணி நேரம் அரைமணி நேரம் பொழுது போனதே தெரியாமல் பேசிக்கொண்டிருப்பார்கள். டெலிபோன் ஆபீஸ்காரர்கள் குறுக்கிட்டு எச்சரித்த பிறகுதான் பேச்சை நிறுத்திக் கொள்வார்கள்.

லோகநாதன் வியாபாரம் மேலும் மேலும் அபிவிருத்தியடைந்தது. அவன் இப்பொழுது இரும்பு வியாபாரத்தோடு மட்டும் திருப்தியடையவில்லை. மார்க்கெட்டில் எந்தச் சாமானுக்குப் பெரிய கிராக்கி ஏற்படுமென்று எதிர்பார்த்து அவற்றை ஏராளமாக வாங்கி 'ஸ்டாக்' செய்து வைப்பான். கர்ப்பூரம், கொய்னு, ரேடியோ இது மாதிரி எத்தனையோ சாமான்களில் அவனுக்குக் கொள்ளை லாபம். அவன் அதிருஷ்டம் கையிருப்பிலுள்ள சாமான்களை அவன் விற்ற பிறகுதான் சர்க்காருக்கு அதைப்பற்றிய விலை கட்டுப்பாடு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று தோன்றும்.

இப்படி யுத்தம் ஆரம்பித்த நான்கு வருஷ காலத்துக்குள் லோகநாதன் பத்து லட்சம் ரூபாய்வரை சேர்த்துவிட்டான். ஆனல், பணம் சேரச் சேர அவனுக்கு மேலும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசை உண்டாயிற்று. பங்குகள் மார்க்கெட்டில் புகுந்தான். ஏராளமான பங்குகள் வாங்கி விற்க ஆரம்பித்தான். அவன் தொட்டதெல்லாம் பொன்னுய் மாறிற்று.

இந்த யுத்தத்தின் பயனுய் நேற்று நம்மிடம் நாலணு கடன் வாங்கியவர்கள், இன்று குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்ப இரண்டாவது மோட்டார்கார் வாங்க 'பர்மிட்' இல்லையே என்று ஹிட்லரை வைவதைப் பார்க்கிறேம்! அப்படியிருக்க சாமர்த்தியசாலியான லோகநாதன் பெரிய பணக்காரனுனதில் ஆச்சர்யமொன்றுமில்லை. அவன் பங்கு வியாபாரம் செய்யத் தொடங்கிய பிறகு ஐம்பது லட்சம் வரையில் சம்பாதித்துவிட்டான்.

பணச் சம்பாத்தியம் அதிகம் ஆக ஆக, லோகநாதன் மனைவியுடன் முன்போல் பழகவில்லை; பழக முடியவில்லை. அதற்குக் காரணம் அவனுக்கு அவள்மீது ஆசை இல்லாததல்ல. ஆசை இருந்தது; இருப்பதாகத்தான் அவனும் நினைத்துக்கொண்டிருந்தான். ஆனால், பண ஆசை அவனை அறியாமலேயே மனைவிமீதிருந்த ஆசையை விரட்டிக்கொண்டிருந்தது. அவனுக்கு இப்போது வேண்டியதெல்லாம் பணம், பணந்தான். பதினையாயிரம் ரூபாய் இலாபம் வந்தால் "இன்றைக்கு ஒரு பதினைந்து ரூபாய் பண்ணினேன்" என்று தன் மனைவியிடமும், நண்பர்களிடமும் சொல்லிக்கொள்வதில் அவனுக்கு ஒரு ஆசை.

சுசீலா தன் கணவனிடம் ஏற்பட்டு வந்த மாறுதலைக் கவனித்து வந்தாள். அவன் இப்பொழுதெல்லாம் காலையில் ஒன்பது மணிக்குக் காரியாலயத்துக்குப் போனால் இராத்திரி பத்துப் பதினொரு மணிக்குத்தான் திரும்பிவருவான். முன்போல் டெலிபோனில் கூடப் பேசுவதில்லை. அவள் அவனை அதில் கூப்பிடும்போதெல்லாம் அனேகமாக அவன் வேறு யாருடனாவது பேசிக்கொண்டிருப்பான்.

இப்படித் தன் சந்தோஷத்துக்கு இடையூறு செய்யும் பணம் எதற்கு என்று அவளுக்கு வெறுப்புண்டாயிற்று. ஒரு சிறிய அரண்மனை மாதிரியிருந்த அவர்களுடைய பங்களாவில் அவளையும் வேலைக்காரர்களையும் தவிர வேறு யாரும் கிடையாது. ஒரு குழந்தை இருந்தாலும் பொழுதுபோகும் என்று அவள் எண்ணினாள். இத்தனை வருஷங் கழித்து இப்பொழுதுதான் குழந்தை இல்லாக் குறை அவள் மனத்தை உறுத்தியது. இராப் பகலாக விழுந்து, விழுந்து சம்பாதிக்கிறாரே, இதெல்லாம் யாருக்கு என்று எண்ணி ஏங்கினாள். மேலும், மேலும் இலாபம் வருவதால்தானே பங்குகள் வாங்கி விற்றுக்கொண்டிருக்கிறார். அதில் திடீரென்று நஷ்டம் வரும் என்று சொல்வார்களே, அப்படி நஷ்டம் வந்தால் தேவலையே என்று கூட அவள் எண்ணுவதுண்டு.

நாளாக, ஆக லோகநாதன் பணம் பண்ணிக் கொண்டே இருந்தான். அத்தனைக்கத்தனை அவனுக்கு வீட்டு விஷயத்திலும், மனைவி விஷயத்திலும் சிரத்தை குறைந்து போயிற்று. அவன் மனைவியிடம் பிரியமில்லா திருந்தானென்பதில்லை. ஆனல் முன்போல் அவளே தெய் வமாய் அவன் இருக்கவில்லை. அவனுடைய குறி எல்லாம் சர்க்கார் யுத்த நிதிகளுக்கு விளம்பரஞ் செய் வதுபோல் 'ஒரு கோடி ரூபாய்' சேர்ப்பதுதான். அந்த முயற்சியில் வெற்றியும் அடைந்துகொண்டு வந்தான்,

சுசீலா மறைமுகமாக அவன் பணப் பைத்தியத்தைக் கண்டித்து எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். அவன் கேட்கவில்லை. சுசீலா ஒரு நாள் கடைத்தெருபக்கம் போன போது ஒரு பொம்மைக் கடையைப் பார்த்தாள். அங்கே சிறிதும் பெரிதுமாக ஸெலுலாயிட் குழந்தை பொம்மைகள் இருந்தன. அவள் மனதில் என்ன தோன்றிற்றோ தெரிய வில்லை, அந்தப் பொம்மைகளுள் ஒன்றைப் பொறுக்கி எடுத்து விலைக்கு வாங்கினாள். பின்னே வந்த மோட்டார் டிரைவர் அவள் அதை வாங்குவதைப் பார்த்து ஆச்சர்யப் பட்டான். ஆனல் அவன் அதைப்பற்றி விசாரிக்கவில்லை,

லோகநாதன் பங்களாவில் சுசீலாவின் உபயோகத் துக்கென்றே இரண்டு அறைகள் இருந்தன. சுசீலா அவற் றில் ஒன்றில்தான் இப்பொழுது பொழுது போக்கலானாள். அவள் அடிக்கடி பொம்மைக் கடைகளுக்குச் சென்று பல விளையாட்டுப் பொம்மைகள் வாங்கி வருவாள். ஜவுளிக் கடைகளுக்குச் சென்று விதம் விதமான பட்டுத் துணிகள் வாங்குவாள். தையற்கடைக்குச் சென்று, எட்டு மாசக் பிள்ளைக் குழந்தைக்குப் போடும்படியாகக் கௌன்கள் தைக்கச் சொல்வாள். பிஸ்கெட், பெப்பர்மிண்ட் முதலிய தின்பண்டங்கள் பெட்டி பெட்டியாக வாங்குவாள்.

டிரைவருக்கு தன் யஜமானி இந்த சாமான்களை எல் லாம் வாங்குவது ஆச்சர்யமாயிருந்தது. அவன் இதை இரகசியமாகத் தோட்டக்காரனிடம் சொன்னான். தோட்

டக்காரன் தான் கேள்விப்பட்டதைப் பரம ரகசியமாகப் பரிசாரகனிடம் சொல்லிவைத்தான்.

பரிசாரகனுக்கு இதன் மர்மத்தை எப்படியும் கண்டு பிடிக்கவேண்டுமென்பது. ஒரு நாள் சுசீலா தன் அறைக் கதவை மறந்து சார்த்தாமல் போய்விட்டாள். பரிசாரகன் கையில் ஒரு டம்ளர் காபியை எடுத்துக் கொண்டு மெதுவாக சப்தம் செய்யாமல் உள்ளே சென்ருன். ஒருவேளை யஜமானி தன்னைப் பார்த்துவிட்டால் 'காப்பி கொண்டு வந்தேன்' என்று கூறிச் சமாளித்துக் கொள்ளலாமென்று தீர்மானித்திருந்தான்.

உள்ளே பரிசாரகன் கண்ட காட்சி அவனைப் பிரமிக்கச் செய்தது. சுசீலா மடியில் ஸெலுலாயிட் பொம்மையைப் போட்டுக்கொண்டு அதைத் தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

'சின்னஞ் சிறு கிளியே, கண்ணம்மா' என்ற பாட்டை ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்தாள். "ஏண்டா! கண்ணு தூங்கமாட்டேங்கறே. அப்பா வரணுமாடா!" என்று நடுவே நடுவே கொஞ்சினுள்.

பரிசாரகன் சிறிது நேரமிருந்து இந்தக் கூத்தைப் பார்த்து விட்டு வெளியே போய் விட்டான்.

அன்று சுசீலா தன் கணவனுக்கு டெலிபோன் செய்து "நான் ஆபீஸுக்கு வந்து பார்க்கிறேனே" என்ருள். லோகநாதன் சிறிது யோசனை செய்து விட்டு "வாயேன். இப்போ சும்மாதான் இருக்கேன்" என்ருன்.

கால் மணி நேரத்துக்கெல்லாம் சுசீலா தன் கணவன் வேலை செய்யும் அறைக்குள் இருந்தாள். அவள் அங்கே போனது இதுதான் முதல் தடவை. லோகநாதன் உயர்ந்த ரக மேஜை நாற்காலிகள் போட்டிருந்த ஒரு தனி அறையில் கம்பீரமாக அமர்ந்து டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தான். மனைவியைக் கண்டதும், அவன் புன்னகை புரிந்து அவ்வளை ஜாடை காட்டி உட்காரச் சொன்னுன். பிறகு டெலிபோன் சம்பாஷணையில் ஈடுபட்டான் :—

ஊஹூம் நிலக்கரி கறுப்பாக இருக்கிறதா? வேண்டாம். பாகிஸ்தான் மோட்டாரா! நூற்று ஐம்பத்தைந்தா? பதினாயிரம் வாங்கு. கள்ளிமலை எஸ்டேட்டா? மூங்கில் நிறைய இருக்காக்கும்! ஒரு இருபதினாயிரம் இருக்கட்டும். நாளைக்குப் பேப்பர் செய்ய மூங்கில் கிராக்கி ஏற்படுமோனா? ஆனால் அந்த மில்கள் சங்கதி என்னாச்சு? இராத்திரிக்குள்ளே பதில் வந்தாதான் எனக்குத் தூக்கம் வரும். எத்தனை மணியானாலும் எழுப்பி விஷயத்தைச் சொல்லணும். சரிதானே! ஆல்ரைட்!''

சம்பாஷணை முடிந்ததும் ''சுசீலா நானே உனக்கு ஆபீஸெல்லாம் காட்டணு மென்கிறது. நல்ல வேளை நீயே வந்தே. காண்பிக்கிறேன் வா'' என்று காரியாலயமெல்லாம் சுற்றிக் காண்பித்தார். முக்கியமான பேர்களை அறிமுகப் படுத்தி வைத்தார். அன்று அகஸ்மாத்தாக அவருக்கு அதிக வேலை இல்லாமையால் இருவரும் ஸினிமாவுக்குப் போயினர்.

அங்கே படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, சுசீலா நடுவே நடுவே படக்கதையைப் பற்றி ஏதாவது கேட்பாள். படத்திலே மனத்தைச் செலுத்தாத லோகநாதன் பதில் ஒன்றுஞ் சொல்லாமல் சிரிப்பான். அவள் ''இந்தப் பெண் நன்றாக நடிக்கிறதே'' என்று சொன்னபோது லோகநாதன் ''ஆறு தியேட்டர்களை வாங்கிவிடலாம்'' என்றான். நகரத்திலுள்ள ஸினிமாக் கொட்டகைகளை எல்லாம் ஏன் வாங்கிப் போடக்கூடாது என்று அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான். சுசீலாவுக்கு அவன் ஏதோ பணம் பண்ணுவதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறானென்று ஊகித்துதாள் அவள் அவனுடைய பணப்பைத்தியத்தைப்பற்றிக் கவலைப்பட்டாள். பிறகு இருவரும் வீடு சென்றனர்.

இராப்போஜனத்துக்குப் பிறகு படுக்கச்சென்றார்கள். சுசீலாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. தூங்குவதுபோல் படுத்துக்கொண்டிருந்தாள். இரண்டு மணி இருக்கும். டெலிபோன் மணி அடித்தது. லோகநாதன் படுக்கையில்

இருந்து ஒரே பாய்ச்சல் பாய்ந்து டெலிபோனில் குழாயை எடுத்து வைத்துக்கொண்டான். டெலிபோனில் வந்த சேதியைக் கேட்டபோது அவன் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது.

"என்ன ஆறு மில்களையும் வாங்கி விட்டாயா? இன்னொருதரம் சொல்லு. இரண்டு ஸினிமா கொட்டகைகளா! ரொம்ப பேஷ்! இந்தப் பேரத்தில் நாற்பது லட்சம் லாபமென்று சொல். பேஷ், பேஷ், பேஷ் ஹா! ஹா!!" என்று சிரித்துக்கொண்டே சொன்னான்.

இந்த விநோதமான பேச்சைக் கேட்டதும் சுசீலா படுக்கையை விட்டு எழுந்து வந்து "ஏன் இன்னும் தூக்கம் தெளியவில்லையா? சொப்பனத்திலா பேசுகிறீர்கள்!" என்று படபடப்புடன் கேட்டுக்கொண்டே டெலிபோனைப் பிடுங்கி வைத்தாள். லோகநாதன் சிரிப்பு ஓயவில்லை.

"நானா தூங்குகிறேன்? முட்டாள் பசங்கள் தூங்கிக் கொண்டிருப்பான்கள். நான் பணம் பண்ணுவேன். இன்றைக்கு ஐம்பது லட்சம் பண்ணினேன். நான் ஒரு கோடிக்கு ராஜா! நான் ராஜாதி ராஜன். நான் குபேரன்.

நானே கு...பே....ரன்!
நா னே குபே ரன்!
நா னே கு பே ர ன்."

என்று பாடத் தொடங்கினான்.

சுசீலாவுக்கு உடம்பெல்லாம் பதறிற்று. அவள் கணவனைக் கட்டிக்கொண்டு "ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? உடம்பை என்ன பண்ணுகிறது?" என்று கேட்டாள். லோகநாதன் சில நிமிஷ நேரம் புலம்பிவிட்டு ஓய்ந்தான்.

பிறகு அவன் கண்ணைத் திறந்தபோது சுசீலாவைப் பார்த்து "அம்மா! எனக்குப் பெப்பர்மிட் வேணும்." என்று குழந்தைமாதிரி சொன்னான்.

சுசீலாவுக்கு உண்மை விளங்கிற்று. ஆனால் அவள் என்ன செய்யமுடியும்? "தரேண்டா. கண்ணே!" என்று தேற்றினாள்! அவளுக்குக் குழந்தை கிடைத்துவிட்டது!

மணியின் நாய்க்குட்டி.

ச. ர.

மூன்றும் வீட்டில் குடிவந்துவிட்டார்க ளென்று தெரிந்தது. எங்கள் சமையற்காரி ஓடிவந்து விவரம் சொன்னாள்.

"வண்டி நிறைய சாமான்க. கொழுந்தக ஒண்ணுமில்லே, ஒரு நாய் இருக்கு" என்றாள்.

பிற்பாடு நான் சாயங்காலம் வெளியே போகும்போது அந்த நாயைப் பார்த்தேன். அவர்களுடைய தோட்டத்து கேட்டினருகில் அது உட்கார்ந்திருந்தது. "நமது மணியுடன் விளையாடும்" என்று நான் மனதிற்குள் நினைத்துக் கொண்டேன். குழந்தைகள் ஒரு வாயில்லா ஜீவனுடன் பழகுவது நல்லது.

நான் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் சமையற்காரி மறுபடி ஓடிவந்தாள்.

"ஐயோ, அம்மா, அது எத்தனை பெரிய நாய்! எம் பேரிலே தாவித்து! என்னைக் கடிக்கவந்துடுத்து. நான் தப்பிச்சுண்டு ஓடோடி வந்தேன்" என்றாள்.

"அது கடிக்க வந்திருக்காது. சும்மா சினேகம் செய்துகொள்ளப் பாத்திருக்கும்" என்றேன் நான். இருந்தும் என்னுடைய மனதிற்குள் சிறிது சந்தேகம்தான். பெரிய நாயுடன் மணியால் பழகமுடியுமா, அதை நம்பலாமா என்று தோன்றலாயிற்று.

"நாமே நேரில் பார்க்கலாம்" என்ற எண்ணத்துடன் மறுதினம் பிற்பகல் மூன்றும் வீட்டை நோக்கி மெதுவாகச் சென்றேன்.

நான் வருவது தெரிந்து அந்த நாய் அவர்களுடைய கேட்டண்டை தயாராகக் காத்திருந்தது. ஒரு பெரிய நாய், நீண்டு தொங்கும் காதுகள், நெருப்புப்போன்ற சிவந்த கண்கள், பற்களோ ஒவ்வொரு இஞ்சு நீளமிருந்தன. நாய்களைக் கண்டாலே எனக்கு உள்ளூரப் பயந்தான். கையில் அச்சமயம் ஒரு சிறு குச்சிகூட இல்லை. அந்த நாயோ என்னை வரவேற்க ஆவலாய்த் தாவிற்று.

"ச்சு, ச்சு, ப்பூ, ப்பூ!" என்று நான் அர்த்தமற்ற வார்த்தைகளைச் சொன்னேன். அதைச் சமாதானப்படுத்துவதாக என்னுடைய மனதிற்குள் எண்ணம். அதுவோ என்னுடைய சப்தங்களைக் கேட்டுவிட்டு இன்னும் ஆவலாக என்பேரில் தாவிற்று.

வீட்டுக்கார அம்மாள் ஓடிவந்தார். அவரைப் பார்த்தால் நல்லவராகத் தோன்றிற்று. நாயை அதட்டினார். அது கீழே படுத்தது.

"உங்களுக்கு நாய்களைக்கண்டால் பிடிக்கிற மாதிரி இருக்கிறது. இது சின்னக்குட்டி. அதனால்தான் இவ்வளவு ஆவலும், வேகமும், துடிதுடிப்புமாக இருக்கிறது. சற்றுப் பழக்கினால் அடங்கிவிடும்" என்றார் அந்த அம்மாள்.

சின்னக் குட்டி இவ்வளவு பெரிதாக இருந்தால், பிறகு வயதான பிறகு எவ்வளவு பெரிதாகும் என்று நான் எண்ணலானேன். அந்த நாயின் கழுத்துப் பட்டையின்பேரில் அவர் கையை வைத்துக்கொண்டே இருந்தார். அதுவும் அடங்கி இருந்தது. நாங்கள் ஊர் விஷயமெல்லாம் சிறிது நேரம் பேசினோம்.

"எங்கள் வீட்டில் ஒரு சின்னப் பெண் இருக்கிறாள்" என்றேன் நான்.

"ரொம்ப நல்லது. தாராவுடன் விளையாடலாம்" என்றார் அவர்.

"உங்களுக்குக் குழந்தை இருக்கிறதா?" என்று நான் கேட்டேன்.

அவர் பெரிதாகச் சிரித்துவிட்டு, "இல்லை, இந்தக் குழந்தையைத்தான் சொன்னேன். இந்த நாய்க் குட்டிக்குத் தாரா என்று பெயர். உங்கள் குழந்தையை வரச்சொல்லுங்கள். தாராவுடன் தாராளமாய் விளையாடலாம். அதற்குக் குழந்தைகளைக் கண்டால் பிடிக்கும்" என்றார்.

தாராவின் பற்களைப் பார்த்த சமயம், "ஆமாம், கடித்துத் தின்னப் பிடிக்கும்." என்று நினைக்கும்படி இருந்தது.

வீட்டிற்குச் சென்றபின் எங்கள் மணிக்கு நான் கொஞ்சம் கொஞ்சமாய் நாய்களிடம் நம்பிக்கை உண்டாக்கப் பார்த்தேன். நாய்க்குட்டிக்குத் தான் எவ்வளவு பெரிதாக இருக்கிறோமென்பதே தெரியாது, அது தாவி விளையாட வருவதை நாம் தப்பாக நினைக்கக்கூடாது என்றெல்லாம் விளக்கப்பார்த்தேன். ஆனால் சுபாவமாக உண்டாகாத நம்பிக்கையை நமது பேச்சினால் உண்டாக்குவது சிரமம். என்னுடைய முயற்சி அதிகம் பலிக்கவில்லை; ஒருதினம் அவள் பள்ளிக்கூடத்திலிருந்து வருகையில் இந்த நாயை நடு வழியில் சந்தித்தாளாம். அது என்ன செய்ததோ தெரியாது, அலறிக்கொண்டு ஓடி வந்தாள். அவளுடைய அழுகையைச் சமாதானம் செய்த அரைமணிக்கப்புறம்கூட அவளுடைய மார்பு படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது என்பது குழந்தையின் சட்டையின் துடிதுடிப்பினால் தெரிந்தது.

இதற்கு ஏதாவது வழி செய்தாகவேண்டுமே என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. அடுத்து இருக்கும் வீட்டின் நாயுடன் அடிக்கடி சந்திப்பு ஏற்படுவது சகஜம். ஒவ்வொரு முறையும் குழந்தை இப்படிப் பயந்தாளானால் அவளுடைய இருதயம் என்னவாகும்!

இரண்டு தினத்திற்கப்புறம் அவளை நல்ல வார்த்தை சொல்லி, "வாம்மா, நாம் அந்த வீட்டு நாய் தாராவைப்

போய்ப் பார்த்துவிட்டு வரலாம்" என்று அழைத்துச் சென்றேன். மணிக்கு வருவதில் இஷ்டமில்லைதான். அரை மனதுடன் வந்தாள்.

அந்த வீட்டு அம்மாமி எங்களை அந்த நாயைக் கட்டியிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

"எல்லாருக்கும் தாராவைக் கண்டால் பிடிக்கும். அதனுடன் சற்றுப் பழகவேண்டியது, அவ்வளவே என்றார் அந்த அம்மாமி. "அது கடிக்க வராப்போல் இருக்குமே தவிர, இதுவரை எவரையும் கடித்தது கிடையாது" என்றார்.

இதெல்லாவற்றையும் நான் மணிக்கு விளக்க முயன்றேன். நாயை நேரில் பார்க்குமுன்பு அதனிடம் நம்பிக்கை உண்டாக்க முயன்றேன்.

"ஆமாம்மா, ஆனும்மா ...." என்று என்னுடைய தலைப்பைப் பிடித்துக்கொண்டு குழறினள் மணி. உள்ளத்தில் உண்டாகும் பயத்தை விளக்குவது எப்படி?

நாயைப் பார்க்கச் சென்றோம். அது ஒரு பெரிய சங்கிலி போட்டுக் கட்டப்பட்டிருந்தது. அந்தச் சங்கிலியை ஓசைப்படுத்திக்கொண்டு தாரா எழுந்து எங்களைப் பார்த்துப் பல்லைக் காண்பித்தது. மணி எனக்குப் பின்னல் ஒளிந்துகொண்டுவிட்டாள். நாயைச் சிநேகம் செய்து கொள்ளும் எண்ணத்துடனும், மணிக்குத் தைரியம் உண்டாக்குவதற்காகவும், அன்று அதற்குக் கொடுப்பதற்காக வைத்திருந்த எலும்புத் துண்டை அதனிடம் எறிந்தேன். தாரா அதை எடுத்துப் பற்களிடை வைத்து நறநறவென்று கடித்து ஒரு வினடியில் பொடி செய்துவிட்டது. அந்த எலும்பு முதலில் இரண்டிஞ்சு பருமனிருந்தது. இதைக் காணவே எனக்குக் காப்ரா ஏற்பட்டுவிட்டது. அட ராமா! ஒரு மிருகத்தின் எலும்பை இப்படிக் கற்கண்டுபோல் கடித்துப் பொடிசெய்துவிட்டதே, ஒரு குழந்தையின் கை அதன் வாயில் அகப்பட்டால் என்னவாகும் என்று எண்ண

லானேன். மணியை நோக்கினேன். அவளுக்கும் இதே எண்ணம் தோன்றினாப்போலிருக்கிறது. தனது கைக ளிரண்டையும் பின்னால் ஒளித்துக்கொண்டிருந்தாள்.

வீட்டிற்குச் சென்றதும், "இப்ப பார்த்தயா, மணி, அது நல்ல நாய்தானே! நாம் பயப்படவே வேண்டியதில் லையே!" என்றேன். நான் சொன்னதை மணி காதில் வாங்கிக்கொள்ளவே யில்லை.

"இப்ப நல்ல வேளையா லீவு விட்டுட்டாங்க. பள்ளிக் கூடம் இல்லேங்க. நம்ப மணி வீட்டோடு இருக்கலாம். ஆனால் இஸ்கூல் தெறந்தாச்சுன்னா நெதமும் நம்ப கொழந்தே அந்த வீட்டு நாயைத்தாண்டி இஸ்கூல் போகா தூங்க. இஸ்கூல் போறதை நிறுத்தத்தான் வேணும். வேறு வழி இல்லேங்க" என்றாள் எங்கள் சமையற்காரி.

எனக்கோ என்னுடைய பயம் வேறு, குழந்தை பயப் படுகிறதே அதனால் அதன் மனது கெட்டுவிடப்போகிறதே என்ற கவலை வேறு. பள்ளிக்கூடம் திறப்பதற்குள் இதற்கு ஏதாவது வழி செய்யவேண்டுமே என்ற சிந்தனை யில் இருந்தேன். இதைப்பற்றிப் பலதினம் யோசிக்கை யில் ஒரு எண்ணம் தோன்றிற்று. தாராவின் பேரில் பிச கில்லை. அது ஒரு நல்ல நாய், ஆனால் அதைப்பற்றி எங் களுக்கு இருக்கும் பயத்தினால் அத்துடன் சரியாகப் பழக முடியவில்லை. ஆகையால், எங்களுக்கு நாய்களிடம் பழகு வது ஏற்பட்டுவிட்டால் பிறகு எல்லா நாய்களும் ஒரே மாதிரியாகையால் தாராவும் பழகிவிடும். ஆகையால் ஒரு சின்ன நாயுடன் முதலில் பழக்கம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைக்கலானேன்.

"மணி, மணி, ஒரு இரகஸ்ய சமாசாரம் சொல்றேன், கேள். உனக்காக அப்பா ஒரு சின்ன, பட்டு நாய்க்குட்டி கொண்டுவரப் போறார்" என்றேன்.

"பொம்மை நாய்தானே?" என்றாள் மணி.

“இல்லே. நிஜ நாய். அதற்கு ஒரு சின்னவால் இருக்கும். சுருட்டிண்டு காது இருக்கும். சின்னதாய் நாலு கால் இருக்கும். அது உன்னோடு கூடவே இருக்கும். நீ எங்கே போனாலும் உன்னோடு வரும்” என்றேன் நான்.

மணி சிறிது அவநம்பிக்கையுடனே தான் நான் சொன்னதைக் கேட்டாள். ஆனால் தினமும் நான் சொல்லிச் சொல்லிக்கடைசியில் அவளுக்கு அந்த எண்ணம் பிடித்து விட்டது.

“அம்மா, வந்து அதுக்குப் பேர் என்ன தெரியுமா, வந்து, புப்பூன்னு பேர் அம்மா.

அப்பறம் அம்மா, வந்து, அதுக்கு நான்தான் சாதம் கொடுப்பேன். வேறே ஒத்தரும் கொடுக்கக்கூடாது. இதைக் கேளேன், அம்மா! அது என்னோடு கூடவே ரோட்டில் நடந்து பள்ளிக்கூடத்துக்கு வரும். ஆனா உள்ளே வராது. வாத்யார் கோச்சுப்பார். அது நா வர வரைக்கும் வெளியேயே காத்திண்டிருக்கும்” என்று மணி சொல்லிக்கொண்டே இருந்தாள்.

இதைப் பற்றி எல்லாம் நினைக்கையில் அவளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லே. ஏன் பள்ளிக்கூடம் போகையில் துணைக்குத் தன்னுடன் தனது நாய்க்குட்டியும் வரவேண்டுமென்று ஆதியில் நினைத்தாளோ அந்தக் காரணத்தையும் மறந்துவிட்டாள். தாராவின் பயத்திற்காகவல்ல, புப்பூவிடம் அன்பினால் அது தன்னுடன் வரவேண்டுமென்று விரும்பினாள். உள்ளத்தில் ஏற்பட்ட அன்பினால் பயத்தை மறந்தாள். இதுவே நாங்கள் விரும்பியது.

கடைசியில் இவ்வளவு நாட்கள் எதிர்பார்த்த நாய்க்குட்டியும் வந்தது. அதன் வர்ணம் தேன் போன்றது. கண்கள் பொன்னிறக் கோலிகள் போலிருந்தன. அதனுடைய சாந்தமான சிறு முகத்தின் இரு புறமும் இரண்டு

காதுகளும் சுருண்டு தொங்கின. இவ்வளவு அழகிய சிறிய நாயைக் கண்டால் பிடிக்காதவர் எவருமே இருக்கமாட்டார். மணிக்குப் பேசவே முடியவில்லை. சந்தோஷ மிகுதியால் அவளுடைய சிறிய உடல் முழுவதும் துடித்தது.

"இது என் நாய்க்குட்டி.ேநக்கே ேநக்கு" என்றாள்.

ஆனல், ஐயோ, பாவம், ஒரு நிஷ்டூரமான விஷயம் நடந்தது. புப்பூ தனது சிறிய முன்னம் கால்களைத் தூக்கி எனக்குக் காண்பித்தது. மணியைப் பார்க்கும்போதோ, அவளே அங்கே இல்லைபோலும், அவளிருக்கும் இடத்தில் வெறும் ஆகாயமே இருப்பதுபோலும் பார்த்தது!

என்னைப் பார்த்துச் சிரித்தது, வாலை ஆட்டிற்று, அதற்கு என்பேரில் பிரியம் என்பதைத் தெளிவாய்க் காண்பித்தது. நான் அதை விறைத்துப் பார்த்தேன். பயனில்லை. அது திரும்பத் திரும்ப என்னிடமே வந்தது. மணியையோ ஒரே அலக்ஷியத்துடன் புறக்கணித்துவிட்டது.

"இதுக்கு இன்னும் குழந்தைகள் பழகவில்லை, மணி. என்னைப் பார்த்தால் அவாத்தில் அதுக்கு இதுவரை சாப்பாடு போட்ட அம்மாமி மாதிரி இருக்கு. அதனால்தான் என்னிடம் வருகிறது" என்றெல்லாம் மணிக்குச் சமாதானம் சொன்னேன். அவள் முகத்திலிருந்த ஏமாற்றத்தைப் பார்க்க என்னால் சகிக்கவே முடியவில்லை.

பல தினங்கள் பழகியும் புப்பூ மணியுடன் சேரமாட்டேனென்று விட்டது. அவளோ, பாவம், தனது சிறிய இருதயம் முழுவதையும் அதற்கு அர்ப்பணம் செய்திருந்தாள். அவள் ஆகாரம் கொடுத்தால் இது சாப்பிடும். ஆனல், ஒரு வேலைக்காரி ஆகாரம் அளிப்பதை எஜமானன் அருந்துவதுபோல் சாப்பிடும். அவள் "புப்பூ, புப்பூ" என்று அருமையாய்க் கூப்பிடுவாள். இது தலையைத் திருப்பிப் பார்த்துவிட்டு, யாரோ தவறுதலாக அழைத்துவிட்ட மாதிரி மறுபடி தலையைத் திருப்பிக்கொண்டு தான் செய்து

கொண்டிருந்த வேலையில் ஈடுபடும். மணி விஷயத்தில் தனக்கு விரோதம் எதுவுமில்லை, ஆனால் அவளுடைய சினேகம் தனக்கு வேண்டியதில்லை என்று அது மிகவும் தெளிவாகக் காண்பித்தது.

இது மணிக்கு ஒரு புது அனுபவம். இதற்குமுன்பு எப்போதும் எல்லாரிடமிருந்தும் அவளுக்கு அன்பும் ஆதரவுமே கிடைத்திருந்தது. எங்குத் திரும்பினாலும் யாரைப் பார்த்தாலும் இவளைச் சீராட்டுபவர்களாய் இருந்தார்கள். இப்பொழுதோ, இந்தச் சிறிய ஜந்து, இவள் முழு மனதுடன் அன்பு செலுத்தும் ஜந்து இவளை நிராகரித்துவிட்டது.

மணி, தனது ஏமாற்றத்தை வெளிக்குக் காண்பிக்காமலிருக்க முயலுவாள்.

“அது ரொம்ப விஷமம் செய்யறது, அம்மா! எப்போதும் விஷமம் பண்ணிண்டேருக்கு. அதான் எங்கிட்டே வல்லே” என்பாள்.

ஆனால் ஒரு தினம் படுக்கையில் படுத்தபின் என்னுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு காதோடு இரகஸ்யமாய் “அம்மா, புப்பூ, புப்பூ—” என்று மேல் சொல்ல முடியாமல் தேம்பினாள். உள்ளத்தின் துக்கம் பொங்கி உடைந்து வெளிவந்தது.

பங்குனி மாதம் ஒரு தினம். காலையில் நான் ஜன்னல் வழி வெளி நோக்கினேன். தோட்டத்தில் மூடு பனியின் நடுவில் ஓரிடத்தில் வெயில் விழுந்தது. புப்பூ அந்த வெளிச்சத்தில் விளையாடிக்கொண்டிருந்தது. ஏதோ கண்ணுக்குத் தெரியாத வஸ்துவை இது பிடிக்க முயலுகிறமாதிரி துள்ளித் துள்ளித் தாவிற்று. தனது முன்னம் கால்களிரண்டையும் தூக்கிச் சுழன்று நர்த்தனமாடிற்று. பிறகு ஏதோ ஒன்றைத் தாவித் தொட்டுவிட்டு அதனிடமிருந்து பின் வாங்கித் தப்பித்துக்கொள்வதுபோல் துள்ளிற்று. தனக்குள் சிரித்துக்கொண்டு மறுபடியும் மறுபடியும் துள்ளிற்று.

இந்த ஆட்டத்தைப் பார்க்க ஒரு மௌன உருவம் வந்தது. மூன்ருவது வீட்டிலிருந்து தாரா கம்பீரமாய் நடந்து வந்து தானும் புப்பூவுடன் விளையாடலாமா என்கிற பாவனையாய் அதை நோக்கிற்று. தாராவைக் கண்டதும் புப்பூ தனது ஆட்டத்தை நிறுத்திவிட்டுக் கீழே படுத்தது. உடனே தாரா மிகக் கௌரவத்துடன் பின்வாங்கி பத்தடி தூரம் சென்று நின்றது. புப்பூ மறுபடி விளையாடலாயிற்று.

"அந்த நாய் எவ்வளவு அழகாயிருக்கிறது? பொறுமையும் கம்பீரமும் நான்தான் என்கிற பாவனையாய் ஒரு வெள்ளி விக்ரகம் போல் நிற்கிறதே" என்று நான் மனதிற்குள் எண்ணலானேன்.

இதே விதம் பலதினம் காலை வேளையில் நடந்தது. வீட்டு மனிதர் வெளி வருமுன் புப்பூ தோட்டத்தில் ஓடித் தனிமையில் விளையாடும். தாரா தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டே இருக்கும்.

ஒரு தினம் நான் இக் காட்சியை ஜன்னல் வழியாய் பார்த்துக்கொண்டே இருக்கையில் சிறிய பாவாடை கட்டின குழந்தை ஒருத்தியும் மெதுவாகப் படி இறங்கித் தோட்டத்தில் வந்து புப்பூவைப் பார்க்கலானுள். தாரா நிற்பது போலவே இவளும் தூர நின்று ஏக்கமும் அன்பும் ததும்பப் பார்த்திருந்தாள். புப்பூவோ தாராவை நிராகரித்த விதமே மணியையும் நிராகரித்து, தான் மாத்திரம் துள்ளித் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தது. ஏதோ கண்ணுக்குத் தெரியாத வஸ்துவை வேட்டையாடுகிறமாதிரி தாவி, சீறி, சுற்றி, பின்வாங்கி, சுழன்று, தனக்குள் சிரித்து ஏதேதோ கற்பனையில் ஆழ்ந்திருந்தது.

புறக்கணிக்கப்பட்ட எங்கள் மணி, தனது உள்ளத்தின் வேதனையில் தாராவிடம் தான் முன்பு கொண்டிருந்த பயத்தை மறந்துவிட்டாள். தாராவின் பக்கத்தில் அவளும் உட்கார்ந்து புப்பூவின் விளையாட்டைப் பார்க்கலானுள்.

அந்தப் பெரிய நாயும், இந்தப் பெண் குழந்தையும் ஆவலுடன் புப்பூவைப் பார்ப்பதும், அந்தக் குட்டி நாய் புப்பூ இவ்விருவரையும் அலக்ஷியம் செய்து தான் மட்டில் விளையாடிக்கொண்டிருப்பதுமாக இருந்தது.

நின்றுகொண்டே இருந்த தாராவிற்குக் கால் வலிக்கவே, அது தனது முன்னங்கால்களை நீட்டிக்கொண்டு மணியின் பக்கத்தில் படுத்துத் தனது தலையை மணியின் மடியில் வைத்தது.

மணி அலறிக்கொண்டு வீட்டிற்குள் ஓடி வருவாள் என்று நான் நினைத்தேன். அதற்கு மாருக அவள் மெதுவாகத் தனது சிறிய கரத்தினல் தாராவைத் தடவிக்கொடுத்தாள். ஒரு நாய் குட்டியைத் தடவ வேண்டுமென்று வெகு நாட்களாய்த் துடித்த கரமல்லவோ அது!

முதலில் தயக்கத்துடன் தடவின கை மறுமுறை தடவும் சமயம் தைரியமாகத் தடவிற்று.

“போனப்போரது, தாரா. புப்பூ உன்னேடு விளையாடல்லேன்னு வருத்தப்படாதே, கண்ணு. அதுக்கு உன்னேடு பழக்கமில்லே. பழகின அப்பறம் விளையாடும்” என்று தாராவைத் தேற்றினள்.

நிஷ்கரிக்கப்பட்ட இவ்விருவருக்கும் ஒருவர் உள்ளம் மற்ருருவருக்கு நன்கு தெரியலாயிற்று.

பள்ளிக்கூடம் திறந்து மணி மறுபடி புத்தகம் எடுத்து ஸ்கூல் சென்ற சமயம் ரஸ்தாவில் அவளுடைய பக்கத்தில் நடந்து துணை செல்ல ஒரு நாய் தயாராக இருந்தது.

ஆனல் அதன் பெயர் புப்பூ அல்ல, தாரா.

(ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்ப்பு. Miss Boo என்ற நாவலிலிருந்து ஒரு அத்யாயம்)

ரத்த பாசம்.

கினஜா

"ஜயா! நீ தோற்றுவிட்டாய்! நம் பந்தயப்படி இப்போது நீ நான் சொல்கிறபடி கேட்க வேண்டும்."

"என்ன செய்யவேண்டும்? சொல்லு கேட்கிறேன்" என்றுள் ஜயா. 'செஸ்' விளையாட்டில் எனக்கும், அவளுக்கும் ஏற்பட்ட போட்டியில் 'நான் வெற்றி பெற்றால் என் சொல்படி அவள் கேட்பது; அவள் வெற்றி பெற்றால் அவள் சொல்படி நான் கேட்பது' என்று முடிவு செய்து கொண்டிருந்தோம். நான் வெற்றி பெறவே, வெகு நாட்களாக நான் வற்புறுத்தியும் சொல்ல மறுத்து வந்த அவள் சரிதத்தைச் சொல்லும்படி வற்புறுத்தினேன். வேறு வழியின்றி அவள் சொல்லலுற்றுள் :—

"தஞ்சாவூரில்தான் சந்துக்கு இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்களே? அந்தப் படித்த முட்டாளுக்கு இது கூடவா தெரிய வேண்டாம்? அவன் தொழிலை நடத்த இந்த ஊரைத்தாஞ பிடிக்க வேண்டும்? அவனைச் சொல்வானேன்; இந்த ஜனங்களும் பழகினவனை மறந்து அவனிடமே போய் விழுகிறார்களே! அதைச் சொல்லு!" என்று என் அம்மாவிடம் ஒருநாள் இரைந்துகொண்டிருந்தார் என் தந்தை.

பம்பாயிலிருந்து வந்துள்ள ஒரு புதிய டாக்டர் மேல வீதியில் இன்னொரு 'டிஸ்பென்ஸரி'யைத் திறந்திருப்பதே என் தந்தையின் கோபத்திற்குக் காரணம். 'என் தந்தைக்குப் போட்டியாக ஒரே தெருவில் இன்னொரு 'டிஸ்பென்ஸரி'யா? அந்த டாக்டர் ஒரு முட்டாள்!' என்று எண்ணினேன். ஆனல், அன்று மாலை நான் படிக்கும் 'கலியாண சுந்திரம் ஹைஸ்கூலில்' மாணவிகளிடையே நடந்த சம்பாஷணை அந்த எண்ணத்தை அகற்றியது.

"விமலா! உனக்கென்னடி உடம்பு?"

"உனக்குத் தெரியாதாடி? அவளுக்குத்தான் கழுத்தில் கட்டி புறப்பட்டு 'ஆபரேஷன்' செய்ததே! ஏண்டி விமலா! உனக்கு ஜம்புதானே 'ஆபரேஷன்' செய்தது?"

"அதாரடி அந்த ஜம்பு?"

"உனக்குத் தெரியாதா? பம்பாயிலிருந்து புதிசா வந்திருக்கிருரே அவர்தான்."

"அவர் ரொம்பப் பணம் கேட்பாரே? சும்மா பரீக்ஷை செய்து பார்ப்பதற்கே ரூபா ஐந்து கொடுத்துவிட வேண்டுமாமே?"

"சே! சே! அவர் ரொம்ப நல்லவரடி; பணக்காரர்களிடத்தில்தான் பணம் நிறைய வாங்குகிருர்; எத்தனை ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம் செய்கிருர் தெரியுமா? நல்ல கைராசிக்காரர்; அதோடு சிரித்த முகம்; கச்சிதமாக இரண்டொரு வார்த்தைதான் பேசுவார்" என்று விஸ்தரித்தாள் விமலா.

"ஆமாண்டி; நேற்று என் அண்ணுகூடச் சொன்ஞன்: அவர் அழகைக் கண்டே ஜனங்கள் அவரிடம் வைத்தியம் செய்துகொள்ள ஆசைப்படுகிருர்களாய்! அவருக்கு இன்னும் கலியாணம்கூட ஆகவில்லையாம். விமலா புகழுவதைப் பார்த்தால்...." என்று கண்ணைச் சிமிட்டிஞள் கமலா.

"போதுமடி, நிறுத்து" என்று சொல்லிக் கோபமாக எழுந்து போய்விட்டாள் விமலா.

அந்தச் சம்பாஷணைக்குப்பின், 'அவர் முட்டாள்' என்ற எண்ணத்தை விட்டுவிட்டேன். ஆஞல், அவர் என் அப்பாவுக்குப் போட்டியாக அதே தெருவில் தொழிலை ஆரம்பித்திருப்பது மட்டில் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. வர வர அவர் புகழ் அதிகமாக, அதே தெருவிலிருக்கும் என் தந்தையின் புகழ் மங்கிக்கொண்டே

வந்தது. என் தந்தையின் மனக் கவலை அதிகமாயிற்று. எங்கே கவலையால் அவரும் படுக்கையில் விழுந்து விடுவாரோ என்று நான் பயந்தேன். ஏன் அந்த டாக்டரை நேரில் கண்டு, 'நீங்கள் செய்வது ரொம்பத் தவறு' என்று சொல்லக்கூடாது? என்று எண்ணினேன். உண்மையில் அவர் நல்லவராக இருக்கும் பக்ஷத்தில் தன் 'டிஸ்பென்ஸரி'யை வேறு ஊருக்கு மாற்றிக்கொண்டு விடலாம். ஆகையால், நானே அவரை நேரில் கண்டு இதைச் சொல்லி விடுவது என்ற முடிவிற்கு வந்தேன்.

ஆண்பிள்ளைகளைக் கண்டு கதவிடுக்கில் மறைந்து கொள்வது; மனதில் உள்ளதைச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு தரையை நகத்தால் கீறுவது; நாணிக் கோணிக் கொண்டு தலைப்பை வருடுவது, மனதிற்குப் பிடிக்காத ஒருவனை மணந்துகொள்ளமாட்டேன் என்று சொல்லத் தைரியமின்றி அழுது சாவது, இவைகள் எல்லாம் பெண்களின் கோழைத்தனமான செய்கை என்பதே என் அபிப்ராயம். ஒரு சமயம் என் அப்பா அவர் நண்பர் பிள்ளை கிட்டுவுக்கு என்னைக் கொடுப்பது என்று முடிவு செய்தார். நான் தைரியமாய் அப்பாவிடம், "அப்பா! அந்தக் கிட்டுவிடம் எனக்குக் கொஞ்சமும் காதல் ஏற்படவில்லை! சகோதர வாஞ்சைதான் ஏற்படுகிறது" என்று சொல்லி மாலைமாற்றி நிச்சயதார்த்தமான விவாகத்தையே நிறுத்திவிட்டேன். இப்படியே நான் ஒவ்வொரு காரியத்திலும் தைரியமாய் நடந்துகொள்ளப் பின்வாங்கியதில்லை அவ்விதமே டாக்டர் ஜம்புவைச் சந்திக்கவும், அவர் செய்யும் குற்றத்தை எடுத்துச் சொல்லிவிடவும் துணிந்தேன்.

நான் உள்ளே நுழைந்த சமயமும், டாக்டர் வெளியே போகப் புறப்பட்ட சமயமும் சரியாக இருந்தது. நான் எவ்வளவோ தைரியசாலியாய் இருந்தும் ஒரு க்ஷணம் ஸ்தம்பித்து விட்டேன். பட் பட் என்று என் நெஞ்சு அடித்துக் கொண்டது. விமலா சொன்னபடியே அவர் அதிரூபவானாக இருந்தார். நான் என் தைரியத்தைப் புதுப்பித்துக்

கொண்டு அவருக்கு வந்தனமளித்துவிட்டு அங்குள்ள நாற்காலி யொன்றில் உட்கார்ந்தேன்.

திகைப்புடன் என்னை ஏற இறங்கப் பார்த்த டாக்டர், ரப்பர்க் குழாயைக் காதில் மாட்டிக்கொண்டு என் நாடியைப் பரீக்ஷிக்கத் தொடங்கினர். நான் சிரிப்பை அடக்கிக் கொண்டு பேசாமல் இருந்தேன். அவர் பரிசைஷ முடிந்து மருந்து எழுதத் தொடங்கினர். நிமிர்ந்த நான் என் எதிரில் மாட்டியிருந்த ஒரு படத்தைக் கண்டு திடுக்கிட்டேன். எங்கள் வீட்டில் என் தந்தையின் அறையில் அதேமாதிரிப் படமொன்று மாட்டி இருந்தது. அது தன் சகோதரனின் படமென்று என் தந்தை சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனல், நான் அவரைப் பார்த்ததில்லை. அப் படத்திலுள்ளவருக்கும், இப்படத்திலுள்ளவருக்கும் வயதில் வித்யாசமிருந்தபோதிலும், இரண்டும் ஒருவர் படமே என்பது நன்ருய் விளங்கிற்று.

அப்போது டாக்டர் ஜம்பு என்முன் மருந்துச் சீட்டை நீட்டவே நான் சிரித்துக்கொண்டே, "நான் உங்களிடம் சிகித்சை பெற வரவில்லை! ஒரு முக்கியமான விஷயத்தை உங்களிடம் சொல்லிப்போகவே வந்தேன். என்னைக் கேட்காமலே நீங்களாகப் பரீக்ஷிக்கத் தொடங்கி விட்டீர்கள்!" என்றேன்.

அவர் முகம் அசடு தட்டிற்று; அடுத்த நிமிஷம் அது கோபமாக மாறியது: தம் கையிலிருந்த மருந்துச் சீட்டைக் கசக்கி எறிந்தார்.

அவர் செய்கை எனக்கு மேலும் சிரிப்பை உண்டாக்கிற்று. நான் மெள்ளப் பேச்சை மாற்ற எண்ணி, "இவர் உங்கள் தந்தையா?" என்றேன் அப்படத்தைச் சுட்டி காட்டி.

"ஆமாம்; நீங்கள் வந்த விஷயம்?" என்ருர் கோபத்துடன்.

நான் சட்டென்று எழுந்து, "இப்போது சமயம் சரி யில்லை; நான் வந்ததே தவறு. நாளை வருகிறேன்" என்று சொல்லிவிட்டு விர்ரென்று நடந்தேன்.

வீட்டிற்கு வந்ததும் அந்த 'போட்டோ'வைக் கொண்டுவந்து என் தந்தையிடம் காட்டி, "அப்பா! இவர் உங்கள் அண்ணவா? இவர் இப்போது எங்கே இருக்கிறார்" என்றேன்.

"அது பெரிய கதை; அதைப்பற்றி இப்பொழுது என்னத்திற்கம்மா?" என்றார்.

நான் விடவில்லை. "அந்தக் கதையைத்தான் சொல்லுங் களேன்" என்று வற்புறுத்தினேன்.

அவர் சொன்னார்:— "நான் ரொம்பச் சின்னவனாக இருக்கும்பொழுதே அவன் என் அப்பாவுக்கு இஷ்டமில் லாத ஒரு பெண்ணை மணந்துகொண்டு, அதனால் அவருடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு வேட்டகத்தோடு போய்விட் டான். அவன் மைத்துனன் பம்பாயில் பெரிய வேலையி லிருப்பதாயும், அவன் சிபார்சில் இவனுக்கும் பம்பாயி லேயே வேலை கிடைத்துவிட்ட தென்றும் தெரிந்தது. அவ் வளவுதான். அதன்பின் அவனைப் பற்றிய தகவலே இல்லை" என்றார்.

நான், "அப்பா! உங்கள் அண்ணவுக்கு ஒரு பிள்ளை இருக்கிறார்! அவர் உங்களைத் தேடிக்கொண்டு இந்த ஊருக்கு வந்திருக்கிறார்!" என்றேன். உடனே அவர், "என்னம்மா, உளறுகிறாய்? என் அண்ண பிள்ளையாவது, என்னைத் தேடிக்கொண்டு வரவாவது?" என்றார்.

நான் எல்லாம் விபரமாகச் சொன்ன பிறகுதான் அப்பா, விஷயங்களை ஒருவாறு புரிந்துகொண்டார்.

அன்று இரவு தூக்கத்தில்கூட டாக்டர் ஜம்புவின் நினைவுதான் எனக்கு. மறுநாள் நானும், அப்பாவுமாக ஜம்பு

நாதன் வீட்டிற்குச் சென்றேம். முதலில் எங்களை அலக்ஷிய மாக வரவேற்றவர் என் தந்தை அவர் 'சித்தப்பா' என்று தெரிந்ததும் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்தார். "சித் தப்பா! நான் உங்களுக்குப் போட்டியாகக் கிளம்பினதாக நினைத்தீர்கள் அல்லவா? இனி நீங்கள் உங்கள் தொழிலையே விட்டு விடுங்கள். நான் இருக்கும்போது நீங்கள் ஏன் கஷ்டப்படவேண்டும்?" என்றார்.

அதுவரை அவரைக் கண்டபடி வைதுகொண்டிருந்த என் அப்பாவும், இப்போது அவர் எது சொன்னாலும் கேட்கத் தயாரானார். பாவம்! 'ரத்த பாசம்' சாமான்யமானதா? என்று எண்ணினேன்.

இரண்டு தினங்கள் சந்தோஷமாகக் கழிந்தன. ஆனால் அன்று காலை முதலே என் மனம் ஒரு நிலையின்றித் தவித்துக்கொண்டிருந்தது. அன்று மாலை எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். டாக்டர் ஜம்பு நாதன் சொன்னார் :— "இதைக் கேளுங்கள் சித்தப்பா! அன்று ஜயாவைப் பார்த்ததுமே என்னையறியாமல் என் மனதில் ஒரு விதமான அன்பு ஏற்பட்டுவிட்டது. அவள் என் தங்கையல்லவா? ரத்த பாசம்!" என்றார்.

"ஆமாம்; ரத்த பாசம்" என்று சொல்லிக்கொண்டே கோபத்துடன் எழுந்தேன்.

"என்ன சித்தப்பா! இன்று காலை முதலே ஜயாவுக்கு, நான் எது சொன்னாலும் கோபம் வருகிறதே! நான் என்ன குற்றம் செய்தேன்?" என்றார்.

"இல்லை ஜம்பு; அவள் உன் தங்கையல்ல!" என்று ஆரம்பித்தார் என் தந்தை.

"என்ன?" என்றார் ஜம்புநாதன் ஆச்சரியத்துடன்.

அதற்குமேல் நான் அங்கு நிற்கப் பிடிக்காமல் வெளியே வந்தேன். அப்போது என் அறிவு தெளிவாக இல்லை. ஷெட்டில் நின்ற காரில் ஒன்றை எடுத்துக்

கொண்டு, காரை அதன் இஷ்டம்போல் விட்டுக்கொண்டு சென்றேன். அப்போது டாக்டர் ஜம்புநாதனுக்கு என் வளர்ப்புத் தந்தை சொல்லிக்கொண்டிருக்கும் என் சரிதம் என் மனக் கண்முன் தோன்றலாயிற்று. ஆம்; அவர் என் வளர்ப்புத் தந்தைதான்!

சுமார் பதினேழு வருஷங்களுக்குமுன் என் வளர்ப்புத் தந்தையான டாக்டர் விஸ்வநாதன் ஒரு முக்ய காரியமாகப் பட்டுக்கோட்டைக்குப் புறப்பட்டார். அவர் புறப்படுமுன் லேசாகத் தூறிக்கொண்டிருந்த மழை சற்று நேரத்தில் பயங்கரமாகக் கொட்டத் தொடங்கியது. கண்ணுக் கெட்டிய தூரம்வரை ஒரே வெள்ளக் காடாகத் தெரிந்ததே யொழியத் தண்டவாளம் இருக்கும் இடம் கூடத் தெரியவில்லை. ரயிலும் தன் வேகம் குறைந்து மெள்ளச் சென்று கொண்டிருந்தது. திடீரென்று 'இஞ்சின் டிரைவ'ரின் குரல், "ரயில் குடை சாய்கிறது! கீழே குதித்து விடுங்கள்!" என்று பயங்கரமாகக் கேட்டது. டாக்டர் விஸ்வநாதனும் ரயிலை விட்டுக் குதித்தார். அச்சமயம், "ஸார்! கொஞ்சம் உதவி" என்ற குரல் கேட்டுத் திரும்பினார். ஒரு கர்ப்பஸ்திரீயை இறக்கிவிட வகை தெரியாமல் திண்டாடிக்கொண்டிருந்தவரே அவ்விதம் கூவினார். உடனே டாக்டர் கைகொடுத்து அவளை இறக்கினார். "ஐயோ! என் கணவர்" என்று அலறினாள் அந்தப் பெண். ஆம்; அவள் கணவன் இறங்குவதற்குள் ரயில் கவிழ்ந்துவிட்டது!

வெகு கஷ்டங்களுக்குப் பிறகே மயக்கமுற்ற அப் பெண்ணை ஆஸ்பத்திரியில் சேர்த்தார் விஸ்வநாதன். அன்றே அவளுக்கு ஒரு பெண்குழந்தையும் பிறந்தது. குழந்தை பிறந்தபின் சில நிமிஷங்களே அவள் உயிருடன் இருந்தாள். அவள் பெயர் ஜனகம்; அவள் கணவன் பம்பாயில் பிரபல வக்கீல்; அவர் தங்கையும் அங்குதான் இருக்கிறாள். இவைகள்தான் அந்த ஸ்திரீயிடமிருந்து அறிந்த விஷயங்கள். திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால் மரணம் நேர்ந்தது.

மழை நின்று, வெள்ளம் வடிந்ததும் கவிழ்ந்த ரயில் எடுக்கப்பட்டது. அதில் இறந்தவர்களின் உருவம் அடையாளம் தெரியாமல் நசுக்கப்பட்டுக் கிடந்தது. அவசரத்தில் குதித்தோடியவர்களின் சாமான்கள் அவரவர்களிடம் கொடுக்கப்பட்டது. டாக்டர் விஸ்வநாதனின் பெட்டியுடன், 'ஜனகம்' என்று பெயர் போட்ட பெட்டியும் கிடைத்தது. அப்பெட்டிக்குள் இருந்த கடிதத்தின் மூலம் அவள் கணவன் பெயரும், அவர் தங்கை பெயரும் தெரிந்தது. அத்துடன் ஒரு 'போட்டோ' படமும் இருந்தது. அவ்வளவுதான்.

ரயில் பாதை செப்பனிடப்பட்டவுடன் அந்தக் குழந்தை, பெட்டி இவைகளுடன் தஞ்சையை அடைந்தார் விஸ்வநாதன். அவர் அக்குழந்தையைப்பற்றிய வரலாற்றையும், படத்தையும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார். ஆனால், யாருமே அக் குழந்தையைத் தேடி வரவில்லை குழந்தைகளற்ற விஸ்வநாதனும், அவர் மனைவியும் முடிவில் அக் குழந்தையைத் தங்கள் குழந்தையாகவே எண்ணி வளர்த்து வந்தனர். அக்குழந்தைதான் நான்.

இதுவே என் சரிதம். என் வளர்ப்புத் தந்தை இத்தனை நேரம் என் கதையை டாக்டர் ஜம்புநாதனுக்கு சொல்லியிருப்பார். இதை நினைத்தவுடன் என் மனம் சொல்ல முடியாத வேதனைப்பட்டது. நான் டாக்டர் ஜம்புநாதனைப் ப்ர்த்த அன்றே, அவருக்கு என் மனதைப் பறிகொடுத்துவிட்டேன். ஆனால், இன்று அவர் நான் ஒரு அனாதை என்பதை அறிந்தால்? இதை என்னால் நினைக்கவே முடியவில்லை. 'என்றைக்கும் அவர் தங்கையாகவே இருந்திருக்கலாமே; அந்த பாக்கியத்தையு மல்லவா இழந்துவிட்டோம்' என்று எண்ணும்போதே என் தலை சுற்றியது. "ஐயோ! இது என்ன? அந்தமரம்!" 'பிரேக்'கை பலங்கொண்டமட்டும் அழுத்தினேன். படீரென்று ஒரு சப்தம். 'வீல்' என்று அலறினேன். அடுத்த நிமிஷம் நான் எங்கேயோ போய்க்கொண்டிருந்தேன்.

எனக்கு நினைவு வந்தபோது பின் வரும் சம்பாஷணை என் காதில் விழுந்தது :—

“நல்லவேளை சித்தப்பா! என் காரைக் கண்டவுடன் ‘டிரைவர்’ நான்தான் ஏதோ கேஸுக்குச் செல்கிறேன் என்று நினைத்துப் பின்னோடு ஓடியிருக்கிறான். கார் மரத்தில் மோதியவுடன் அவன் ஓடித் தூக்கியிராவிட்டால் ரொம்ப விபரீத நிலையில்தான் நாம் ஜயாவைப் பார்த்திருப்போம்.”

“இப்பவும் எனக்குக் கவலையாகத்தான் இருக்கு.”

“இனிக் கவலையில்லை சித்தப்பா; நீங்கள் போய் படுத்துக் கொள்ளுங்கள். நான் பார்த்துக்கொள்கிறேன்.”

அவர் குரலில் தான் என்ன இனிமை! என் விஷயத்தில்தான் அவருக்கு எத்தனை அக்கரை! உயர்ந்த அழகும், உயர்ந்த அந்தஸ்தும் உள்ள அவர், அனாதையான என்னை மணக்கவேண்டும் என்று நான் நினைப்பது எவ்வளவு முட்டாள் தனம்? ‘சே! சே! அந்த எண்ணத்தை இனி விட்டு விடவேண்டும். ‘என்றைக்கும் அவர் சகோதரியாய் இருந்து கொண்டு, கன்னியாகவே என் காலத்தையும் வைத்தியத் தொழிலில் ஈடுபடுத்துவேன்’ என்ற முடிவிற்கு வந்தேன்.

மெள்ளக் கண்ணைத் திறந்து சுற்றுமுற்றும் நோக்கினேன். டாக்டர் ஜம்புவைத் தவிர அங்கு வேறு யாருமில்லை.

மெள்ள, “அண்ணா!” என்றேன். “இதோ வந்துவிட்டேன் ஜயா. இப்பொழுது என்ன செய்கிறது? ஏதாவது சாப்பிடுகிறாயா?” என்றார் அன்புகனிந்த குரலில்.

“ரொம்பத் தாகமாக இருக்கிறதண்ணா!”

“நான் உனக்கு அண்ணாவல்ல ஜயா! அத்தான்!” என்று சொல்லிக்கொண்டே அவர் கிளாஸ் டம்ளரில் ஷர்ப்பத்தை ஊற்றிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்.

எனக்கு ஒரே ஆச்சரியமாய் இருந்தது. "என்ன நீங்கள் எனக்கு அத்தானா ?" என்று கேட்டேன்.

" ஆம் ; அதைப்பற்றிக் காலையில் சொல்கிறேன். இதை சாப்பிட்டுவிட்டுத் தூங்கு."

"முடியாது ; முதலில் நீங்கள் எனக்கு அத்தானான விதத்தைச் சொல்லுங்கள்."

"சொல்லாவிட்டால் தூங்கமாட்டாயாக்கும் ?"

" ஊஹூம் ; முடியாது."

அவர் சிரித்துக்கொண்டே, "குழந்தை மாதிரி பிடிவாதம் செய்கிறாயே ?" என்று சொல்லிக்கொண்டே ஷர்பத் டம்ளரை முக்காலிமேல் வைத்தார். டிராயரைத் திறந்து ஒரு 'போட்டோ'வைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார்.

"இது என் தாயாருடைய பெட்டியிலிருந்ததல்லவா ?" என்றேன்.

" இல்லை ஐயா ! இது என்னிடமுள்ளது. சித்தப்பா பெயர்களைச் சொல்லும்பொழுதே எனக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டிற்று. ஆனால் உடனே 'போட்டோ'வைப் பார்த்தபின் நிச்சயமாகிவிட்டது. இதோ இது யார் ?" என்று சொல்லிக்கொண்டே படத்தில் என் தாய்க்குப் பக்கத்தில் நிற்கும் ஒரு ஸ்திரீயைச் சுட்டி காட்டினார்.

" அது என் அத்தையாக இருக்கும்" என்றேன்.

"இருக்கும் என்ன ? அத்தைதான்! இந்தப் பையல் ?" என்றார் படத்திலிருந்த ஒரு சிறுவனைச் சுட்டி காட்டி.

"நான், "அது என் அத்தை பிள்ளை அத்தான்...." என்பதற்குள், "அந்த சாக்ஷாத் அத்தான்தான் நான் !" என்றார்.

நான் என் கண்களை அகலத் திறந்து அவரை ஆச்சரியத்துடன் நோக்கினேன். அவர் மேலும் சொன்னார் :—

"ஜயா ! எனக்கு அப்போது வயது எட்டு இருக்கும். என் மாமாவும், மாமியும் தங்கள் சொந்த ஊரான பட்டுக்கோட்டையில் கொஞ்சகாலம் இருந்துவர ஆசைப்பட்டனர். என் அம்மா தடுத்தும் கேட்காமல் புறப்பட்டுவிட்டனர். எனக்கு அவர்களை நன்ருக நினைவு இருக்கிறது. ரயில் கவிழ்ந்த விஷயம் தெரிந்ததும் என் தகப்பனர் பல இடங்களுக்கும் தந்தி கொடுத்தார் ; ஒன்றும் பிரயோஜனமில்லை. சித்தப்பா கொடுத்திருந்த விளம்பரமும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. இருவரும் அவ்விடத்தில் இறந்துவிட்டதாகவே தீர்மானித்து விட்டோம். நல்ல வேளையாக நான் என் சித்தப்பாவைத் தேடுவதின் நிமித்தம் இங்கு வந்தது உன்னையும் கண்டு பிடிக்க உதவிற்று" என்ருர்.

நான், "எல்லாம் கதை போலல்லவா இருக்கிறது ! எங்கேயோ பம்பாயி லிருந்த நீங்கள் எனக்கு அத்தாணுகவாவது ? நான் உங்களுக்கு அம்மங்காளாகவாவது ?" என்றேன் வியப்பு மேலிட்டால்.

அவர் குறும்புச் சிரிப்புடன், "எல்லாம் 'ரத்தபாசம்' ! ஜயா ! 'ரத்தபாசம்' !" என்ருர்.

நான் வெட்கத்தால் என் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

அவர் சிரித்துக் கொண்டே, "ஜயா ! இன்று மாலையில் நான் 'ரத்தபாசம் !' என்றவுடன் உன் முகம் கோபத்தால் சிவந்தது ; அதுவும் ஒரு அழகாகத்தான் இருந்தது. இப்பொழுது வெட்கத்தால் சிவந்தது ; இதுவும் ஒரு அழகாகத் தான் இருக்கிறது" என்ருர்.

"போதுமே ! நீங்கள் படித்த பள்ளிக்கூடத்தில் இந்த வர்ணனை கூடச் சொல்லிக் கொடுக்கிருர்களா என்ன ?" என்றேன்.

"இதை எந்தப் பள்ளிக்கூடத்திலும் சொல்லித் தர மாட்டார்கள் ஜயா! உன் போன்ற அழகிகளைப் பார்க்கும் போது தானாக வரும்" என்றார். அவர் கண்களில் பரிகாரச் சிரிப்பு பிரதிபலித்தது.

"சபாஷ்! முடிவு ரொம்ப நன்றாய் இருக்கே!" என்று சொல்லிக் கொண்டே வந்தார் ஜயாவின் கணவர் டாக்டர் ஜம்புநாதன்.

ஜயாவின் ஆச்சரியமான 'சுயசரித'த்தைக் கேட்டு மெய்மறந்திருந்த என்னை, டாக்டரின் குரல் விழிப்படையச் செய்தது. நான் சிரித்துக்கொண்டே, "என்ன டாக்டர்! நீங்கள் அன்று செய்த 'இஞ்செக்ஷன்' என் கையை வீங்கும்படி செய்து விட்டதே?" என்றேன்.

"ஓ! அன்று நான் ஏதாவது கோபமாக இருந்தேனே? ஆமாம்; நினைவு வருகிறது. அன்று, அந்த ஆழ்வார் பாடிய 'வாளா லறுத்துச் சுடினு மருத்துவன் பால், மாளாத காதனோ யாளன்போல் மா....' என்ற பாட்டை வைத்துக்கொண்டு ஜயா என்னைப் படாதபாடு படுத்தினாள்! என்மேல் இல்லாத சந்தேக மெல்லாம் கொண்டாள்! அந்த மனஸ்தாபத்தில் எனக்கு ஏற்பட்ட கோபத்தில் ஊசியை உங்கள் கையில் அழுத்தி ஏத்தி யிருப்பேன்" என்றார்.

நான், "பேஷ்! உங்கள் கோபத்திற்கு, என் கைதானா அகப்பட்டது? என்ன ஜயா! எல்லாம் உன்னால் வந்தது தானா? ஜயா! வியாதியஸ்தரின் தெய்வமான அவரை இனி இம்மாதிரிக் கோபத்திற் ஆளாக்காதே. 'காதல்' என்னும் வார்த்தைக்குப் பல அர்த்தங்களுண்டு; ஆகையால் பயப்படாதே" என்றேன்.

ஜயாவின் அழகிய முகம் சிவந்தது. அம்முகத்தைக் கண்டு மகிழ்ந்து நின்றார் டாக்டர். ஜம்புநாதன். நானும், அவ்விருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டேன்.

உதவி

"அம்மா! தம்பியைக் கூப்பிடு. வேலை செய்ய விடமாட்டேனென்கிறான்" என்று புகார் செய்தாள் வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து இலை தைத்துக் கொண்டிருந்த அஞ்சலை.

"எப்போது பார்த்தாலும் அவனோடு சண்டைதான். அடே! விஷமம் பண்ணாதே!" என்று சமையல் உள்ளிலிருந்து ஓர் அதட்டல் கேட்டது. உடனே தம்பி வெடுக்கென்று அஞ்சலையைக் கிள்ளிவிட்டு ஓட்டமெடுத்தான்.

அஞ்சலைக்கு வலி ஒரு பக்கம், தம்பி மீது பிரியம் ஒரு பக்கம் ஒன்றும் செய்ய முடியாமல் பொறுத்துக்கொண்டு இலை தைத்துக் கொண்டிருந்தாள்.

அஞ்சலையின் தகப்பன் கண்ணுசாமி திருவல்லிக்கேணியில் ஒரு பத்திரிகை ஆபீஸில் கம்பாஸிட்டர். பெண் கல்வியின் அத்தியாவசியத்தை வற்புறுத்தும் கட்டுரைகள் எத்தனையோ அவன் அச்சுக் கோத்திருக்கிறான். "மஞ்சள் அழகும் அழகல்ல" என்ற பாட்டுடன் ஆரம்பித்து "ஆகையால் நமது தாய்மார்களாக விளங்கும் பெண்மக்களுக்குக் கல்வி அளியுங்கள்" என்று முடிவு பெறும் பிரசங்கங்கள் நூற்றுக்கணக்காகக் கேட்டிருக்கிறான். ஆகவே, அவனது மூத்த பெண்ணான அஞ்சலையைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிப் படிக்கச்செய்தான்.

ஆனால் அவள் ஐந்து கிளாஸ் படிப்பதற்குள் பள்ளிக்கூடம் போவதை நிறுத்த வேண்டியதாயிற்று. பெண் கல்வியைப் பற்றிய கட்டுரைகள் படிக்கும்போதும் பிரசங்கங்களைக் கேட்கும்போதும் உற்சாகமாகத்தானிருக்கிறது. ஆனால் மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் அரை டஜன் குழந்தைகளைப் பராமரிக்கவேண்டி வந்தபோது, "பெண் படித்துக் கிழித்தது போதும்" என்று அவனுக்குத் தோன்றியது ஆச்சரியமல்ல. உடனே அவள் படிப்பதை நிறுத்தினான்.

அஞ்சலை தாயாருக்கு உதவி செய்த நேரம்போக மற்ற வேலைகளில் தம்பி தங்கைகளைக் கவனித்து வருவாள். ஒழிந்த நேரங்களில் உதிர்ந்த இலைக்கட்டுகளை வாங்கிவந்து தைத்து விற்பாள்.

இலை வியாபாரத்தில் அவளுக்கு மாதம் நாலு, ஐந்து கிடைக்கும். அதில் மாதம் மூன்று ரூபாய் வீதம் அஞ்சலையின் கல்யாணத்துக்கென்றே மிச்சம் பிடித்து அவளிடம் கொடுத்து வைத்திருந்தார்கள் அவளது பெற்றோர்கள்.

அஞ்சலையும் சொர்ணமும் பள்ளிக்கூடத் தோழிகள். இருவரும் பிராண சிநேகிதைகள். சிநேகிதம் என்றால் அப்படி சிநேகிதம். இரண்டுபேரும் ஒரே நாளில் கல்யாணம் செய்துகொள்வதென்றும் ஒரே நாளில் தங்கள் தலைச்சன் குழந்தைகளுக்கு ஆண்டு நிறைவு செய்வதென்றும் கூடப் பேசிக்கொண்டார்கள்!

சொர்ணத்தின் தந்தை குமாரசாமி ஒரு கான்ஸ்டபிள். அவன் ஏதோ ஒரு கேஸில் சாட்சியாக ஆஜராகி நிஜம் சொன்னதில் போலீஸ் கேஸ் தள்ளுபடியாகி விட்டது. இதற்காக, ஒரு நாள் அவன் எங்கேயோ கிழக்கே பார்த்துக்கொண்டு நிற்கவேண்டியவன் மேற்கே பார்த்துக் கொண்டிருந்ததற்காக உத்தியோகம் போய்விட்டது. குமாரசாமி வேறு உத்தியோகம் தேடித் தனது சொந்த ஊரான குற்றாலம் போனான்.

அஞ்சலைக்குச் சொர்ணம் வெளியூர் செல்வது மிகவும் கஷ்டமாயிருந்தது. ஆனால் அவளால் என்ன செய்ய முடியும்? இருவரும் ஒருவருக்கொருவர் அடிக்கடி கடிதங்கள் போடவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு பிரிய முடியாமல் பிரிந்தனர்.

இதெல்லாம் நடந்து மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. முதல் வருஷம் மட்டும் இரு தோழிகளுக்குள்ளும் கடிதப் போக்கு வரத்து நடந்தது. பிறகு அது அடியோடு நின்று விட்டது.

அஞ்சலையை அவளது மாமன் மகன் பொன்னனுக்கே கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கலியாணத்தை அடுத்த சித்திரையிலேயே நடத்திவிடத் தீர்மானித்திருந்தார்கள்.

ஒரு நாள் அஞ்சலை வீட்டிற்குப் புடவை மூட்டைக்காரன் ஒருவன் வந்திருந்தான். அவன் புதிது புதிதாகப் பல ரகங்கள் காண்பித்தான். வேடிக்கை பார்க்கப் பல சிறுமிகள் கூடியிருந்தனர். அஞ்சலை மூட்டையி லிருந்த ஒரு நல்ல அழகான பட்டுத் துணியை எடுத்து விலை விசாரித்தாள்.

" கஜம் இரண்டு ரூபாய் " என்றான் மூட்டைக்காரன்.

" அடியம்மா! ரொம்ப கிராக்கி! நீ அநியாயமா விலை சொல்றே எனக்கு வேண்டாம் " என்றாள் அஞ்சலை.

" நான் பொய்யா சொல்லப் போகிறேன்? போன மாசம் குத்தாலத்துக்கு எடுத்துக்கிட்டுப் போனேன். ஒரு பீஸ் அப்படியே தீர்ந்து போச்சு. கஜம் இரண்டரை ரூபாய்க்கு விற்றேன்."

" நீ குத்தாலம் போயிருக்கிறாயா ?" என்று அஞ்சலை ஆவலுடன் கேட்டாள். ஏனென்றால் குத்தாலம் என்றதும் அவளுக்கு சொர்ணத்தின் ஞாபகம் வந்தது.

" ஆமாம் !"

" அங்கே யாராவது சொர்ணம் என்ற பேர் கேள்விப் பட்டாயோ ?"

மூட்டைக்காரன் சிரித்தான். " ஊரிலிருக்கிற பேரெல்லாம் எனக்கென்னமாத் தெரியும் ?" என்று சொல்லிவிட்டுச் சிறிது யோசனை செய்து பார்த்தான். பிறகு அவன் 'நான் தோப்புத் தெருவில் ஒரு வீட்டிலே தாகத்துக்குச் சாப்பிட்டேன். யாரோ கான்ஸ்டபிளா யிருந்தாராமே, அவர் பெண் சொர்ணத்தை உடம்பு சரியாயில்லை என்று ஆஸ்பத்

திரிக்கு இட்டுக்கிண்டு போனுர்களாம். ஒரு வீட்டிலே பேசிக்கிட்டிருந்தார்கள். காதிலே விழுந்தது" என்றுன்.

இதைக் கேட்டதும் அஞ்சலைக்கு அதிகத் துக்கம் உண்டாயிற்று. தான் அவளுக்குக் கடிதம் எழுதாதிருந்ததைப் பற்றி மனம் வருந்தினுள். சொர்ணத்தை அடியோடு மறந்து விட்டோமே யென்று தவித்தாள். அவளுக்கு ஒன்றும் வாங்கப் பிடிக்கவில்லை. "எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்றும் மூட்டைக்காரனிடம் சொல்லி அவனை அனுப்பி விட்டாள்.

அன்று இரவு அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. தனது தோழியைப்பற்றி அடிக்கடி சிந்திக்கலானுள். "எனக்கு ஒரு குறைவுமில்லை. அவள் என்ன செய்வாள் பாவம்! தந்தையும் இறந்துவிட்டார். சோற்றுக்குக்கூடத் திண்டாடுவாளே! நான் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகும் சந்தோஷத்தில் அவளை மறந்துவிட்டேனே. அவளுக்கு உதவிசெய்வதற்கு யாரும் இல்லையே" என்றெல்லாம் கவலைப்பட்டாள். பிறகு அதைப்பற்றியே யோசித்துக் கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்குவந்து மன நிம்மதியடைந்தாள்.

மறுநாள் அவள் தபாலாபீஸுக்கு அதிகக் கூட்டமில்லாத சமயம் பார்த்துச் சென்றுள். அங்கிருந்த 'பெட்டிஷன் ரைட்டரி'டம் ஒரு மணிஆர்டர் எழுதவேண்டுமென்று சொன்னுள். அவன் மணிஆர்டர் பாரத்தை எடுத்துக்கொண்டு விலாசம் என்னவென்று கேட்டபோது அவள், "நான் பணம் அனுப்புகிறேனென்று தெரியக்கூடாதே" என்றுள். "அப்படியானுல் மணி ஆர்டர் எடுத்துக்கமாட்டாங்க" என்றுர் ரைட்டர். 'அப்படியானுல் நான் அனுப்பல்லை' என்று சொல்லிவிட்டு அவள் தபாலாபீசில் ஒரு கவர் வாங்கிக்கொண்டு போனுள். தன்னிடமிருந்த பணத்தை நோட்டாகமாற்றி அதில் வைத்தாள். எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறதென்றுகூடச் சொர்ணத்துக்குத் தெரி

யக்கூடாதென்று எண்ணி மயிலாப்பூருக்கு போய் கவரை அங்கிருந்த தபாலாபீஸில் சேர்த்தாள்.

குற்றாலத்தில் சொர்ணத்துக்குக் கவர் வந்து சேர்ந்தது. அவள் அதைப் பிரித்தபோது இரண்டு பத்து ரூபாய் நோட்டுகள் கீழே விழுந்தன.

"இது யார் அனுப்பியிருக்கிறார்களென்று தெரியவில்லையே!" என்று தன் கணவனிடம் கூறி ஆச்சரியப் பட்டாள்.

"உனக்குக் கலியாணமாகி விட்டதென்று தெரியாத பேர்வழி யாராவதுதான் அனுப்பியிருப்பார்கள்" என்றான் பக்கத்திலிருந்த அவள் கணவன் கிருஷ்ணன்.

"எந்த ஊர் முத்திரை போட்டிருக்கிறது, பாருங்கள்?"

"மயிலாப்பூர்."

"மயிலாப்பூரா? அங்கே எனக்குத் தெரிந்தவர் யாருமில்லையே. ஒருவேளை என் தந்தையின் சிநேகிதர் யாராவதிருக்கலாம். நான் முன்போல் கஷ்டப்படுகிறேனென்று நினைத்து அனுப்பியிருக்கிறார்களோ, என்னமா?"

"உன் கலியாணத்தைப்பற்றி நீ ரொம்ப பேருக்குச் சொல்லவில்லை போலிருக்கிறது" என்று கிருஷ்ணன் அவளை அன்புடன் கடிந்தான்.

"எதற்காகச் சொல்லவேண்டும்? நான் ஒருத்தி இருக்கிறேனோ இல்லையாவென்று யார் கவலைப்படுகிறார்கள்! இருந்து இருந்து அஞ்சலை ஒருத்தி ரொம்ப சிநேகிதமாய்த் தானிருந்தாள். நான் இங்கே வந்த பிறகு கொஞ்ச நாள் கடிதம் போட்டுக்கொண்டிருந்தோம். அப்புறம் அதுவும் எப்படியோ நின்றுவிட்டது."

"சரி! யார் அனுப்பியிருந்தாலென்ன? பணம் உன் கையிலிருக்கிறது. திருப்பி அனுப்பிவிடலாமென்றாலோ விலாசம் தெரியவில்லை. யாராவது பந்துக்களோ, சிநேகிதர்களோதான் அனுப்பியிருப்பார்கள். இந்தப் பணத்துக்கு

உனக்கு வேண்டியதை வாங்கிக்கொள்!'' என்ருன் கிருஷ்ணன்.

சொர்ணம் சிறிது யோசனை செய்தாள். "நான் ஒன்றும் வாங்கிக்கொள்ளப்போவதில்லை. தங்களைக் கலியாணம் செய்துகொண்ட பிறகு பணத்துக்கு எனக்கென்ன குறை! ஆனல் என்னைப்போல் எல்லாருமே அதிர்ஷ்டசாலியாயிருக்கிருர்களா? எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.'' அதன்படி சொல்லட்டுமா?

"என்ன?''

"சொல்கிறேன்'' என்று சொர்ணம் எழுந்திருந்து போய் ஒரு கவர் எடுத்துவந்தாள். "பாவம் ரொம்ப நல்ல பெண்! பல கவலைகளில் என்னை மறந்துபோயிருப்பாள். ஏழெட்டுக் குழந்தைகளுடன் பிறந்தால் சுகமேது? இன்னும் கலியாணம் கூட ஆகியிருக்காது'' என்று சொல்லிக்கொண்டே கவரைக் கணவனிடம் கொடுத்தாள். அவன் அதை ஆச்சர்யத்துடன் வாங்கிக் கொண்டு "இதை என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான்.

"இதற்கு நான் சொல்லுகிற விலாசத்தை எழுதி ரயிலிலுள்ள தபால் பெட்டியில் சேர்த்து விடுங்கள். இன்ன ஊரிலிருந்து வந்ததென்றுகூடத் தெரிய வேண்டாம். நான் அனுப்பினேனென்று தெரியாதிருக்கட்டும். விலாஸம் எழுதுகிறீர்களா?'' என்ருள்.

"என்ன விலாஸம்?''

"அஞ்சலை, ஒற்றைத் தெரு, திருவல்லிக்கேணி' என்று எழுதுங்கள்'' என்ருள் சொர்ணம்.

காதற் கடிதங்கள்

'சூரி'

குருசாமி வேலை தேடிச் சென்னைக்கு வந்து ஒருமாத மாயிற்று. அவன் ஒரு ஜவுளிக் கடையில் குமாஸ்தாவாக இருந்தான். தனது பழைய நண்பன் கதிரேசன் இரண்டு மூன்று வருஷங்களாகச் சென்னையிலிருப்பதை அவன் அறிவான். ஆனால் விலாசம் தெரியாதாகையால் இதுவரை சந்திக்க முடியவில்லை. இப்பொழுது அகஸ்மாத்தாகச் சந்தித்ததும் அவனடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. கதிரேசன் ஊர் விஷயங்களை விசாரித்துக்கொண்டே அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

அந்த வீட்டில் ஒரு கிழவியும் பதினேழு பதினெட்டு வயதுள்ள ஓர் அழகிய சிறுமியுமே இருந்தனர். தனக்குத் தூரஉறவினளான அந்தப் பெண்ணைத் தான் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போவதாகவும், இரண்டு மாதத்திற்குள் கலியாணம் நடக்குமென்றும் கதிரேசன் தெரிவித்தான். பிறகு அவள் அவர்களுக்குப் பலகாரமெடுத்து வந்தபொழுது, "கௌரி! என் பிராண சிநேகிதன் குரு சாமி இவன்தான்" என்று சொல்லி அறிமுகப் படுத்தி வைத்தான் கதிரேசன்.

அந்தப் பெண் புன்சிரிப்புடன் தலைகுனிந்த வண்ணம் "வாருங்கள்! உங்களைப்பற்றி அடிக்கடி சொல்லுவாங்க" என்றாள்.

"தன் காதலியிடம் என்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறானே, எப்படிப்பட்ட நண்பன்!" என்று எண்ணிக் குருசாமி பரம திருப்தி யடைந்தான்.

"கதிர் தங்கமான பிள்ளை. ஆனால் அவனுக்குப் பசி வந்துவிட்டால் கோபம் பிரமாதமாய் வந்துவிடும். வேளா வேளைக்குச் சோறு போட்டுவிடு" என்று அங்கிருந்த கிழவி சிரித்துக் கொண்டே அவளிடம் சொன்னாள்.

இதற்குப் பிறகு கடை வேலை முடிந்து அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் குருசாமி தன் நண்பன் வீட்டுக்கு வந்து விடுவான். ஒரு நாள் கதிரேசன் "குருசாமி நான் நாளை அஸ்ஸாமுக்கு போகப்போகிறேன்" என்றான்.

இதைக்கேட்டதும் குருசாமி ஆச்சரியப்பட்டு, "பேஷ்! அடுத்தமாதம் கல்யாணமாம், ஆசாமி அஸ்ஸாம் போகிறானும். அப்படி என்ன அங்கே தலைபோகிற காரியம்?" என்று வினவினன்.

"கல்கத்தாவில் என் சித்தப்பா இருக்கிறாரே, அவரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. நூற்றம்பது ரூபாய் சம்பளத்திலே மேஸ்திரிவேலை காலியாயிருக்காம். அடுத்த ரயிலில் வந்தால்தான் வேலை கிடைக்கும் என்று எழுதியிருக்கிறார். போய் வேலையை ஒப்புக்கொண்டு, கொஞ்ச நாளைக்கெல்லாம் திரும்பி வந்துதான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்" என்றான்.

நல்ல சம்பள முள்ள வேலையென்பதைக் கேட்டதும் குருசாமி கதிரேசன் போவதைப்பற்றிப் பலத்த ஆக்ஷேபம் செய்யவில்லை. ஆனால் கௌரி மட்டும் தன்னையும் அழைத்துக் கொண்டு போகும்படி வற்புறுத்தினள்.

"உன்னையுமா?" என்று கதிரேசன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஆமாம்! நான் ஏன் வரக்கூடாது? அங்கே போய்க் கலியாணம் பண்ணிக்கொண்டால் போகிறது."

"அதெல்லாம், நன்றாயிராது. நீ இங்கே பாட்டிகிட்ட இரு. அடிக்கடி குருசாமி வந்து உன்னைப் பார்த்துக் கொள்வான். கூடிய சீக்கிரம் திருப்பிவந்து உன்னை அழைத்துப் போகிறேன். என்ன குருசாமி, சரிதானே!" என்று நண்பனைப் பார்த்துக் கேட்டான்.

"என் சொந்தத் தங்கைமாதிரி பார்த்துக்கொள்வேன்" என்றான் குருசாமி.

குதிரேசன் ரயிலேறிவிட்டான். அவன் அஸ்ஸாம்போய் சேர்ந்ததும் அவனிடமிருந்து ஒரே ஒரு கடிதம் வந்தது. பிறகு இரண்டு மாதம் வரையில் அவனிடமிருந்து ஒரு தகவலும் கிடையாது. இதற்கிடையே குருசாமி நாலைந்து முறை வந்து கௌரியைப் பார்த்துப்போனான். கடிதம் வராததைப்பற்றி மனக்கவலைப்பட்டிருந்த அவளுக்குத் தேறுதல் கூறிவந்தான்.

"வேலைத் தொந்தரவு ஜாஸ்தியாயிருக்கும், ஒருவேளை ஊர்ஊராய் அலையும் வேலையோ என்னமோ? இல்லா போனால் அவன் கடிதம் போடாமலிருப்பானா?" என்றெல்லாம் அவன் அவளுக்குச் சமாதானம் சொல்லுவான்.

அடுத்த மாதமும் கடிதம் எதுவும் வரவில்லை. போதாத தற்கு கௌரியின் பாட்டியும் இறந்து விட்டாள். அவளுக்கு உதவி செய்யக்கூடிய பந்துக்கள் வேறெவருமில்லை. ஆகவே, தன் நண்பன் திரும்பிவரும்வரை அவளைக் காப்பாற்ற வேண்டியது தன் பொறுப்பென்றுணர்ந்து குருசாமி அவளைத் தனக்குத் தெரிந்த ஒரு கிழவியிடம் விட்டு மாதாமாதம் இவ்வளவு என்று பணம் கொடுத்து அவளைப் பராமரிக்கச் செய்துவந்தான்.

தன்னைக் கலியாணம் செய்து கொள்ளப்போகும் புருஷனுக்கு என்னதான் பிராண சிநேகிதனாயிருந்தாலும் தான் குருசாமிக்கு பாரமாயிருப்பது கௌரிக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் அவள் அவனிடம் "நீங்கள் எவ்வளவோ கஷ்டப் பட்டுச் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் எனக்காகச் செலவழித்து விடுகிறீர்களே. அஸ்ஸாமுக்கு யாராவது போனால் பேசாமல் என்னையும் அனுப்பிவிடுங்களேன்" என்று கேட்டுக்கொண்டாள்.

"நன்றாயிருக்கிறது, அவன் விலாசம்கூட எனக்குத் தெரியாதே. நீ அங்கே போய் அவனை எங்கே யென்று தேடுகிறது.? கொஞ்சம் பொறுத்துக்கொண்டே இரு,

அடுத்த வாரம் அவனிடமிருந்து ஒன்று கடிதமாவது வரும், அல்லது அவனே வந்துவிடுவான். நான் பணம் செலவழிப்பதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை" என்று சொல்லித் தேற்றினன்.

மறுபடியும் இரண்டு வாரமாகியும் கதிரேசனிடமிருந்து கடிதம் எதுவும் கிடையாது. கௌரி வியாதியாய்ப் படுத்தாள். அவளுக்குச் சுகக்குறைவு ஏற்படாதிருக்க அவன் எவ்வளவோ கஷ்டப்பட்டான். அவளுக்கு நல்ல போஷணை கொடுக்கவும் மருந்துகள் வாங்கவும் பணம் மீப்பதற்காகத் தன்னுடைய செலவுகளைக் குறைத்துக்கொண்டான். காப்பி சாப்பிடுவது, வெற்றிலை போடுவது, ஸினிமா பார்ப்பது முதலியவற்றையெல்லாம் விட்டொழித்தான். எப்பொழுதும் நல்ல ஆடைகளை உடுத்தும் வழக்கமுள்ளவன் இப்பொழுது கிழிந்த ஆடைகளைப் பொருட்படுத்தவில்லை.

கௌரியின் தேக நிலைமை வரவர மோசமாகிக்கொண்டே வந்தது. ஒரு வைத்தியரைக் கூப்பிட்டுப் பார்க்கச் சொன்னபோது அவர் அவளுக்குத் தேகத்தில் எவ்விதக் கோளாறும் இல்லையென்றும் மனோவியாதிதான் காரணமென்றும் தெரிவித்தார்.

கதிரேசனைப்பற்றி எண்ணி எண்ணித்தான் அவள் மனம் புழுங்குகிறுள் என்று குருசாமி தீர்மானித்து அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தவண்ணம் பெரிய கம்பெனிகள் இருக்கும் வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தான்.

ஒரு கம்பெனி வாசலில் இருபது, முப்பது பழைய கவர்கள் கிடந்தன. அவற்றின்மீது அஸ்ஸாம் தபால் முத்திரை போட்டிருந்ததைக் கண்டதும் குருசாமிக்கு ஒரு யோசனை தோன்றிற்று. கவர்களையெல்லாம் பொறுக்கி எடுத்துக்கொண்டு வீடு சென்றுன்.

மறுநாள் அவன் கௌரியைப் பார்க்கப் போன போது அவன் கையில் ஒரு கவர் இருந்தது.

"கௌரி! கதிரேசன் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறான், பார்த்தாயா?" என்று சொல்லி ஒரு கவரை அவளிடம் கொடுத்தான்.

அவள் அதைச் சந்தோஷத்துடன் வாங்கி உடைத்துப் பார்த்தாள். அவள் ஏதோ நாலு கிளாஸ் படித்திருக்கிறாள்.

"இது அவங்க எழுத்தா? நான் இதற்குமுன் பார்த்ததே இல்லையே" என்று சொல்லி எழுத்துக்கூட்டி அதைப் படித்து முடித்தாள்.

"சீக்கிரம் வரதாக எழுதியிருக்கு" என்றாள். அன்று அவள் மனக் கவலை நீங்கியவள்போல் காணப்பட்டாள்.

குருசாமி அவளை மறுபடி பார்க்க வந்தபோது அவள் அவனிடம் ஒரு கவரைக் கொடுத்து, "இந்தக் கடிதம் அவங்களுக்கு எழுதியிருக்கிறேன். விலாசம் எழுதித் தபாலில் போட்டுடுங்கள்" என்று கேட்டுக்கொண்டாள்.

வீடு போனதும் கௌரி கொடுத்த கவரை எடுத்து வைத்துக்கொண்டு குருசாமி பெருமூச்சு விட்டான். "பாவம், அந்தச் சிறுமியை இப்படி ஏமாற்றவேண்டியிருக்கிறதே! கதிரேசன் ஏன் இப்படிக் கடிதமே போடாமல் அநியாயம் பண்ணுகிறான்?" என்று எண்ணி அவன்வருத்தப்பட்டான். அந்தக் கடிதத்தைக் கிழிக்க அவனுக்கு மனம் வராமல் ஓர் அலமாரியில் பத்திரமாய் வைத்திருந்தான்.

ஆறு மாதங்களாகியும் கதிரேசனைப்பற்றிய சமாசாரமே கிடையாது. தன்னந் தனியே தனது பாதுகாப்பின் கீழ் விடப்பட்டிருந்த சிறுமியிடம் குருசாமி சகோதர பாவத்துடன் நடந்துகொண்டான். அவன் எத்தனையோ துன்பங்களைச் சகித்துக்கொண்டு அவளுக்கு ஒரு குறைவும் ஏற்படாமல் கவனித்துவந்தான்.

ஆனால் அவள்மட்டும் உடம்பு தேருமல் வரவரப் பல ஹீனமாய்ப் போய்க்கொண்டிருந்தாள். இதற்கிடையே குருசாமி கதிரேசனிடமிருந்து வந்ததுபோல் இரண்டு வாரத்துக்கொருதரம் ஒரு கடிதம் எழுதி, பழைய அஸ்ஸாம் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் போட்டுக் கௌரியிடம் கொடுத்துவந்தான். முதலில் அவனுக்குக் காதல் கடிதங்கள் எழுதுவது கஷ்டமாயிருந்தது. பழக்கம் ஆக ஆக, அவனே யறியாமலே கடிதங்களில் காதல் ரசம் ததும்பலாயிற்று. கௌரியும் அந்தக் கடிதங்களைப் படித்துப் பதிலுக்குக் கடிதம் எழுதிக்கொடுப்பாள்.

ஒரு நாள் அவள் திறந்திருந்த ஒரு கவரை நீட்டி "நான் பதில் எழுதியிருக்கிறதை நீங்களும் படித்துப் பாருங்கள். ஒரே தப்புந்தவறுமா யிருக்கும், திருத்தி அனுப்புங்கள்" என்று சொல்லிக் கையில் கொடுத்தாள்.

"தப்பாவது தவருவது! காதல் இலக்கணம் பார்க்குமாக்கும்" என்று சொல்லி அவன் அதை வாங்கிச் சென்றான். உத்தம நண்பனுன அவன், கடிதத்தில் அவள் என்ன எழுதியிருக்கிருள் என்று வாசித்துப் பார்க்க ஆசைப்படவில்லை. வீட்டுக்குள் போனதும் மற்றக் கடிதங்களுடன் அவற்றையும் சேர்த்துவைத்தான்.

கதிரேசன் அஸ்ஸாம் சென்று கிட்டத்தட்ட ஒரு வருஷமாகி விட்டது. ஆள் இருக்கும் இடமோ தெரியவில்லை. கௌரியின் தேகஸ்திதியோ மிகவும் கேவலமாய்ப் போய்க்கொண்டிருந்தது. எழுந்திருந்து நடமாடவும் முடியாமல் படுத்த படுக்கையா யிருந்தாள்.

ஒரு நாள் அவள் குருசாமி தனக்குச் செய்துள்ள பல நல்ல காரியங்களையும் அவனிடம் சொல்லி விட்டுத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். குருசாமி அவள் அழுவதைப் பார்க்கச் சகிக்க மாட்டாதவனுய் அவள் படுத்திருந்த கட்டில் சமீபம் சென்று குழந்தையைத் தேற்றுவது போல்

தேற்றி முகத்திலெல்லாம் பறந்திருந்த அவள் தலை மயிரை ஒதுக்கித் தள்ளினன்.

கௌரியின் சோர்ந்த முகத்தில் அப்பொழுது ஓர் அலாதி சந்தோஷக் குறி தோன்றிற்று. அவள் குருசாமியை அன்புடன் நோக்கிய வண்ணம் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். சிறிது நேரத்துக்கெல்லாம் கௌரி உயிர் நீத்தாள். அப்பொழுது குருசாமி மனம் பட்ட பாடு கடவுளுக்கே தெரியும். அவன் குழந்தையைப்போல் அழுது துடித்தான்.

கௌரியின் மரணத்துக்குப் பிறகு தான் இதுவரை வசித்து வந்த அறையில் அவனுக்கு இருக்கப் பிடிக்கவில்லை. அதில் உட்கார்ந்து கௌரிக்குக் கதிரேசன் எழுதியதுபோல் கடிதம் எழுதினதெல்லாம் ஞாபகம் வந்து அவன் மனதைப் புண்படுத்தின. அந்த அறையில் மனநிம்மதியுடன் இருக்க முடியாமையால் வேறு இடம்போக ஏற்பாடு செய்தான்.

அறையை ஒழிக்க உதவி செய்வதற்காக முத்து என்ற ஒரு சினேகிதனைத் தருவித்திருந்தான். குருசாமி வெளியில் எங்கேயோ போய் விட்டு வந்தபோது முத்து மகா கோபமாக இருந்தான்.

“அடேய் குருசாமி, உன்னைப்போல் பயித்தியக்காரனை நான் பார்த்ததில்லை” என்று கூறி ஓர் அலமாரியிலிருந்த பத்துப் பதினைந்து கடிதங்களையும் எடுத்து அவன் முன் போட்டான்.

“சுத்த மரக்கட்டை நீ! இந்தக் கடிதங்களைப் படி” என்றான்.

கடிதங்களைப் படித்தபோது குருசாமியின் கண்களில் நீர் ததும்பிற்று.

அந்தக் கடிதங்களை கௌரி அவனுக்கே—குருசாமிக்கே—எழுதி யிருந்தாள்!

"குருசாமி! உன் அழகான சிநேகிதன் மாதக் கணக்காகக் கடிதம் போடாமலிருந்ததிலிருந்தே, கௌரி அவன் தன்னை அடியோடு கைவிட்டு விட்டானென்று ஊகித்துக்கொண்டிருக்க வேண்டும். அதுவும் சரிதான். இன்று கதிரேசன் ஊர்ப் பேர்வழி ஒருவனைப் பார்த்தேன். உன் நண்பன் அஸ்ஸாமிலேயே ஒரு வங்காளப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு தமாஷாக இருப்பதாகச் சொன்னான். நீதான் குருசாமியின் பேரைப்போட்டுக் கடிதம் எழுதியிருப்பதை அவன் எப்படியோ ஊகித்துக்கொண்டிருக்கிறான். இதோ ஒட்டாமல் இருக்கிறதே, அந்தக் கடிதத்தில் அவள் எழுதி யிருப்பதைப் படித்துப் பார்" என்றான் முத்து.

தப்புந் தவறுமாக இருந்த அந்தக் கடிதத்தை குருசாமி சரிப்படுத்தி வாசித்தான் :—

"நீங்கள் எனக்காக ரொம்பக் கஷ்டப்படுகிறீர்கள். எனக்காக அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு நாள் முழுதும் வேலை செய்கிறீர்கள். நான் வருத்தப்படக் கூடாதென்று நீங்கள் எழுதின கடிதத்தையே பழைய ஸ்டாம்பு ஒட்டின கவரில் போட்டு என்னிடம் கொடுக்கிறீர்கள். அதைப் படித்து நான் ஆறுதலடைகிறேன், உங்கள்மீது எனக்குள்ள ஆசையினாலேதான் இன்னும் உயிரோடு இருக்கிறேன். நான் இதுவரைக்கும் நாலைந்து கடிதங்கள் உங்களுக்கே எழுதியிருக்கிறேன். நீங்கள் அதையெல்லாம் படிக்கவில்லையா? உங்களிடம் என்...பற்றி நேரில் சொல்ல வெட்கமாயிருக்கிறது.

தோல்வி.

ந. சிதம்பரசுப்ரமண்யன்

[காட்டில் ஒரு முகாம். ராஜகுமாரி சந்திரமுகி உட்கார்ந்து கொண்டிருக்கிருள். பக்கத்திலே தோழி நிற்கிருள்.]

சந்திரமதி : தோழி, எப்போது இந்தக் காட்டை விட்டுக் கிளம்பப் போகிறேமாம் ?

தோழி : நாளை விடியற்காலை இதை விட்டுக் கிளம்பப் போகிருர்களாம்.

சந்திர : எப்பொழுது ஊர் போய்ச் சேருவோம் ?

தோழி : நாளை நின்று மறுநாள் ஊர்போய்ச் சேர்ந்து விடலாம்.

சந்திர : ஏன் உன் தந்தை விக்ரமபுரிமீது படை எடுத்து வெற்றி கொண்டார் என்பதுதான் தெரியவில்லை.? அதை ஜயித்தது முதற் கொண்டு உறக்கம் இல்லை ; ஓய்வு இல்லை ; நிம்மதி இல்லை ; என்னையும் கூட அழைத்துக் கொண்டு அலக்கழிக்கிருர். ஊம், அந்த வீணையை எடுத்துவா!

(தோழி வீணையைக் கொண்டுவந்து வைக்கிருள்.)

தோழி : இந்த வீணை உங்களுக்கு மிகவும் பிடித்து விட்டது.

சந்திர : விக்ரமபுரியிலிருந்து எவ்வளவோ ரத்னங்களையும் ஆபரணங்களையும், என் தந்தை கொண்டு வந்து குவித்திருக்கிருர். ஆனல் இந்த வீணையைக் காட்டிலும் வேறு ஒன்றையும் சிறந்ததாகச் சொல்ல மாட்டேன். என்ன நாதம் ! என்ன வேலைப்பாடு ! என்ன அழகான அமைப்பு ! ஒரு அரண்மனையையே அலங்கரிக்க இது ஒன்று போதும்.

(வாசிக்க ஆரம்பிக்கிருள். டலத்த சிரிப்பு கேட்கிறது.)

சந்திர : அது யார் சிரிக்கிறது ? போய்ப் பார்.

தோழி: (போய்ப் பார்த்துவிட்டு வருகிருள்.) யாரோ தேசாந்தரம் போகும் பாடகனும். நீங்கள் சுருதி சரியாகச் சேர்த்துக்கொள்ளுமுன்பே வாசிக்க ஆரம்பித்துவிட்டதைக் கேட்டுச் சிரித்தானும்.

சந்தி: (கர்வத்துடன்) அவனை அழைத்துவா, அவன் திறமையைப் பார்க்கலாம். மகா கர்வியாக இருப்பான் போலிருக்கிறது.

(தோழி வெளியே போய்ப் பாடகனை அழைத்து வருகிருள்.)

சந்திர: நான் வாசித்தது சரியாக இல்லையா?

பாடகன்: நான் அப்படிச் சொல்லவில்லையே! வாத்யத்திற்குச் சரியாக சுருதி சேர்க்கப்படவில்லை என்று தான் சொன்னேன்.

சந்திர: மகா ஞானஸ்தன் மாதிரி பேசுகிறிரே, உங்களுக்கு வீணையில் நல்ல பயிற்சி உண்டோ?

பாடகன்: ஏதோ கொஞ்சம் தெரியும். சுருதி சேரவில்லை என்பதை அறிந்து கொள்ளும் அளவு ஞானமும் உண்டு.

சந்திர: எங்கே, கொஞ்சம் வாசியும் கேட்கலாம்.

பாடகன்: வாசிக்கிறேன், ஆனல் என் வாசிப்பு உங்களுக்குப் பிடித்திருந்தால் வெகுமதி கிடைக்குமா?

சந்திர: உண்டு.

பாடகன்: நான் கேட்பதைக் கொடுக்கவேண்டும்.

சந்திர: சரி, தருகிறேன்.

(பாடகன் வீணையைச் சரியாக சுருதி செய்துகொண்டு வாசிக்கிருன். அந்தப் பாட்டு, தென்றலைப்போல இனிமையைக் கொடுத்துக்கொண்டு, பெருகி வருகிறது. அந்தப் பாட்டிலே சொக்கிப்போய் நிற்கிருள் சந்திரமுகி.)

சந்திர : என்ன வாசிப்பு! எங்கள் நாட்டிலே இவ்வளவு திறமையாக அந்த வாத்யத்தைக் கையாளுபவர்கள் இல்லை. உங்களிடம் கொஞ்சுகிறது அந்த வீணை. நான் அந்த வாத்யத்தைத் தொடுவதற்கே லாயக்கில்லாதவள். நீங்கள் பரிகசித்தது நியாயந்தான். உங்களுக்கு என்ன வேண்டும்?

பாடகன் : நிச்சயம் தருவீர்களா?

சந்திர : கட்டாயம் தருகிறேன். அதில் என்ன சந்தேகம்?

பாடகன் : அந்த வீணைதான் வேண்டும்.

சந்திர : (தயக்கத்துடன்) என் தந்தை விக்ரமபுரியிலிருந்து கொண்டுவந்திருக்கும் பொக்கிஷங்களில் சிறந்ததாக இதை மதிக்கிறேனே. அதைக் கேட்டீர்களே! இதுதான் தங்களுக்கு வேண்டுமோ?

பாடகன் : விக்ரமபுரியிலேயே, சிறந்ததாகத் தாங்கள் நினைத்தது முற்றிலும் சரி. உலகத்திலேயே இம்மாதிரி வாத்யம் மற்றொன்று அமையாது.

சந்திர : இந்த வீணையை இவ்வளவு சிலாகிக்கிறீர்களே. நீங்கள் இதை முன்பே பார்த்திருக்கிறீர்களோ?

பாடகன் : (சாவதானமாக) அது என்னுடைய வாத்யம்தான்.

சந்திர : தங்களுடையதா? இது எப்படி அரண்மனைக்கு வந்தது?

பாடகன் : விக்ரமபுரியின் அரசனுக்கு நான் இதைக் கொடுத்திருந்தேன்.

சந்திர : உங்கள் அரசருக்கு கொடுத்திருந்தீர்களா? அவருக்கு எதற்காக?

பாடகன்: எங்கள் அரசர் சங்கீதத்தில் நல்ல விற்பன்னர். என் தோழர் அவர். நாங்கள் இருவரும் ஒரே குருவிடம் சங்கீதம் பயின்ருேம். எனக்குச் சமமாக அவர் வாசிப்பார்.

சந்திர: (கேலியாக) பாட்டிலும் களியாட்டத்திலும் வாழ்க்கையை நடத்தியபடியால்தான் என் தந்தையிடம் ராஜ்யத்தைத் தோற்றுவிட்டு ஓடிவிட்டார்போலிருக்கிறது.

பாடகன்: இல்லை இல்லை, நீங்கள் நினைப்பது தவறு. உங்கள் தந்தையிடம் எட்டு லட்சம்பேர் படையிலிருந்தனர். விக்ரமனிடம் லட்சம் வீரர்கள்கூட இல்லை. உங்கள் தந்தையிடம் யானைகளும் குதிரைகளும் ஏராளம். விக்ரமனிடம் அவை மருந்துக்குக்கூட இல்லை.

சந்திர: அதற்காக ஓடவேண்டுமா? முடிந்த வரையில் சண்டை செய்து பார்க்கக்கூடாதோ?

பாடகன்: தோல்வி நிச்சயம் என்று அறிந்த எங்கள் அரசன் வீணுக லக்ஷக்கணக்கான ஜனங்களின் உயிர்களையும், வாழ்க்கையையும் பாழாக்க விரும்பவில்லை. ஜனங்களின் வாழ்வைப் புண்ணுக்கிவிட்டு தோல்வியுறுவதில் என்ன பயன்! அதனுல்தான் அவன் நாட்டை விட்டு ஓடிப்போனது.

சந்திர: படையெடுப்பு என்ருவது வந்துதான் தீரும் என்ற எண்ணம் உங்கள் அரசருக்கு உதிக்கவில்லையோ? முன்ஜாக்ரதை செய்யத் தோன்றவில்லையோ?

பாடகன்: அவருக்குத் தெரியாமல் இல்லை. தந்தை இறந்து சமீபகாலத்தில்தான் பட்டத்துக்கு வந்தார். ஆகையால் ராணுவத்தைப் பலப்படுத்த போதிய அவகாசம் அவருக்கு இல்லை. தவிரவும் அவர் மனதில் ஒரு போராட்டமும் இருந்து வந்தது.

சந்திர: என்ன போராட்டம்?

பாடகன்: புத்தனும் அசோகனும் தோன்றிய இந்த நாட்டிலே, இன்றும் மிருக பலம் தாண்டவமாடுவதைக் கண்டு அவர் மனம் புழுங்குவார். "ஒரு அரசன் மற்றொரு தேசத்து மக்களை வெல்லவேண்டியது ஆயுதத்தினால் அல்ல, அன்பினால்தான் வெல்லவேண்டும்" என்பார். "அரசன் ஆட்சி செய்யவேண்டியது ஜனங்களின் உள்ளத்திலே" என்பார்.

சந்திர: ஒரு லட்சியவாதி என்று அல்லவா தோன்றுகிறது.

பாடகன்: அவர் சதா கனவு காண்பவர். கலையுள்ளம் படைத்தவர்.

சந்திர: என்ன ஆச்சர்யம்! அவரைக் கோழை என்றல்லவா நினைத்தேன்.

பாடகன்: அவர் கோழைதான். பிறருடைய துன்பங்களைக் கண்டு உளம் ஏங்கும் கோழை அவர். மக்களின் துன்பங்களைக்கண்டு மனம் இளகத் தவிக்கும் கோழை அவர். ஆனால், தன் விருப்பு வெறுப்புகளை உதறி எறியும் கல்நெஞ்சனும் கூட.

சந்திர: அவர் எங்கிருக்கிறார் இப்பொழுது?

பாடகன்: எனக்கென்ன தெரியும்? நான் போகலாமா?

சந்திர: கொஞ்சம் இருங்கள். என் தந்தை வருகிறார். அவருக்குக் கொஞ்சம் உங்கள் வாசிப்பைக் காட்டுங்கள்.

பாடகன்: (தயக்கத்துடன்) எனக்கு நேரமாகிறது.

சந்திர: கொஞ்சம் இருங்கள் போகலாம்.

(பானுகோபன் வருகிறான்)

சந்திர : (எழுந்துகொண்டே) அப்பா, இவர் ஒரு சிறந்த வைணிகர். இவர் வாசிப்பைக் கொஞ்சம் நீ கேள்.

பானு : குழந்தாய், எனக்கு நேரமில்லை. இருந்தாலும் போகட்டும், கொஞ்சம் வாசிக்கச் சொல். கேட்கிறேன்.

(சந்திர குமாரி தலையசைக்கிறாள். பாடகன் பாடுகிறான், பானுகோபன் பாடகனைக் கூர்ந்து கவனிக்கிறான். பாட்டு முடிகிறது.)

பானுகோபன் : பாட்டு நன்றாய்த்தானிருக்கிறது. வேஷந்தான் சரியாயில்லை.

(பாடகன் ஆச்சர்யத்துடன் பார்க்கிறான்.)

சந்திர : (வியப்புடன்) என்ன ! என்ன சொல்கிறீர் !

பானு : உனக்குத் தெரியவேண்டுமோ ? இதோபார்!

(பாடகன் தாடியைப்பிடித்து இழுக்கிறான். அது கையோடு வருகிறது)

விக்ரம : உன்னைக் கோழை என்று மாத்திரம் நினைத்தேன். அந்தப் பைத்தியகாரன் என்பது கூடத் தெரிகிறது.

விக்ரம : பயித்தியக் காரன் தான். கலையிலும் கடவுளிடமும் பைத்தியம் கொண்டவன். மிருகம்போல, அகங்காரத்தில் உழன்று கொண்டிருக்கும் உனக்கு இவைகளில் என்ன தேட்டம் இருக்கப்போகிறது ?

சந்திர : (ஆச்சர்யத்துடன்) விக்ரம மகாராஜன் இவர் தானா ?

பானு : வலையில் வந்து சிக்கிக்கொள்ளும் மானைப்போல எதற்காக இங்குவந்து மாட்டிக் கொண்டாய் ?

விக்ரம : என் வீணையைத் திரும்ப அடையவே இங்கு வந்தேன்.

பானு : உன் ஆபத்தை அறியவில்லையா ? அல்லது சுலபத்தில் ஏமாற்றிவிடலாம் என்ற எண்ணமா ?

விக்ரம: என் வாத்தியத்தை எப்படியும் திரும்ப அடையவேண்டுமென்ற ஆசை என்னை இங்கு தள்ளிக் கொண்டு வந்தது.

பானு: உன் கலை யார்வம்தான் உன்னை நாட்டை விட்டு ஓடச் செய்து விட்டது. ஓடிப்போன பிறகுகூடக் கலைப் பித்து தெளியவில்லை போலிருக்கிறது.

விக்ரம: மனிதனிடம் உள்ள கருணைதான் என்னை நாட்டைவிட்டு ஓடச் செய்தது. கலை ஆர்வம் இல்லை.

பானு: கோழைத்தனத்திற்கு அஹிம்சை என்ற பெயர் இல்லை.

விக்ரம: கோழைத்தனம் இல்லை. கசாப்புக் கடையில் செய்வதுபோல், மனிதர்களை, லக்ஷக்கணக்கான மக்களைப் பலியிடும் மகத்தான காரியத்திற்கு வீரம் என்றும், வெற்றி என்றும் பெயர் இருக்கும் வரையில் நான் செய்த கார்யம் கோழைத்தனமாகத்தான் தோன்றும்.

பானு: போர் என்பது க்ஷத்ரிய தர்மம். நீ பேசுவது அரசன் பேசும் பேச்சல்ல.

விக்ரம: அசோகன் உன்னைவிட மகத்தானதொரு சாம்ராஜ்யத்தை ஜயித்து ஸ்தாபித்தான். ஆனால், அவன் கண்ட அனுபவம் வேறு. ஆத்மபலம்தான் பெரிது என்று அறிந்துகொண்ட கௌசிகனும் க்ஷத்ரியன்தான். மிருக பலம் தாண்டவமாடும் வரையில் உலகத்திற்கு நிம்மதியில்லை என்று அறிஞர்கள் கண்டு இருக்கிறார்கள். மெலியாரை வலியார் வாட்டுவதில் துன்ப பரம்பரை உண்டாகுமே தவிர இன்ப வாழ்விற்கு இடமில்லை.

பானு: இந்தத் தத்துவங்கள் எனக்கும் தெரியும். மேலே ஆகவேண்டிய கார்யங்களைக் கவனிப்போம். இப்பொழுது என் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறாய். உன்னை மூட்டைப் பூச்சியைப்போல் நசுக்கிவிடும் சக்தி

என்னிடம் இருக்கிறது. உன் அஹிம்சையும் கருணையும், ஆத்மபலமும் உன்னை வந்து காக்கப்போகிறதா?

விக்ரம: அதோ பார். ஈயை ஒரு பல்லி கவ்விப் பிடித்துக் கொண்டு நிற்கிறது. அந்தப் பல்லியின் மேல் பாய்வதற்கு மூலையில் பூனை யொன்று காத்திருக்கிறது. உன் சக்தி இத்தகையதுதான். மனிதன் ஆறறிவு படைத்தும் மிருகத்திற்கும் கேவலமாக நடந்து கொள்வதுதான் உலகத்திலே விந்தையா யிருக்கிறது.

பானு: அன்பு வழியும், அஹிம்ஸாதர்மமும் உன்னை இன்று காப்பாற்றுமா?

விக்ரம: கடவுள் உண்மை என்றால் எனக்கும் இன்று வெற்றியுண்டு.

பானுகோபன்: யாரங்கே?

(இரண்டு வீரர்கள் வருகிறார்கள்.)

பானு: அவனைக் கொண்டு போய்ச் சிரச்சேதம் செய்யுங்கள்.

சந்திர: அப்பா, கொஞ்சம் பொறுங்கள். அவரை எனக்காக விட்டு விடுங்கள்.

பானு: சந்திரமுகி நீ இதில் தலையிடாதே. இது அரசியல்.

சந்திர: அரசியல் மாத்திரமல்ல. இதில் காவியமும் கலந்து விட்டது.

பானு: என்ன சொல்கிறாய்?

சந்திர: அவர் பேச்சும், சங்கீதமும், குணமும் என் மனத்தைக் கவர்ந்துவிட்டது.

பானு: அவன் எனது சத்ரு. அவன் நாட்டை நான் ஜயித்திருக்கிறேன்.

சந்திர: என் உள்ளத்தை அவர் ஜயித்துவிட்டாரே.

பானு: அம்மாதிரி சரித்திரங்களில் எவ்வளவோ தடவைகள் நடந்திருக்கிறது. அதுபோலவே, இப்பொழுது இவன் சாகவேண்டியதுதான்.

சந்திர: நிராயுதபாணியாக நிற்கும் இவரைக் கொல்வது நியாயமா?

விக்ரம: ஆயுதபலமேயின்றி பலவீனமாயிருந்த என் நாட்டைப் பற்றிக்கொண்டதுதான் நியாயமா?

பானு: இதெல்லாம் ராஜதந்திரம். அரசியல் நீதி. தந்திரமும். உன் கார்யத்தைப் பார்.

(வெளியே கூச்சல் கேட்கிறது. ஏதோ கலவரமாயிருக்கிறது. கத்தியும் கேடயமும் மோதும் சப்தம் கேட்கிறது. வெளியே ஒரே குழப்பமாயிருக்கும் சப்தம்.)

பானு: (ஆச்சர்யத்துடன்) என்ன கூச்சல் வெளியே?

விக்ரம: இதுவும் ராஜதந்திரம். அரசியல் நீதி. நான் இரகசியமாகத் தயாரித்துவைத்திருந்த வீரர்கள் உன் பாதுகாப்புப் படையை வென்று உன்னைப் பிடிக்கவருகிறார்கள்.

பானு: என்ன! இது உண்மையா!

(ஒருதளபதி வேகமாக வந்து விக்ரமனுக்கு நமஸ்கரிக்கிறான்.)

விக்ரம: மார்த்தாண்டா! இவனைக் கைது செய்யுங்கள்.

(பானுகோபனிடம் உருவின கத்தியுடன் இருவீரர்கள் வருகிறார்கள். பானுகோபன் நகர்ந்து கொள்கிறான். அவன் கிரீடம் கீழே விழுகிறது?)

விக்ரம: பானுகோப மகாராஜனே! இப்பொழுது புரிகிறதா? என் படைகள் உங்கள் வரவிற்குக் காத்திருந்தன. சிறிது நேரத்திற்குமுன் நான் மூட்டைப் பூச்சியாயிருந்தேன். இப்பொழுது நீங்கள் ஒரு சிறு மூட்டைப் பூச்சி. நான் நினைத்தால் தங்களை நசுக்கிவிடலாம். காலம்

மாறுகிறது. விதி விளையாடுகிறது. எல்லாம் எனையாளும் ஈசன் செயல்.

பானு: (கேலியாக) இதுதான் நீ சிறிது நேரத்திற்கு முன் பிரசங்கம் செய்த அஹிம்சை முறையோ? பலே, வேதாந்தி வீரனே.

விக்ரம: இல்லை, நான் தயாராயில்லாத சமயத்தில் என்னை வந்து நீ தாக்கினாய். நீ எதிர்பாராத சமயத்தில் உன்னை வந்து நான் தாக்கினேன். மிருக பலத்தின் ஆட்சியும் நியதியும் இதுதான். இதற்கு முடிவு கிடையாது. அஹிம்சா முறையின் அடிப்படையே வேறு. அதை ஆளும் வர்க்கம் கைப்பிடிக்கும்போது சுவர்க்கம் பூலோகத்தில் இறங்கிவிடும். அந்த நாள் என்று வருமோ? உன்போன்றவர்களின் பார்வை என்று அதை நோக்கிப் போகுமோ?

(பெருமூச்சு விடுகிறான்.)

மார்த்தாண்டன்: (வணங்கிக்கொண்டே) இவரை என்ன செய்யவேண்டும்?

விக்ரம: ஒரு நாழிக்குமுன் எனக்கு இவர் மரண தண்டனை விதித்தார். நான் அவருக்கு மரண தண்டனை விதிக்க அவர் தலை எழுத்து இருக்கிறது.

மார்த்தாண்டன்: நம் நாட்டைக் கவர்ந்த இந்த அரசனின் சிரத்தைத் துண்டிக்க என் கை துருதுருக்கிறது.

விக்ரம: மார்த்தாண்டா, கொஞ்சம் பொறு. இவர் சிரத்திற்கு தண்டனை நானே கொடுப்பேன்.

(கீழே விழுந்திருக்கும் கிரீடத்தை எடுத்துப் பானுகோபன் தலையில் வைக்கிறான்.)

இதுதான் என் தண்டனை. பானுகோப மகாராஜனே! தாங்கள் சகல மரியாதைகளுடன் போய் வரலாம். தாங்கள் திரும்பிப் படை எடுத்து வருவதற்குள்

நாங்கள் தயாராகிவிடுவோம். ஆனாலும், பலமில்லாதவனைத் தாக்குவது தான் கோழைத்தனம். அதை மாத்திரம் தாங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மார்த்தாண்டா, இவருக்கு ராஜாங்க மரியாதைகள் செய்து அனுப்பு.

பானு : (தாழ்மையுடன்) விக்ரம், நான் தோல்வியுற்றேன்.

விக்ரம : அரசே, எனக்கும் இது தோல்விதான். மிருகபலம் வெற்றியடையும்போது மனிதனுக்கு வெற்றி ஏது? வெற்றியும் தோல்வியும் இல்லாமல் இருக்கும் காலம் வருமா? அன்பும் அமைதியும் உலகத்திலே நிலைத்து நிற்கும் காலம் வருமா?

பானு : முயற்சிப்போம்.

விக்ரம : மனிதன் வெற்றியடைய ஈசன் அருள் புரியட்டும்.

(சந்திரமுகி லஜ்ஜையுடன் விக்கிரமனைப் பார்க்கிறாள். வெளியே ஜயபேரிகை கொட்டுகிறது).

திரை

—

உமா சந்திரன்

என். பஞ்சாபகேசன்.

பீ. ஏ. பரிட்சை பாஸ் செய்ததும் காலேஜை விட்டு விட்ட உமாசந்திரன் தான் இனியும் கலியாணம் செய்து கொள்ளாமல் வாழ்நாளை வீணுக்குவதில் பெரிய தவறு செய்து கொண்டிருப்பதாக நினைத்தான். அவன் சமீபத்தில்தான் கலாசாலையை விட்டவனுகையால் அவன் ஆங்கில இலக்கியத்தில் படித்த காதற் காட்சிகளெல்லாம் அவன்மனதில் அப்படியே பதிந்திருந்தன. தனக்குவாய்க்கப் போகும் ஒரு காரிகை எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என மனதிற்குள் தீர்மானித்துக்கொண்டான். ஆனுல் எட்டாப்பழத்திற்கு கொட்டாவி விடும் அசட்டுக் காதலர் கும்பலைச் சேர்ந்தவனல்ல அவன். தான் பீ. ஏ. வரையில் படித்திருந்ததால் தனக்கு வாய்க்க விருக்கும் மனைவி குறைந்தது எஸ்.எஸ்.எல்.ஸி. வரையிலாவது படித்திருக்க வேண்டும் என அவன் எண்ணியதில் என்ன தப்பு? பாவம், பகவான்தான் இவனைக் கருப்பாகப் படைத்துவிட்டார். ஆனுல் அதற்குப் பிராயசித்தமாக, வரும் மனைவியையாவது ஒரு அழகியாய்த்தான் அனுப்புவார் என்று அவன் எண்ணியதில் ஆச்சரியமுமில்லை. அவன் இவ்வாறெல்லாம் தன்னுடைய கலியாணத்தைப் பற்றி சிந்தித்துக்கொண்டு தன் கிராமத்தை யடைந்தான்.

அவனுடைய விதவைத் தாயாரான லக்ஷ்மியம்மாள், தன் குடும்ப பிதிர்ராஜ்ஜிதமான பதினைந்து மா நஞ்சை நிலத்தையும் விற்று உமாசந்திரனை ஒரு மனிதனுக்கி பீ. ஏ. பட்டாதாரியாகவும் செய்திருக்கிருள். அவனை பீ. ஏ. படிக்க வைத்ததின் முக்கிய நோக்கம், பெண்ணைப்பெற்ற எவனும் வரதட்சணை 4000 ரூபாயும் 'கிளி' போன்ற ஒரு பெண்ணையும் கட்டாயம் கொடுக்கக் காத்துக்கொண் டிருப்பான் என்பதே. போதாக்குறைக்கு மேற்சொன்ன நிபந்தனையுடன்கூட சம்மந்தி பிராமணன் பெரிய உத்யோ

கத்தில் இருந்து உமாசந்திரனுக்கு வேலே வேறு பண்ணி வைப்பதாக இருந்தால் வரதட்சணையில் ஏதாவது நூறு இருநூறு குறைத்துக் கொள்ளலாம் என்றும் அவளுக்கு யோஜனே. ஆனால் உமாசந்திரன் இத்தனே நாள் தன் தாயார் சொன்னபடி கேட்கத் தயாராயிருந்தபோதிலும் அவனுடைய கலியாண விஷயத்தில் மட்டும் அவள் தலே யிடுவது அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லே. நல்ல வரதட்சணேயுடன் அழகான பெண்ணும் கிடைத்தால் கலியாணம் செய்து கொள்வதற்கு அவனுக்கு ஆட்சேபணே யில்லே. தான் ஒரு பட்டதாரி என்பதைத் தவிர, தன்னேப் பற்றியோ, தன் குடும்பத்தைப்பற்றியோ வெளி யில் கௌரவமாகச் சொல்லிக்கொள்வதற்கு அதிகமாக ஒன்றும் இல்லே என்பது அவனுக்கே நன்ருகத் தெரியும். நிறைய வரதட்சணேயுடன் ஒரு அழகிய பெண்ணே அவனுக்குக் கொடுக்கக் கூடிய குருடன் ஒருவன் கட் டாயம் இருக்கவே மாட்டான் என்பது அவனது துணிபு. அப்படித் தப்பித் தவறி ஓர் அழகிய பெண்ணே, நிறைய வரதட்சணேயும் சேர்த்துக் கொடுப்பதாக ஒருவன் முன் வந்தால், கட்டாயம் அந்தப் பெண் செவிடாகவோ ஊமை யாகவோ, அல்லது வேறு ஏதாவது அங்கஹீன முள்ள வளாகவோதான் இருப்பாள். ஓர் அழகிய பெண் தனக்கு மனேவியாக வேண்டுமென்ருல் அவள் கட்டாயம் ஏழை யாகத்தான் இருக்கமுடியும் என்று தீர்மானித்தான்.

உமாசந்திரன் கிராமத்தை யடைந்து ஐந்தாறு மாதங் கள் ஆகிவிட்டன. நாளடைவில்பொழுதுபோக்குவது கஷ்ட மாகவே, கிராமத்திற்கு ஏதாவது சேவை செய்யவேண்டு மென்றுஎண்ணினன். அவனுடைய சூக்ஷ்மபுத்திக்குக்கிராம சேவை என்றதும் ஒரு வாசகசாலேயைத் தவிர வேருெரு ஸாதனமும் தோன்றவில்லே. அரைகுறை இங்கிலீஷ் தெரிந்த வர்களேக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு ஆங்கில தினசரிப் பத்திரிகை ஒன்று வரவழைக்க ஆரம்பித்தான். பணம் கொடு க்க மறுத்தவர்களேத் தேசத் துரோகிகள், முன்னேற்றத்தின்

முட்டுக்கட்டைகள் என்று வசைகள் பாடவாரம்பித்தான். அந்தப் புத்தியில்லாக் கிராமவாசிக்கு இவனுடைய அறிவு தானத்தைப் பெற வேண்டிய யோக்கியதைகள் கிஞ்சித்தும் இல்லாததை அவன் எப்படி அறிவான்!

ஒழிந்த நேரத்தில் காதலின் மகத்துவத்தைப்பற்றியும் விதவா விவாஹத்தின் அவசியத்தைப்பற்றியும், தேச பக்தியைப் பற்றியும் திண்ணைப்பிரசங்கங்கள் ஓயாமல் செய்வான். ஒருநாள் அவனுடைய பாலிய நண்பன் வராகசாமி அவனிடம் "உனக்குக் கலியாணம் ஆகும்வரை விதவா விவாஹம் என்பதைப்பற்றி உளருதே. அப்புறம் யாராவது ஒரு விதவை வந்து 'என்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டால் தான் ஆச்சு' என்று பிடிவாதம் செய்தால் என்ன செய்வாய்? இந்தக் கஷ்டம் எல்லாம், உனக்கு எதற்கு?" என்று சொன்ன பிறகுதான் விதவா விவாஹ அவசியத்தைப்பற்றிச் சற்று பேச்சைக் குறைத்துக் கொண்டான். இப்படியாக அவன் நாட்களைப் போக்கி வந்தான். ஆடி மாதம் பிறப்பதற்கு இன்னும் பத்தே நாட்கள் தான் இருந்தன.

ஒரு நாள் வராகசாமி உமாசந்திரனிடம் "இதோ பார் உமா! பக்கத்து வள்ளியனூர் கணக்குப் பிள்ளையை உனக்குத் தெரியுமோ, இல்லையோ? அவருக்குப் பார்வதி என்று ஒரு பெண் இருக்கு. பாருக்குட்டி என்றும் கூப்பிடுகிறார்கள். வயஸு பதினெட்டு ஆகிறது. வயசு அதிகமென்று யோசிக்கிறாயோ? உனக்கு மட்டும் என்ன வயஸு ரொம்ப குறைச்சலோ? உன்மாதிரி நோட்டம் பார்க்கிறவனுக்கு இந்தக் காலத்திலே இருபத்திரண்டு வயஸுக்கு குறைந்த பெண்ணே கிடைக்காது, தெரியுமா? ஏதோ உன் அதிர்ஷ்டம் தப்பித் தவறி இவ்வளவு சின்ன வயஸிலே ஒரு பெண்ணு உனக்காகத்தான் காத்துக் கொண்டு இருக்கோ என்னமோ தெரியவில்லை, நான் அவளைப் பற்றி வர்ணித்தேன்னு உன்னாலே புரிந்துகொள்ள முடியாது.

"என் தெரியுமா? அழகான பெண் என்ருல் முகத்தில் பௌடருடனும், காதில் தொங்கட்டானுடனும், காலில் ஸ்லிப்பருடனும், மூக்கில் கண்ணுடியுடனும், கையில் லில்க் கைக்குட்டையுடனும் பூ என்று ஊதினுல் கீழே விழும்படியாக இருப்பாள் என்றுதானே நினைக்கிருய்? நான் சொல்லப்போகிறவள் இந்தச் செயற்கையழகி அல்ல. அப்படியே இயற்கை வடிவான சௌந்தரிய தேவதை. துரதிருஷ்ட வசமாக ஏழை வீட்டில் பிறந்து வளர்ந்து அதிஷ்டவசமாக உன்னை நாடப்போகிறவளைப்பற்றி நான் உன்னிடம் சொல்லி என்ன பயன்? தானுக நீயே தெரிந்து கொள்ளப் போகிருய். ஆஹா என்ன அழகு! பாதாம் கொட்டையைப் போன்ற அழகிய நயனங்கள், குங்குமப் பூவைப் பழிக்கும் கண் இமைப் புருவங்கள், மிந்திரிக் கொட்டையை போன்ற மூக்கு, ஒட்டு மாம்பழத்தை யொத்த கன்னங்கள், மாதுளை முத்தைப் பரிகசிக்கும் தந்த வரிசைகள், பலாச்சுளையை ஞாபகமூட்டும் காதுகள், இன்னும் என்ன என்னவோ எனக்குச் சொல்லத்தெரியவில்லை. த்ஸு, த்ஸு, த்ஸு! ஏதோ நீ கொடுத்து வைச்சவன். என்னமோ என்னுடைய போதாத காலம் போனவருஷமே எனக்குக் கலியாணம் பண்ணி வைச்சூட்டா. இப்படி ஒரு பெண் இருக்குமென்று தெரிஞ்சா நான் கலியாணமே பண்ணிக் கொண்டிருக்க மாட்டேன்" என்று அழாக் குறையாகச் சொன்னுன்.

இதைக்கேட்டதும் உமாசந்திரனுக்கு தலை தீபாவளிக்குத் தன் கணவனை வாசலில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணுக்குத் தன்னுடைய கணவன் வாசலில் வரும் ஒருவண்டியில் தென்பட்டால் என்ன உணர்ச்சி ஏற்படுமோ அந்த உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. பெண்ணைப் பார்க்காமலேயே, வராகசாமி சொன்னதிலிருந்து அந்தப் பெண்ணை எப்படியும் அடைந்தே தீருவதென்று நிச்சயித்து விட்டான். அவளைக் கலியாணம் செய்து கொள்ள அம்மாவின் பணத்தாசை தவிர வேறென்

றும் அவனைத் தடுப்பதாகத் தோன்றவில்லை. என்ன இருந்தாலும் பத்து மாதம் சுமந்து, ஈன்றெடுத்த தாயின் பேச்சை அவ்வளவு சுலபமாகத் தட்டிவிடக் கூடிய தைரியம் அவனுக்கு இன்னும் ஏற்படவில்லை. எதற்கும் பெண்ணை நேரில் பார்த்து விடலாம் என்று கிளம்பினான் வள்ளியனூருக்கு. அவன் மனதில் தாயின் பாசமும் காதலின் வேகமும் போட்டியிட்டன.

வள்ளியனூர் கணக்குப் பிள்ளை மிகவும் ஏழ்மையான நிலையில்தான் இருந்தார் என்பதில் ஆச்சரியம் இல்லை. ஒரு கிராமக் கணக்குப் பிள்ளை எங்கேயாவது பணக்காரராக இருக்க முடியுமா? அவர் தம்முடைய பெண்ணைப் பார்க்கும்போது தம்முடைய உண்மையான வறுமை நிலையை இன்னும் அதிகமாக உணர்வார். அவர் இந்தப் பெண்ணைப் பெற்ற பாவத்தை தவிற வேறு ஒரு குற்றமும் செய்யவில்லை. ஆடிமாதம் நெருங்க நெருங்க அவருடைய கவலையும் அதிகரித்தது. எவன் 'கழுத்திலாவது' பார்வதியைக் கட்டிவிட்டுக் கவலையற்று இருக்கத் தயார்தான். ஆனால், தகுந்த வரனைத்தான் காணோம். இதுவரையில் பெண்ணைப் பார்க்க வந்த மாப்பிள்ளைகள் எல்லோரும் பெண் பிடித்திருக்கிறது, ஊருக்குப்போய் லெட்டர் போடுகிறேன் என்று போனார்களே ஒழிய ஒருவனாவது கடிதம் போட்டதாகத் தெரியவில்லை. ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் பார்வதியின் ரூபலாவண்யத்தை வர்ணிப்பது கணக்குப் பிள்ளைக்குத் தெரியும். ஆனால், அவருக்கோ பார்வதி ஏதோ தன்னைப் பீடித்திருக்கும் மோஹினி பிசாசு என்றும், ஜன்மாந்தர பாபம் என்றுந்தான் தோன்றிற்று.

பார்வதியோ, அடக்கமே உருவெடுத்த பெண். அச்சம், நாணம், மடமை முதலிய பெண்மையின் தன்மைகள் எல்லாம் அவளிடம் குடிகொண்டிருந்தன. குனிந்த தலை நிமிர மட்டாள். அவளை வீட்டைத் தவிர வெளியில் எங்கும் காண முடியாது. அவள் காலையில் எட்டு மணிக்குக்

குளித்து விட்டு இடுப்பில் ஏந்திய குடத்துடன் வீடு திரும்பும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். மற்றப் பெண்களுக் கெல்லாம் இவள் ஒரு ஆதர்சமாக விளங்கினளே ஒழிய வம்பு அளப்பதற்கு உரிய ஒரு ஸாதன மாக என்றுமே தோன்றியதில்லை.

பாருக்குட்டி ஆங்கிலப் படிப்பை எட்டிப் பார்க்கா விடினும் தமிழில் பூர்ண தேர்ச்சியுற்றிருந்தாள். சம்ஸ்கிரு தத்திலும் கொஞ்சம் பயிற்சியுண்டு. அவளுடைய தகப்பனர் சுப்பா சாஸ்திரி (கணக்குப் பிள்ளை) தம்முடைய சம்ஸ்கிருத ஞானத்தைப் பாழாக்க மனமில்லாமல் ஏதோ கொஞ்சம் தன் பெண்ணுக்குச் சொல்லி வைத்திருந்தார், அவ்வளவு தான். அவள் தன் தலைவிதியை நொந்து கொண்டாளாயி னும் தனக்காகப் பிறந்து வளர்ந்துகொண்டிருக்கும் மணு ளனை அடையாமல் கன்னியாகவே காலம் கழிக்க நேரி டாது என்ற திடமான நம்பிக்கை அவளுக்கு உண்டு.

தன்னைப் பார்க்கவந்த எத்தனையோ பேர்களுக்கு நமஸ் காரம் பண்ணி அவளுடைய முழங்கால் தேய்ந்து விட்ட தென்றே சொல்ல வேண்டும். வந்தவர்கள் எல்லோரும் இவளைத் தங்களுக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்லிக் கொண்டார்கள். ஆனல் அவளுக்கு மட்டும் என்னவோ வந்தவர்களில் ஒருவனையாவது 'கட்டோடு' பிடிக்கவே இல்லை. ஏன் என்று காரணம் சொல்லவும் தெரியவில்லை. என்னமோ பிடிக்கவில்லை, அவ்வளவுதான். இதை அவள் வெளியில் சொல்லவேயில்லை. சொன்னலும் இவள் பேச்சை யார் கேட்கப்போகிருர்கள்?

இந்தப் பார்வதியைப் பார்க்க உமாசந்திரன் வராக சாமியுடன் வள்ளியனூருக்குக் கிளம்பி வந்துகொண்டிருந் தான். பெண்ணின் அழகைக் கேட்டு அவள்மீது உமா சந்திரன் காதல் கொண்டு விட்ட போதிலும் அவனுக்கு அந்த 'பார்வதி', 'பாருக்குட்டி', 'சுப்பா சாஸ்திரி' முதலிய கர்னடகப்பெயர்களை காது கொடுத்துக் கேட்கச் சஹிக்க

வில்லை. உடனே அவன் வராகசாமியிடம் "ஏண்டா! நாளை என்னுடைய கலியாணப் பத்திரிகையில் சுப்பா சாஸ்திரி களின் பெண் பாருக்குட்டியை இன்னாருக்கு....ன்று" தானே போட்டிருக்கும்? எனக்கு என்னமோ இந்த சுப்பா சாஸ்திரி, பார்வதி என்கிற பேரைக் கண்டாலே பிடிக்கல் லேடா. ஊருக்குபோவோம் வா. கோகிலா, சியாமளா, வசந்தா, என்று எத்தனையோ அழகான பெயர்களை விட்டு இந்தப் பெயரை ஏன் வைத்துக்கொண்டாள்?" என்றான்.

"பெயரில் என்ன இருக்கிறது? வேண்டுமானால் நமக் குப் பிடித்த பெயராக மாற்றிக் கொள்கிறது. அதை யார் வேண்டாமென்கிறது? இப்போது சினிமாக்களில் அடி படும் சித்திரலேகை, பத்மாஸினி, ஹேம நளினி, மிருது பாஷிணி, முதலியவர்க ளெல்லாம் பூர்வாசிரமத்தில் என்ன பெயரினால் அழைக்கப்பட்டார்கள் தெரியுமா! ராமாயி, வள்ளியம்மை, குப்பிச்சி, அங்கமுத்து முதலிய திவ்ய நாமாக்களினால்தான். தெரியுமோ இல்லையோ?. உனக்குப் பார்வதி என்கிற பேர் பிடிக்காவிட்டால், உடனே நல்ல பேராகப் பார்த்து மாற்றி வைத்து விடலாம். ஆகையினாலே பேரைக் கண்டு மலைக்காதே" என்று வராகசாமி தேற்றி னான். பிறகு அவர்கள் வள்ளியனூரை யடைந்தனர். கணக் குப் பிள்ளை வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

வராகசாமி, உமாசந்திரன், சுப்பா சாஸ்திரி மூவரும் கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த ஒரு பாயின்மேல் உட்கார்ந் திருந்தனர். சிறிது நேரத்திற்குள் பார்வதி அங்கே தோன்றி அவர்களை நமஸ்கரித்து விட்டுச் சென்றாள். பார்வதியைப் பார்த்த மாத்திரத்திலேயே அழகு என்று ஒன்று இருந்தால் அது சென்னைக் கடற்கரையில் உலாவும் மங்கையர்களிடம் தான் காணப்படும் என்கிற ஒருவித அவனுடைய மனோ பாவமானது சட்டென்று மாறியதில் ஆச்சரியமில்லை. ஒரு கிராமாந்திர ஏழைக் கணக்கு பிள்ளை வீட்டிலும், இடிந்து போய்க்கொண்டிருக்கும் ஓட்டுவில்லைவீட்டின் மத்தியிலும்,

அழுக்கு அடைந்திருந்த கிழிந்த புடவையையும், ஆடை ஆபரண மின்மையையும் மீறிக்கொண்டு வெளிக்கிளம்பக் கூடிய அழகு ஸ்வரூபம் ஒன்று தென்படும் என அவன் நினைக்கவேயில்லை. உடனே அவனுக்கு எங்கிருந்தாவது துணிமணி ஆபரணங்களை வாங்கிக்கொண்டு வந்து அவளை ஸர்வாபரணபூஷிதையாய்க் காண வேண்டு மென்ற ஆவல் தோன்றிற்று. அந்த நிமிஷமே அவளைத் தன் மனைவியாக மனதில் வரித்து விட்டான்.

ஆனால் அவள் தன்னை மணக்க முன்வரவேண்டுமே என்று ஒரு பக்கம் கவலையும் ஏற்பட்டது. ஆனால் கணக்குப் பிள்ளையின் ஏழ்மை ஸ்திதியும், அந்தப் பெண்ணின் கிராமாந்திரத்தன்மையும் அவனுக்குத் தைரியத்தை யளித்தன.

பார்வதிக்கும் உமாசந்திரனைப் பார்த்தவுடன் இத்தனை நாள், தனக்கு, முன்பு படித்த துஷ்யந்தன் சகுந்தலையின் காதல் பேச்சுகள் புரியாமலிருந்தது, இப்போது தான் புரிந்து கொள்ளக் கூடியதாகத் தென்பட்டது. அதிகம் சொல்வானேன்! உள்ளே சமயலறைக்குள் சென்றதும் மெல்லிய ஸ்வரத்தில் பாடக்கூட ஆரம்பித்து விட்டாள். ஆனந்தத்தினாலே, நாலு பேர் வந்திருக்கும் சமயத்தில் இப்படி அசடு மாதிரி பாடினால் வந்தவர்கள் என்ன நினைத்து கொள்வார்கள் என்று அவள் அம்மா அவளைக் கண்டித்த பிறகே பார்வதிக்குத் தான் எந்த லோகத்தில் இருக்கிறோம் என்பது தெரிய வந்தது. அவளும் எத்தனையோ ஆடவர்களைப் பார்த்திருக்கிறாள். அவர்களை இரண்டாம் தரம் பார்க்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியதே இல்லை. ஆனால் உமாசந்திரனை, அம்மா தன்னைக் கவனியாமல் இருக்கும்போது கதவின் துவாரம் வழியாக எட்டிப் பார்க்க ஏன் அவள் மனம் துடிக்க வேண்டு மென்று அவளுக்கே தெரியவில்லை. உமாசந்திரன் அப்படியொன்றும் அழகில் சிறந்தவனுமல்ல. ஏதோ பூர்வ ஜன்மத்தொடர்பு என்று சொல்வார்களே அதனால்தானோ என்னவோ? யார் கண்டார்கள்?

உமாசந்திரன் மறுபடியும் பார்வதியைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப் பட்டான். அதற்காகக் கணக்குப் பிள்ளையுடன் ஏதேதோ பேச்சுத்தொடுத்தான். "உங் நஞ்சை புஞ்சை எத்தனை ஏக்கரா?" என்று அவரை தான். எப்பொழுது ஜமாபந்தி வருகிறதென்று கேட் இப்படிப் பேச்சை வளர்த்தியதைக் கண்ட வரா "அடுத்த ஜமாபந்தியின்போது இங்கேயே வந்து வி இப்போது போகலாம், வா" என்று கூறியவண்ணம் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு கிளம்பினுன்.

உமாசந்திரனும், வராகசாமியும் வழி அம்மாவை எப்படிச் சரிக்கட்டுவது என்று ஒரே யோ யில் மூழ்கியவர்களாய் ஊரையடைந்தார்கள். உம ரனுக்கு எதைப் பார்த்தாலும் பார்வதி மாதிரிய தென்பட்டது. இராப்பகலாக, எப்படி பார்வதியை யாணம் செய்து கொள்வது என்று ஒரே யோஜனை தன் அம்மாவிடம் எப்படியாவது பார்வதியைத் தன கலியாணம் செய்து வைக்கும்படிப் பலமாகச் சி செய்யவேண்டும் என்று வராகசாமியிடம் ஒரேயடி கெஞ்சினுன். வராகசாமியும் முயற்சி செய்வதாக கொண்டான்.

ஒரு நாள் வராகசாமி லக்ஷியம்மாளிடம் வந்து பே கொடுத்துக்கொண்டே "அம்மாமி! நம்ம உமா வயஸாயிடுத்து பாருங்கோ. ஏதோ காலாகாலத்திலே பெண்ணைக் கட்டி போட்டா உங்களுக்கும் ஒத்தா காரியம் செஞ்சிண்டுகிடக்கும்" என்ருன். "நீதான் ஒரு பெண்ணுகப் பார்த்துச் சொல்லேன். நான் ஒருத்தரைப் போல் ஏழாயிரம் எண்ணுயிரம் கேட்கவில்லை. ஐயாயிரம் ரூபாய் கொடுத்தால் போதும். ஆடிக்கும் தீபாவளிக்கும் ஏதோ...."

"மாமி! அது மாதிரி நாலைந்து வரன்கள் இருக்கு. ஆனுல் எல்லாம் ரொம்பப் பெரிய இடங்கள்."

“இருந்தா இருக்கட்டுமே. நீ மகாராஜனுயிருப்பே. அதிலே ஏதாவது ஒண்ணு பார்த்து நீயே முடித்துவிடு.”

“முடித்துவிடுகிறேன். ஆனால் அவர்கள் ஒன்று சொல்கிறார்கள். அதான் யோசிக்கிறேன். பிள்ளையை அவர்கள் இன்னும் படிக்க வைக்கணுமாம். சீமைக்கு அனுப்பணுமாம்! தங்காத்திலேயே வைச்சுக்கணுமென்று சொல்லாமல் சொல்லுகிறார்கள்.”

இதைக்கேட்டதும் லக்ஷ்மி அம்மாளின் உற்சாகமெல்லாம் போய்விட்டது. அவள் சிறிது யோசனை செய்ய ஆரம்பித்தாள்.

“எப்படியாவது நம்ப உமா நல்ல அந்தஸ்திலிருந்தால் போதும். உங்களுக்கென்ன? சிவனே என்று காசியோ இராமேசுவரமோ போய்....”

“சரிதாண்டா, சரிதான். என் பிள்ளை சீமைக்குப் போகவேண்டாம், உத்தியோகமும் பண்ணவேண்டாம். நான் குடிக்கிற கஞ்சியை அவனும் குடித்துக்கொண்டிருந்தால் போதும். நமக்குத் தகுந்த இடமாத்தான் பார்க்கணும்.”

“ஆனால் அவன் கேட்கணுமே. திருவல்லிக்கேணியில் ஒரு பெரிய வக்கீலின் பெண் இருக்கிறாளாம். அவள் அவனோடு பள்ளிக்கூடத்தில் படித்தவளாம். அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போவதாகக் குதிக்கிறான். நானும் அவனிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டேன் கேட்கமாட்டேங்கறான்” என்று அளந்தான்.

லக்ஷிமி அம்மாள் “அப்பா! வராகசாமி! உனக்குக் கோடி புண்யமுண்டுடா. அவனை எப்படியாவது நல்ல வழிக்குக் கொண்டுவந்து நமக்கு அடங்கின ஒரு பெண்ணைகப் பார்த்துக் கலியாணம் பண்ணிக்கச் சொல்லுடா. நானும் ஏதாவது பெண் பார்க்கிறேன். உனக்கும் ஏதாவது தெரிஞ்ச பெண் இருந்தா பாரேன்” என்றாள்.

"நீங்கள் பேசாமல் இருங்கள். நான் ஒரு நல்லபெண் பார்த்து வைத்திருக்கிறேன். பெண், அழகு சொட்டும், குணமோ, தங்கக்கம்பி என்ருல் தங்கக்கம்பி. குலம், கோத்திரத்தைப்பற்றி குற்றம் குறை ஒன்றும் சொல்ல முடியாது. பணம் காசைப்பற்றி ஒன்றும் யோஜிக்காதேங்கோ. பணம், இன்று போகும், நாளை வரும். நல்ல பெண் கிடைக்காது. கலியாணம் செய்து வைக்கவேண்டியது என் பொறுப்பு. என்னல் முடிந்தவரைக்கும் ரொம்ப சிரமப் பட்டு அவன் மனதை மாற்றிப்பார்க்கிறேன். இந்த மாதக் கடைசியிலேயே கலியாணத்தை முடித்து விடலாம்" என்று கூறிக் கிளம்பினன்.

ஆனிமாதக் கடைசியிலேயே பார்வதிக்கும், உமாசந்திரனுக்கும் கலியாணம் இனிது முடிந்தது.

கல்யாணம் ஆன சில தினங்களிலேயே உமாசந்திரனுக்கு வேலை கிடைத்தது. பார்வதியின் அதிர்ஷ்டந்தான் வேலை ஆகியிருப்பதாக லக்ஷ்மியம்மாள் மனம் பூரிப்படைந்தாள். பார்வதியோ, தன்னுடைய கணவன் தன் அழகைப் பற்றிப் பெருமை கொள்வதைப்பற்றி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்திருந்தாள்.

உமாசந்திரன் பம்பாய் சென்று ஆறு மாதங்கள் முடிந்துவிட்டன. அவனுடைய அன்புக் கடிதங்களே பார்வதியைத் தன் கணவனின் பிரிவை ஒருவாறு சகிக்கச் செய்து வந்தன. ஆனல் சில நாட்களுக்கெல்லாம் பார்வதி பெரியம்மையினல் பீடிக்கப்பட்டுப் பிழைத்தது புனர் ஜன்மம் என்ருகிவிட்டது. அவளுக்கு இப்போது தன் கணவன் தன்னை ஏறெடுத்துப் பார்ப்பானே என்ற ஒரே கவலைதான். உடம்பெல்லாம் ஒரே அம்மைத் தழும்புகள். பார்ப்பதற்கே ஒரே அருவருப்பாய் இருந்தன. தன் அழகில் ஈடுபட்டு, மாயவிழிகளில் மயங்கி, மோஹனப் புன்னகையினல் புளகாங்கிதமடைந்த தன் ஆருயிர் நாயகன் முகத்தில் இந்த அவலட்சண ஸ்வரூபத்தை எப்படி வெளிப்

படுத்துவது என்ற ஒரே கவலையினால் அப்படியே துரும்பாக இளைத்து விட்டாள். இப்படியே நாட்கள் சென்றன.

ஒரு நாள் உமாசந்திரனிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதம் வந்தது:—

பம்பாய்

பிரியே,

நான் இத்தனை நாள் உன்னிடம் மறைத்து வைத்திருந்த விஷயத்தைச் சொல்லாததற்காக மன்னிக்கவும். நிர்ப்பந்தத்தினால்தான் நான் அதை உன்னிடம் சொல்லியாகவேண்டியிருக்கிறது என்பதை எண்ணும்போது என் மனம் எவ்வளவு கஷ்டப்படுகிறது, தெரியுமா? நான் இங்கு ஒரு துறைமுக ஆபீஸில் வேலை செய்கிறேன் என்பது உனக்குத் தெரியும். இங்கே இரண்டு வாரத்துக்கு முந்தி ஏற்பட்ட வெடி விபத்தைப்பற்றி உனக்கு எழுதியிருந்தது ஞாபகமிருக்கும். நீ அனாவசியமாகக் கவலைப்படப் போகிறாயே என்று எனக்கு ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை என்று அப்பொழுது எழுதியிருந்தேன். ஆனால் ஒரு இரும்புச் சட்டம் பறந்துவந்து என் கையில் அடிபட்டிருந்தது. அதன் பலனாய் இடது கை ஆபரேஷன் செய்யும்படியாயிற்று. முழங்கைக்குக் கீழ் வெட்டி எடுத்துவிட்டார்கள்.

அங்கஹீனனான நான் மீண்டும் இங்கு வேலையில் இருக்கமுடியும் என்று தோன்றவில்லை. எனக்குக் கை போனதில்கூட வருத்தமில்லை. எங்கு ஸர்வாங்க ஸுந்தரியான நீ என்னை உதாசீனம் செய்வாயோ என்ற ஒரே ஏக்கம்தான் என்னை வாட்டுகின்றது. எல்லாவற்றையும் உனக்கே அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருக்கும் நான் ஒரு முடவன் என்பதற்காக என்னை நீ வெறுக்கமாட்டாய் என நினைக்கிறேன். ஆஹா! பால்வடியும் வதனத்தையும் திவ்ய தேஜஸ்ஸையும், உன் குறுநகையையும் காண இதோ கிளம்பிவிட்டேன். என்னை ஏற்றுக்கொள்.

இப்படிக்கு,

அன்புமிக்க, உமாசந்திரன்.

நூற்றில் ஒன்று

அனந்தன்

[சென்ற மாதம் நூறு நபர்கள் மோட்டார் விபத்துக்களுக்கு ஆளாயினர். ஆனால் ஒரே ஒரு ஸ்திரீமட்டுந்தான் இறந்துபோனாள். விபத்துக்கள் நூற்றுக்கு ஒரு விகிதமே இருப்பது பாராட்டத்தக்கது.]

—பத்திரிகைச் செய்தி.

துரைக்கண்ணு வீட்டை விட்டுக் கிளம்பியபோது பொச, பொச என்று தூற ஆரம்பித்தது. அவள் ஒருதரம் வானத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு "மழை வலுக்காது போலிருக்கிறது" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். அப்பொழுது வீட்டுக்குள்ளிருந்து ஏதோ சப்தம் கேட்பதுபோலத் தோன்றவே, சும்மா சாத்தியிருந்த கதவைச் சப்தப்படாமல் திறந்து கூடத்துக்கு வந்து எட்டிப் பார்த்தாள். "தங்கம் தூங்குகிறது. எழுந்திருப்பதற்குள் ஓடி வந்து விடலாம்" என்று மறுபடியும் கிளம்பினாள்.

அவள் தெருவில் வெகு வேகமாகச் சென்றாள். என்னடா, இப்படி வெகு வேகமாக நடக்கிறோமே என்று நினைத்துக்கொண்டபோது வெட்கம் வந்து கால்கள் பின்னின. மெதுவாக நடக்கலானாள்; ஆனால் குழந்தையின் நினைவு வரவே மறுபடியும் வேகமாக நடந்துசென்றாள். மழையோ, வலுக்க ஆரம்பித்தது.

அவள் அடுத்த தெருவில், ஒரு பால் 'டெப்போ'வில் பால் வாங்கிக்கொண்டு வீடு திரும்பினாள். அப்பொழுது அவள் கணவன் செல்வராஜு ஆலையில் வேலை செய்து விட்டு வந்துகொண்டிருந்தவன், துரைக்கண்ணைப் பார்த்ததும் ஆச்சர்யத்துடன் "இந்த மழையில் எங்கே வந்தாய்?" என்று கேட்டான்.

'மாடு உதைச்சுடுத்தாம். பால்காரன், பால் கிடையாது என்று சொல்லிவிட்டான். இராவுக்குப் பால் இல்லாம என்ன பண்ணுகிறது? வாங்கிட்டுப் போக வந்தேன்."

"தம்பி"

"நல்லாத் தூங்கறது."

"வீட்டைப் பூட்டிக்கிட்டு வந்தயா?"

" இல்லே. சும்மாச் சாத்திக்கிட்டு வந்தேன், போகலாம் வாங்க. குழந்தை முழிச்சிக்கிட்டிருந்தாலும் முழிச்சிக்கிட்டிருக்கும்" என்று துரிதமாக நடக்கலானுள்.

" தம்பி நல்ல விளேயாடிச்சா!" என்று செல்வராஜு விசாரித்தான்.

" எப்போ பார்த்தாலும், சிரிப்பும் விளேயாட்டுந்தான். இன்னிக்குப் பேசித்துங்க" என்று துரைக்கண்ணு சொல்லியபோது அவள் முகத்தில் பெருமை கூத்தாடிற்று.

" பேசித்தா! என்ன சொல்லித்து?" என்று ஆவலுடன் கேட்டான்.

" ஆமாம்! து....து....து....து....சொல்லித்து."

" உன் பேரைத்தான் சொல்லியிருக்கும்" என்று செல்வராஜு சிரித்துக்கொண்டே கூறினுன்.

" அப்புறம் செ. செனு கூட கூப்பிட்டது" என்ருள். அவள் இப்படி சொன்னது பொய். தன் கணவனைச் சந்தோஷப் படுத்த வேண்டுமென்று அவ்விதம் கூறினுள்.

" கத்தித்தா ?"

" வாயைத் திறக்கல்லே."

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டே போய்க் கொண்டிருந்த போது பின்னுல் ஒரு பெரிய இராணுவலாரி வரும் சப்தம் கேட்டது. அது தங்கள் சமீபம் வந்ததால் செல்வராஜு, துரைக்கண்ணைத் தன்முன் தள்ளிக்கொண்டு நடை பாதையையும் விட்டு அப்பால் விரைந்து சென்ருன்.

மறு நிமிடம் லாரி பாதைமேல் ஏறும் சப்தமும் லாரி ஓட்டுகிறவன் 'பிரேக்கை' போட்டு நிறுத்தும் சப்தமும் கேட்டது. அவ்வளவுதான் செல்வராஜுக்குத் தெரியும்.

பின்னர் அவன் கண்ணை விழித்துக் கொண்ட போது ஒரு பெரிய மோட்டார் என்ஜினுக்கு அடியில் படுத்துக் கொண்டிருப்பது போல் தோன்றிற்று. இரண்டு பேர் அவனை மெதுவாகப் பிடித்து இழுத்து வெளியிலே

கொண்டு வந்தனர். அப்பொழுது அவனுக்குப் பிரக்ஞை வந்தது. "என் வீட்டுக்காரியும் அங்கே அகப்பட்டுக் கொண்டிருக்கிருள்" என்று புலம்பினுன்.

அவளேயும் சிறிது நேரத்துக் கெல்லாம் வெளியில் இழுத்து வந்தனர். செல்வராஜுக்குக் காயம் ஒன்றும் ஏற்படவில்லே. ஆனுல் துரைக்கண்ணுக்கு மண்டையில் பலமாக அடிபட்டிருந்தது. ஆனுல் சுவாசம் வந்து கொண்டிருந்தது. அவள் கையால் பால் பாட்டிலே இன்னும் கெட்டியாக பிடித்துக்கொண்டிருந்தாள்.

"பாவம்! ரொம்ப சின்னப் பெண்" என்று கூட்டத்தில் ஒருவர் சொன்னுர்.

"முகத்தில் சுளே சொட்டுகிறதே" என்ருர் இன்ெருருவர்.

"கையிலே பால் வைத்திருக்காளே, குழந்தைக்குப் போலிருக்கு. இந்த மோட்டார் வண்டிகள் பண்ணுகிற அநியாய முண்டோனே!" என்று ஒரு கிழவர் கூறினுர்.

போலிஸ்காரர்கள் எல்லாரையும் விரட்டி விட்டு, அப்பொழுது அங்கே வந்த ஒரு ஆஸ்பத்திரி வண்டியில் விபத்துக் காளான இருவரையும் ஏற்றி அனுப்பினர்.

வண்டி போகும்போது செல்வராஜு தன் மனேவியின் முகத்தையே பார்த்து அழுதுகொண்டிருந்தான். ஆனுல், அவள் மூச்சு விட்டுக்கொண்டிருந்ததால் எப்படியும் பிழைத்துவிடுவாள் என்ற ஒரு நம்பிக்கை.

"துரை! நான் கூப்பிடுகிறது கேட்கிறதா! நான்தான் செல்லம். துரை! கண்ணே முழிச்சுப் பாரேன்" என்ருன்.

துரைக்கண்ணு, கண்ணே விழித்துப் பார்த்தாள். "தம்பிக்குப் பால் கொடுக்கப் பொழுதாச்சு. வீட்டுக்கு சீக்கிரம் போய்ச் சேர்ந்து..." என்று அரைகுறையாகப் பேசி முடித்தாள். அதற்குள் அவளுக்கு மயக்கம் வந்துவிட்டது.

வண்டி வைத்தியசாலேக்குப் போவதற்குள், துரைக்கண்ணு அதிலேயே இறந்துவிட்டாள்.

ஆஸ்பத்திரியில் செல்வராஜு அழவில்லை. அவன் அங்கே, அதிகாரிகள் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துவிட்டுக் கிளம்பினுன். அப்பொழுதுதான் அவனுக்குக் குழந்தையின் ஞாபகம் வந்தது. உடனே உள்ளே போய் பால் பாட்டிலை எடுத்துக்கொண்டு ஒரு வண்டி ஏறி வீட்டுக்குச் சென்ருன்.

வீட்டுக் கதவைத் திறந்தான். தம்பி முழித்துக் கொண்டு விளையாடிக்கொண்டிருந்தான். வயது ஒன்றிருக்கும். அவன் செல்வராஜுவைக் கண்டதும், "ப்பா, ப்பா" என்ருன்.

செல்வராஜுவுக்குத் துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. ஆனல் அதை அடக்கிகொண்டு உள்ளே போய்ப்பாலைக் காய்ச்சி எடுத்துக்கொண்டு வந்து அதை ஆற வைத்தான்.

பிறகு குழந்தை மீதிருந்த அழுக்கடைந்த சட்டையைக் கழற்றிவிட்டு உடம்பைத் துடைத்து விட்டான். வழக்கத்துக்கு விரோதமாக தன் தாய்க்குப் பதிலாக தகப்பனர் இந்த வேலைகளை எல்லாம் செய்வதைக் கண்டு ஆச்சர்யப்படுவது போல குழந்தை அவனைப் பார்த்து விழித்தது.

பிறகு மடியில் போட்டுக்கொண்டு பாலைக் கொடுத்தான். குழந்தை திருப்தியுடன் பாலைச் சாப்பிட்டது. அந்தப் பால் வாங்கப் போனதினுல் தானே துரைக்கண்ணு உயிரிழந்தாள் என்று நினைத்தபோது, அவன் அதுவரை அடக்கி வைத்திருந்த துக்க மெல்லாம் பீறிக் கொண்டு வந்தது. துரைக்கண்ணுவை உரித்து வைத்தது போல் இருந்த தன் குழந்தையைப் பார்த்த போது, துக்கந் தாங்க முடியாமல் அவன் தேம்பித் தேம்பி அழலானுன்.

"தம்பி! அம்மா போய் விட்டாளேடா! உன்னை யாருடா பார்த்துக் கொள்கிறது! என்று சொன்னபோது கண்களிலிருந்து நீர் வழிந்து தம்பிமேல் சொட்டின.

தன் தந்தை அழுது அதுவரை பார்த்திராத அந்தக் குழந்தை அதை வேடிக்கையாக நினைத்துச் சிரித்தது.

சிறு சேமிப்புத் திட்டம்

பதுக்கி வைக்கவோ அளவிற்கு மீறி செலவு செய்யவோ வேண்டாமென்றும்

எதிர்காலத்தில்

தனக்காகவும் தன் குழந்தைகளுக்காகவும்

மிச்சம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறது.

உங்கள் பணத்தை

பெறுக்குகிறது

ஒவ்வொரு	நீங்கள் பெறுவது
ரூ. 10-க்கும்	ரூ. 15
,, 50	,, 75
,, 100	,, 150
,, 500	,, 750
,, 1000	,, 1500
,, 5000	,, 7500

12 வருஷங்களுக்குப் பிறகு

இதற்கு வருமான வரி கிடையாது.

நாஷனல் ஸேவிங்ஸ் - - - - - - ஸர்ட்டிபிகேட்டுகளை

வாங்குங்கள்

கிடைக்குமிடம்:

அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள். தபால் ஆபீஸ்கள், ஸேவிங்ஸ் பீரோக்கள்.

வருஷத்திற்கு **100-க்கு 4 - 1/6** வட்டி கிடைக்கும்.

* ஒவ்வொருவரும் ரூ. 5000-க்கு அதிகப்படாமல் சர்ட்டிபிகேட்டுகள் வாங்கலாம்.

இன்றே செய்யவேண்டியது

ரொம்பவும் திடகாத்திரமா யுள்ளவர்களில் கூட இன்றைக்கு இருப்பாரை நாளைக்குக் காணோம். அது ஒன்றே நீங்கள் இன்ஷ்யூர் செய்ய வேண்டிய அவசியத்திற்குப் போதுமானது.

'தலை விதிபோல்' என்று இந்த முக்கிய விஷயத்தில், தள்ளி போட்டுக் கொண்டு போவதில் என்ன லாபம்? நாள் ஆக ஆக, நீங்கள் இன்ஷ்யூர் செய்துகொள்ள முடியாமலே போய்விடலாம். அது நீங்கள் உடனே செய்யவேண்டிய காரியம்.

யுனைடெட் இந்தியா லைப்
அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்ப்ளனேட் — மதராஸ்

இந்தியா பூராவும் பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் உண்டு

Cover Printed at P. A. S. Press, Post Box 349, Mount Road, Madras



தயாரிப்பவர் : எம். கே. கிருஷ்ண செட்டி
அசோகா பாக்டரி - கோயமுத்தூர்